விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 27 ஞாயிற்றுக்கிழமை (10.05.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 142

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# சுதந்திரக் கட்சியில் இருந்து அரசியலுக்கு மீளவருவேன்

## மக்கள் ஆதரவுடனென மகிந்த அறிவிப்பு



(கொழும்பு)

தனது அரசியல் பயணம் அஸ்தமிக்கப் போவதில்லை என தெரிவிக்கும் வகையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தான் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மேடையில் விரைவில் தோன்றவுள்ளதாக அறிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## மைத்திரி, மோடி கமரூனுக்கு வாழ்த்து

(லண்டன்)

பிரித்தானிய பிரதமராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள டேவிட் கமரூனுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

அத்துடன், பிரித்தானியாவுடன் இலங்கை மிக நெருக்கமான உறவு களை வைத்

16 ஆம் பக்கம் பார்க்க....

## எறும்பாகிவிட்டார் மகிந்த – சரத்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஜனவரி மாதம் 08 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மக்களால் எட்டி உதைக் கப்பட்டார் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நேற்று அம்பலாங்கொட நகர மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்

16 ஆம் பக்கம் பார்க்க....

### காணாமல் போனோர் தொடர்பான

## சர்வதேச நிபுணர் குழுவின் அறிக்கை ஓகஸ்டில் வெளியாகும்!

(கொழும்பு)

காணாமல் போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்கு என நியமிக்கப்பட்ட சர்வதேச நிபுணர்கள் குழு தனது அறிக்கையை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வெளியிடும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த சர்வதேச நிபுணர்கள் குழு இதற்கான

15 ஆம் பக்கம் பார்க்க....

## பிரான்பற்று காளி கோவிலில் 113 ஆடுகள் நேற்றுப் பலி

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேசத்திலுள்ள பிரான்பற்று, காளி அம்மன் ஆலய வருடாந்த வேள்வி நேற்றுக் காலை நடைபெற்றபோது 113 ஆடுகள் பலியிடப்பட்டன.

சுகாதார விதிமுறைகள், சட்ட திட்டங்களுக்கு அமைவாக இவ் ஆடுகள் பலியிடப்பட்டதாக ஆலய தரப்பினர் தெரிவித்தனர்.

சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக கடாக்களை வெட்டும் மூவரும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், ஆலய வீதியில் இதற்கென அமைக் கப்பட்ட

15 ஆம் பக்கம் பார்க்க....

## உள்ளே...




## தமிழ் இனப்படுகொலை வாரம் மே-11 தொடக்கம் மே-18 வரை

(யாழ்ப்பாணம்)

தமிழ் இனப்படுகொலை வாரமாக நாளை முதல் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபையின் உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம், இவ்வாரத்தில் கொல்லப்பட்ட எமது மக்களுக்காக அனைவரும் ஒன்று திரண்டு அஞ்சலி செலுத்த முன்வர வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த இறுதி யுத்தத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக அறிக்கையில் எழுபது ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக குறிப்பிடப் பட்டுள்ளது.

இதைப்போல் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தமிழ் இனப் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுள் ளார்கள்.

இந்த படுகொலையை ஒரு நினைவு தினமாக மே பதினெட்டை அனுஷ்டித்து வந்த நாங்கள் மே பதினொன்று முதல் மே பதினெட்டு வரையான காலப்பகுதியை தமிழினப்படுகொலை வாரம் என அனுஷ் டிப்பதற்கு

15 ஆம் பக்கம் பார்க்க....

## மு.பிரதி அதிபர் அருளானந்தம் வாகன விபத்தில் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை 1-ம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் கனகசபாபதி

16 ஆம் பக்கம் பார்க்க....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உள்ளூராட்சி சபை கலைக்கப்பட்டு ஊழல், மோசடிகள் ஆராயப்படும்

## 15-ம் திகதி சபை கலைக்கப்படும் என்கிறார் அமைச்சர் ஜோன்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளை இம்மாதம் 15 ஆம் திகதியுடன் கலைக்க தீர்மானித்துள்ளதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானத்தை பெறும் குடும்பங்களை சேர்ந்த மாணவர்களுக்கு புத்தகங்களை வழங்குவதற்காக வத்தளையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்ட பின்னர், அவற்றில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் குறித்து ஆராய விசேட குழு நியமிக்கப்படும்.

உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்தது. நாட்டிற்குள் காணப்படும் புதிய அரசியல் சூழ்நிலைகள் காரணமாக உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்படுவது ஒத்திவைக் கப் பட்டதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித் துள்ளார்.

நாட்டின் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகிறது.

உள்ளூராட்சி சபைகளை உடனடியாக கலைக்க வேண்டாம் என சுதந்திரக் கட்சி யின் ஒருசாரார் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சிக்கே அதிகமான ஆதரவு இருப்பதாக சுதந்திரக் கட்சியினர் தெரிவித்து வருவதுடன் உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டால், ஐக்கிய தேசியக் கட்சி அவற்றில் பெரும்பா லான சபைகளை கைப்பற்றும் எனவும் கூறியுள்ளனர்.

உள்ளூராட்சி சபைகளை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றினால், எதிர்வரும் பொதுத தேர்தலில் அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றிக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எது எப்படி இருந்த போதிலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மீண்டும் அரசியலுக்குள் வரும் முயற்சிகளுக்கான அழுத்தங்களை உள்ளூராட்சி சபைகளில் உள்ள சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகள் ஊடாகவே மேற்கொண்டு வருகிறார்.

இது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அரசியல் ரீதியான அழுத்தங்களை ஏற்படுத்தி வருகிறது. இதனால், உள்ளூராட்சி சபைகளை கலைக்கும் தீர்மானத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இருப்பதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும். அவர் தனக்கு ஆதரவான தரப்பினர் ஊடாக அழுத்தங்களை கொடுத்து வருவதுடன் கூட்டங்களையும் நடத்தி வருகிறார்.

மகிந்த மீண்டும் அரசியலுக்குள் வந்து பிரதமராக பதவியேற்றால், அது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கே பெரும் ஆபத்தாகவும் பாதிப்பதாகவும் அமையும் என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (செ-11)

## நினைவுகூரல் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நினைவுகூரலுக்கான உரிமை என்னும் தலைப்பில், தமிழ் சிவில் சமூக அமையத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு, யாழ்.பொதுநூலகத்தில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் இதய சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ப.லக்ஸ்மன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மனித உரிமைச் செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோ, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளரும் சட்டத்தரணியுமான பவானி பொன்சேகா, கிழக்குப் பல்கலைக்கழக அரசியல்துறை வருகை விரிவுரையாளர் எழில்ராஜன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் கு.குருபரன் ஆகியோர் பேச்சாளர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (செ-4)

## நிதியமைச்சர் மீது நம்பிக்கையில்லா பிரேரணை விரைவில்!

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதனை முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். இதற்கான தயாரிப்புக்கள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பிரேரணையில் இதுவரை 90 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

அமெரிக்காவில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட ராஜ் ராஜரட்ணத்துடன் நிதித்தொடர்புகளை கொண்டிருந்தமை, மத்திய வங்கி முறிகள் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்ட அர்ஜூன் மஹேந்திரனை மீண்டும் மத்திய வங்கி ஆளுநராக நியமித்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் ரவி கருணாநாயக்க மீது சுமத்தப்பட்டுள்ளது. (செ-11)


### தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள்

☛ CD, VCD க்களை அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(த-9-5)

### பணிநிலை வேண்டுகை




நேர்முகத்தேர்வு
11.05.2015 முதல் 16.05.2015 வரை
காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை

(சி-929)

**கரிகணன்**
வடக்கின் அச்சகதாரர்
இல, 681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: +94 21 222 2717/8, +94 21 222 2737

### பிரிவுபசார வைபவம்



**திரு.ம.பற்றிக் டிறஞ்சன்**
(முன்னைநாள் பிரதி ஆணையாளர் வட மாகாணம் கமநல அபிவிருத்தித் திணைக்களம்)

காலம்: இன்று (10.05.2015) சனிக்கிழமை
இடம்: துர்க்கா மணிமண்டபம், நல்லூர், யாழ்ப்பாணம்.
நேரம்: முற்பகல் 9.30 மணி

யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் உதவி ஆணையாளராகவும், பிரதி ஆணையாளராகவும், வட மாகாண கமநல அபிவிருத்தித் திணைக்கள பிரதி ஆணையாளராகவும் சிறப்புற சேவையாற்றி வட மாகாண, விவசாய அமைச்சின் செயலாளராக பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ள திரு.ம.பற்றிக் டிறஞ்சன் அவர்களுக்கான பிரிவுபசார நிகழ்வில் அனைத்து விவசாயப் பெருமக்களும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கமக்கார அமைப்புக்களின் அதிகார சபை
யாழ்.மாவட்டம்

(449)

### வேலையாள் தேவை

ஹாட்வெயார் மற்றும் வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு வேலையாள் தேவை.
(முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு:-0778933418

(447)


### மரண அறிவித்தல்

**கனகசபாபதி அருளானந்தம்**
(இளைப்பாறிய பிரதி அதிபர் ஹாட்லிக் கல்லூரி)



பருத்தித்துறை புலோலி மேற்கு, திருநாவலூரைப் பிறப்பிடமாகவும், புலோலி மேற்கு, தம்பசிட்டியை வதிவிடமாகவும் கொண்ட கனகசபாபதி அருளானந்தம் (இளைப்பாறிய பிரதி அதிபர்; ஹாட்லிக் கல்லூரி-பிரபல கணித ஆசான்) 09.05.2015 நேற்று அகால மரணமானார்.


அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதி-நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வ. வேலுப்பிள்ளை மற்றும் நவமணி தம்பதியினரின் மருமகனும், வசந்தாதேவி (ஆசிரியை-மெ.மி.உ.பெ பாடசாலை)யின் அன்புக் கணவரும், அனோஜாவின் தந்தையும், சிவஞானசெல்வம் (பிரதி முகாமையாளர் ஓய்வூதியர்-மக்கள் வங்கி), செல்வநாயகம் (லண்டன்), சதானந்தம் (லண்டன்), சிவானந்தம் (லண்டன்), செல்வராணி ஆகியோரின் சகோதரனும், அருந்தவராஜா (பொறியியலாளர்-கனடா), ஜெயராசா (பல் வைத்திய நிபுணரும், பதில் மருத்துவ அத்தியட்சகர்-ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை), தவராசா (கனடா), சிவராமன் (பொறியியலாளர்), வசந்தி (ஆசிரியை-வட இந்து மகளிர் கல்லூரி), சிவசக்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11.05.2015 திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர் மடம் புலோலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

146, தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை.

தகவல்:-குடும்பத்தினர்
021 226 4230

(சி-943)



### நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறிவித்தல்

**2015 உயர்திருவிழாக் காலத்தில் தற்காலிக கடைகள் அமைத்தல், உடை தேங்காய் பெற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றுக்கான ஏலம் கூறுதல்**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் வருடாந்த உயர்திருவிழா 2015.06.17 ஆம் திகதியன்று ஆரம்பமாகி 2015.07.02ஆம் திகதியன்று நிறைவு பெறும். இக்காலப்பகுதியில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்குரிய-நிர்வாகத்தினால் சுட்டிக்காட்டப்படும் இடங்களுக்கான பகிரங்க ஏலம் கூறுதலும், உடை தேங்காய்க்கான பகிரங்க ஏலம் கூறுதலும் 2015.05.16ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆலய வளாகத்தில் நடைபெறும். ஏலத்தில் பங்குகொள்ள விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது சமுகமளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**குறிப்பு:-**

01.குளிர்பானக் கடைகள் நடாத்துபவர்கள் முறையான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

02.சுகாதாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

03.ஏலத்தில் முதல்நிலை பெற்றவர்கள் அன்றைய தினமே ஏலத்தொகையின் மூன்றில் ஒரு (1/3) பங்கினைச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மிகுதித் தொகையினை பத்தாவது நாட் திருவிழாவுக்கு முன்னதாகச் செலுத்தி முடிக்க வேண்டும்.

**ப.க.பரமலிங்கம்**
**செயலாளர்**
**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்**

(சி-940)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுநீரகத் தொகுதி கோளாறு அதிகரிப்பு

மொனராகலை மாவட்டத்தில் கரும்பு உற்பத்தியில் ஈடுபடுகின்ற விவசாயிகள் மத்தியிலும், சிறுநீரக தொகுதி கோளாறு அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சன்ன ஜயசுமன இதனைத் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் வவுனியா, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் இந்த நோய் அதிகமாக காணப்படுகிறது.

தற்போது அநுராதபுரம், பொலன்றுவை மற்றும் குருணாகலை போன்ற மாவட்டங்களில் இந்த நோய் தீவிரமாக காணப்படுகின்ற நிலையில், அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதற்கு காரணமாக அமைவதாக கூறப்படுகின்ற களைகொல்லி விநியோகத்துக்கும் இந்த மாவட்டங்களில் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போது முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை போன்ற மாவட்டங்களிலும் இந்த நோய் பரவ ஆரம்பித்துள்ளது.

இந்த நோயை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், இன்னும் வினைத்திறனான முன்னேற்றங்கள் அவதானிக்க முடியவில்லை என்றும் கலாநிதி சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். (இ-5)

# ஊடகவியலாளர்களுக்கு எதிரான மோசமான நாடுகளில் இலங்கை!

(கொழும்பு)

**ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் கடப்பாட்டில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் மோசமான நிலையில் உள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

சர்வதேச ஊடகவியலாளர்களுக்கான சம்மேளனம் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது. 2014-15ஆம் ஆண்டுக்கான சம்மேளனத்தின் அறிக்கையில் இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் ஊடகவியலாளர்களின் இறைமை மற்றும் அவர்கள் கடத்தல், தாக்குதல் கொலை செய்யப்படுதல் என்பவற்றில் இருந்து காப்பாற்றப்படுவதற்கான உறுதிப்பாட்டுக்கான முன்னெடுப்புக்கள் அவசியம் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதற்காக ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்களை நடத்துகின்றவர்கள் சட்டத்துக்கு முன் நிறுத்தப்படவேண்டும் என்றும் அந்த சம்மேளனம் கேட்டுள்ளது.

சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் சர்வதேசத்தில் 100 நாடுகளில் 6இலட்சம் உறுப்பினர்களை கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சஜின்வாஸ் குணவர்த்தனவிற்கு புலனாய்வுத் திணைக்களம் அழைப்பு



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தனவை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை வாக்கு மூலம் ஒன்று பெற்றுக்கொள்வதற்காக இவ்வாறு தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக சஜின்வாஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தின் சில வாகனங்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

## அடக்குமுறைகளுக்கு எதிராக ஜெனீவா செல்கிறார் பந்துல

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகளுக்கு எதிராக ஜெனீவாவிலுள்ள நாடாளுமன்ற ஒன்றியத்திடம் முறைப்பாடொன்றை செய்யவுள்ளதாக முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரச பொலிஸ் என்ற எண்ணக்கருவின் கீழ், அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இம் முறைப்பாட்டை முன்வைக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் பொலிஸ் அரசாங்கம் தொடர்பில் சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்துவது மிக முக்கியமானதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் பிரதிநிதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே குறித்த முறைப்பாட்டை செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மக்களின் பிரதிநிதிகளான எங்களுக்கு சர்வதேச பாதுகாப்பு இருக்கின்றது என்பதை இந்த பொலிஸ் அரசாங்கத்திற்கு தெளிவுபடுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## முன்னாள் போராளி கைது

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர் ஒருவரை நேற்று கைது செய்துள்ளதாக காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நாகமணி ஜெகதீஸ்வரன் (வயது 34) என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர், மத்திய கிழக்கு நாட்டுக்கு சென்றுவிட்டு திரும்பிவந்து கொக்கட்டிச்சோலையில் தலைமறைவாகி வசித்து வந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2003ஆம் ஆண்டு ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த இரண்டு அங்கத்தவர்களை ஆரையம்பதியில் வைத்து துப்பாக்கியால் சுட்டு கொலை செய்தமை, மேலும் எட்டுப்பேரை காயப்படுத்தியமை போன்ற முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும், நீதிமன்றில் முன்னிறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

வாழ்க்கையில் வெறுப்பா?
பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது
(C-478)
கைகொடுக்கும் நண்பர்கள்
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776

நிரந்தர தொழில்வாய்ப்பு
எதிர்காலத்தில் நிரந்தர தொழில் ஒன்றினை பெற உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். சம்பளம் 18000/=,50000/= (தொழில் அடிப்படையில்) கொழும்பை அண்மித்த பிரதேசங்களில். பிரதான தொழிற்சாலைகள் (ஜேம்/சொக்லெட்/யோகெட்/ பிளாஸ்டிக்/ காமென்ட்....) தனியார் துறைமுகம், விமான நிலையம், வாகன சாரதிகள், இலக்ரீசன், வெல்டர், தச்சு,பெயின்டர், மேசன் ( கம்பிபாஸ்,செடலிங்) போன்ற பல வெற்றிடங்கள். 18-55 வயது ஆண், பெண் தேவை. உணவு, தங்குமிடம் ஒழுங்கு செய்து தரப்படும். நண்பர்களாகவும் விரும்பத்தக்கது.
தொடர்புக்கு: 077 111 6770

தேவை
அனுபவம் உள்ள, அற்ற 18-50 வயது ஆண்,பெண் தேவை. கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/டொபி/பிஸ்கட்/ கோடியல்/பால்மா/சொக்லெட்/PVC/காமென்ட் போன்ற பல தொழிற்சாலைகளில் உற்பத்தி,லேபல்,பொதியிடல் ,களஞ்சிம், Loading, Unloading போன்றவற்றில் பல வெற்றிடங்கள். சம்பளம் 18000/=,39000/= பெறலாம். உணவு,தங்குமிடம் குறைந்த விலைகளில் நண்பர்கள்,குழுக்கள், தம்பதியினர் ஒரே தொழிற்சாலையில் வருகை தரும் நாளிலே வேலை.
தொடர்புக்கு-077 843 0179

## இராசி பலன்

10.05.2015
(சித்திரை 27, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
சப்தமி பின்னிரவு 3.29 மணிவரை
உத்தராடம் முற்பகல் 10.44 மணிவரை
இராகுகாலம் 4.24-5.54 மணிவரை
சுபநேரம் 8.54-10.24 மணிவரை
நடேசர் அபிஷேகம்

வளவன்

**மீனம்:** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், மகிழ்ச்சி தரும் தொலைபேசி அழைப்புகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உறவினர்களின் வருகையுண்டு.

**மேடம்:** தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்:** மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, ரோக பயமுண்டு.

**மிதுனம்:** மற்றவர்களின் மனநிலையை மறந்து செயற்படுவது நல்லது, திடீர் செலவுகள் ஏற்படலாம், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை ஏற்படலாம்.

**கும்பம்:** சிறிய வேலையொன்றுக்காக பலமுறை அலைய நேரிடலாம், இறைவழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள், சுப செலவுகள் கூடும் நாள்.

**கடகம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், உறவினர்களின் வருகையுண்டு, ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்:** கொடுக்கல் - வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்:** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், போட்டிகள் மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், செய்தொழில் மேன்மையுண்டு.

**தனுசு:** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்:** நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள், தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**துலாம்:** வீட்டை சிரமைப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

**கன்னி:** பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானத்தை அதிகரிக்க புதிய வழியைப் கையாள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்சாட்டுக்களை நிரூபித்தால் அரசியலை விட்டு விலகத் தயார்

## நாமல் எம்.பி.தெரிவிப்பு

தனக்கும்.தனது குடும்பத்தாருக்கும் வெளிநாடுகளில் 18 பில்லியன் அமெரிக்க டொலர் சொத்து உள்ளதென்பதை சாட்சிய ங்களுடன் நிரூபித்தால் தான் அரசியலை விட்டு ஒதுங்கிகொள்வதாக பாராளுமன்ற உறு ப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு 18 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதி யான சொத்துக்கள் வெளிநாட்டு வங்கிகளி லும்,நிறுவனங்களிலும் முதலீடு செய்யப்பட் டுள்ளதாக, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அதனை தொடர்ந்தே நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் வலைத்தளத்தில் இவ்வாறு தெரிவித்தார்.இது குறித்து தன்னிடம்வெளிநா ட்டு புலனாய்வுச் சேவைகள் தகவல் வழங்கி யதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

மங்கள சமரவீரவின் கருத்திற்கு முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் பதிலளிக்கும் வகையில் ஊடகங் களுக்கு அறிக்கை ஒன்று அனுப்பிவைத்திரு ந்தார். தனது பிள்ளைகளுக்கோ அல்லது சகோ தரர்களுக்கோ இரகசிய வங்கி கணக்குகள் எதுவும் கிடையாதென அவர் குறித்த அறிக்கையில் தெரிவித்திருந்தார்.(இ-5)

## எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம்?

நாட்டில் எரிபொருள்க்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட் டுள்ளது.கடந்த ஜனவரி மாதம் 20ஆம் திகதி முதல் புதிய அரசாங்கம் எரிபொரு ட்களின் விலைகளை குறைத்திருந்தது.

இந்த தீர்மானம் காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பாரியளவில் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளது.. எரிபொ ருளை கொள்வனவு செய்வதற்கு போதியளவு நிதி வசதிகள் இல்லாத நிலைமை பெற்றோ லியக் கூட்டுத் தாபனத்திற்கு ஏற்பட்டுள்ளது. இதனால் எதிர்வரும் வாரமளவில் பாரியள வில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும்.

ஐந்து நாட்களுக்கு போதுமானளவு எரிபொருட்களே இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன களஞ்சியத்தில் காணப் படுகின்றது.நாள்தோறும் இலங்கையில் பொதுமக்கள் இரண்டாயிரம் மெற்றிக் தொன் எரிபொருளை நாள்தோறும் நுகர்கி ன்றனர்.ஜனவரி மாதம் முதல் இதுவரை யில் ஆறு பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள் ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# சிறைக்குள்ளும் செல்பி

நீதிமன்றத்தின் சிறைக் கூண்டில் இருந்த வாறு மேல் மாகாண சபை முதல மைச்சர் பிரசன்ன ரணதுங்க உள்ளிட்டோர் நேற்று முன்தினம் செல்பி எடுத்துக் கொண்டனர்.

அவர்கள் எடுத்துக் கொண்ட செல்பி புகைப்படங்கள் இணையத்தளம் ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளது. நீதிமன்ற தடையுத்த ரவை மீறி இலஞ்சம் மற்றும் ஊழல் விசா ரணை ஆணைக் குழுவிற்கு எதிரில் ஆர்ப்பா ட்டத் தில் ஈடுபட்ட பிக்குகள், நாடாளுமன்ற உறுப்பி னர்கள் உட்பட 27 பேர் நேற்று முன்தினம் கொழு ம்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு இவர் கள் மீது சுமத்தப்பட்டிருந்தது. இவர்களுக்கு பிணை வழங்கப்படும் வரை அவர்கள் நீதிமன்ற சிறைக் கூண்டில் தடுத்து வைக்க ப்பட்டிருந்தனர்.

இவர்கள் கூண்டிற்குள் இருந்தவாறு எடுத்து கொண்ட செல்பிகள் அவர்களின் பேஸ்புக் கணக்கில் வெளியிடப்பட்டிருந்தன.



நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாமல் ராஜ பக்ஷ, உதித்த லொக்குபண்டார, உதய கம்மன்பில, மதுமாதவ அரவிந்த, மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணது ங்க ஆகியோர் இந்த புகைப்படங்களில் காணப்படுகின்றனர். (இ-5)

# அடுத்த வாரம் புதிய கட்சியாம்

## சோமவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

தனது புதிய அரசியல் கட்சியினை அடுத்த வாரத்தில் ஆரம்பிக்கவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் முன் னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் மக்கள் விடுதலை முன் னணியை விட்டு விலகி புதிய கட்சி ஆரம் பிக்கப் போவதாக சோமவன்ச தெரிவித் திருந்தார்.

புதிய கட்சியினை ஆரம்பிப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைக ளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை வேறு எந்த ஒரு கட்சிக் கும் ஆதரவு வழங்கப்போவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தாம் ஆரம்பிக்கவுள்ள புதிய அரசியல் கட்சியின் பெயர், சின்னம் ஆகிய விடய ங்கள் கட்சியின் மாநாட்டிலேயே தீர்மா னிக்கப்படும்.

இதேவேளை, மக்கள் விடுதலை முன் னணியின் உறுப்பினர்கள் தம்முடன் கலந் துரையாடுவதற்கு நிபந்தனையற்ற சந் தர்ப்பம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் அங்கத்தவர்கள் எவருக்கும் தனது புதிய கட்சியில் வந்து இணைந்து கொள்ளுமாறு அழைப்புவிடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

புதிய கட்சி ஊடாக மக்கள் மனங்களை வெற்றி கொள்வதற்கு பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மலையகப் பகுதிகளில் புதிதாக 23 பாடசாலைகள் அமைக்கப்படும்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் புதிதாக 23 பாடசாலைகள் அமைக்கப்படும் என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இன,மத,குல பேதங்களை நீக்கி இலங் கையர்கள் என்ற ரீதியில் நாட்டின் எதிர் காலத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

பெருந்தோட்ட பகுதிகளைச் சேர்ந்த தமிழ்மொழி மூல பாடசாலைகளுக்காக 1688 உதவி ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கும் நோக்கில் இவ்வாறு புதிதாக ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் அடுத்த கட்டமாக எதிர்வரும் நாட்களில் பெருந்தோட்ட பகுதிகளில் 23 பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சர் உறுதியளித்துள்ளார்.(இ-5)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
23.10.1963

மறைவு
10.04.2015

அமரர் இராசரத்தினம்
யோகேஸ்வரன்

அன்பிலாரெல்லாம் தமக்குரியர்
அன்புடையார் என்றும் உரியர் பிறர்க்கு
என்ற குறள்வழி வாழ்ந்த-நீ
வாழ்க்கைப் பாதையிலே பாதியிலே
விட்டு சென்றாயே!
எமது இதயமதில் நினைவலையாய்
என்றென்றும் நிறைந்தாயே.

(442)

நீர்வேலி
வடக்கு, நீர்வேலி.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



**சீவரத்தினம் மகேசரத்தினம் (பாபு) (முன்னாள் இ.போ.ச. ஊழி யர், கல்வியங்காடு ஞா.பா.ச. கலாசார ஒன்றிய அங்கத் தவர் (கனடா)**

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டை பிறப் பிடமாகவும் ஸ்காறோ கனடாவை வசிப் பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் மகே சரத்தினம் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை (08/05/2015) அன்று கனடா வில் காலமானார். அன்னார் காலஞ் சென்றவர்களான சீவரத்தினம் மகேஸ் வரி தம்பதியரின் புதல்வனும் காலஞ் சென்றவர்களான சிவப்பிரகாசம் இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் அரியமலர் (லீலா)வின் அன்புக் கணவரும் ஈஸ்வரிதேவி, சிவசூரியர் (அவுஸ்தி ரேலியா), கோபாலரத்தினம் (நோர்வே), காலஞ்சென்றவர்களான உமாதேவி, அருச்சோதி மற்றும் புஸ்பதேவி, அருணகிரிநாதன் (Rtd c.t.o) தாவரவியல்துறை, யாழ். பல்கலைக்கழகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அரியரத்தி னம் மற்றும் பரராஜசிங்கம் (ஓய்வூதியர் திருமலை கடற்படை), சரவணதாசன் (ஓய்வூதியர் (PWD), ஞானாம்பிகை (அவுஸ்திரேலியா), பொன்னரசி (நோர்வே), புனிதவதி, மனோன்மணிதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை) , காலஞ்சென்ற Dr.ஸ்ரீக ரன் (USA), சுதமதி (AD, வடமராட்சி கல்வி வலயம்) ஆகியோரின் மைத்துனரும் குமாரசாமி, Dr.கலாவல்லி (USA), நந்தபாலன் (canada) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் கல்யாணி, கற்பகம், (L.b Assit, திருமலை வளாகம்), பரதன் (UK), மீராதேவி (Bank Officer Canada), கோகுலன் (சுவிஸ்), கோபிகிருஷ்ணன் (M/A RDA Jaffna), யசோதா (USA),Dr. அரவிந்தன் (USA) ஆகியோரின் மாமனும் பத்மநாதன் Australia, சியாமளா, கீதாஞ்சலி (USA) Dr.யாதவி (நோர்வே), ஜனகன் (நோர்வே) ஆகியோரின் சிறிய தந்தையும் மற்றும் ஹரிந்திரன் (மருத்துவபீட மாணவன் கொழும்பு), பகீரதி (மருத்துவபீட மாணவி கொழும்பு) ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கனடாவிலுள்ள Chapel. Funerel home 8911 woodbine Ave, markham எனும் இடத்தில் 10/5/2015 இன்று காலை மு.ப.10 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

G.P.S. ஒழுங்கை,
கல்வியங்காடு.

(437)

தகவல்:
சீ.அருணகிரிநாதன் (சகோதரன்)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மொழிகளைக் கற்றுக்கொள்வதால் இலங்கையில் ஒற்றுமை மேம்படும்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் 30 வருட யுத்தத்திற்கு பிரதான காரணம் மொழி பிரச்சினையாகும், தமிழ், சிங்கள மக்கள் இரு மொழிகளையும் கற்பதன் மூலம் சகோதரத்துவத்தை வளர்த்துக்கொள்ள முடியும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.**



யாழ். பாதுகாப்பு படைகளின் தலைமையகத்தில் தமிழ் மொழி பயிற்சியை நிறைவு செய்த 320 இராணுவ படை உறுப்பினர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைப் பாதுகாப்புப் படையினர் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வதன் மூலம் தமிழர்களின் இதயங்களை வென்றெடுக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிங்களவர்களும் தமிழர்களும் மொழிகளைக் கற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்த மொழிகளைக் கற்றுக்கொள்வது மிக முக்கியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு படையினரும், சிங்கள மக்களும தமிழை கற்பதன்மூலம் தமிழ் மக்களை வெற்றிகொள்ளமுடியும் எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் அடுத்தவர் மொழிகளை புறக்கணித்தமை காரணமாக இரண்டு இனங்களுக்கு இடையிலும் பிரிவினை ஏற்பட்டது, இது தீவிரவாத போக்குடையவர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தது என இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)


**DIPLOMA IN NURSING (2YEARS)**
**HOLY CROSS SCHOOL OF HEALTH SCIENCE**

விண்ணப்ப முடிவுத்திகதி 20/05/2015

நான்கு மாதங்களுக்கான ஆங்கில பயிற்சியுடன் தாதியப்பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படும். க.பொ.த.உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் தங்கள் சுயவிபரகோவையினை திருச்சிலுவை சுகாதார விஞ்ஞான பாடசாலை இல. 767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பணிப்பாளர்

தொலைபேசி இல. 021 300 1102/ 077 115 9391

(412)


# மூன்று கோடி ரூபா நிதி பெற்ற மகிந்த ஆதரவு தொழிற்சங்கம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான விமான நிலைய தொழிற்சங்கம் ஒன்றுக்கு சுமார் மூன்று கோடி ரூபா நிதி கிடைத்துள்ளதாக விமான நிலைய வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தில் நடந்துள்ளதாக கூறப்படும் பாரிய ஊழல் மோசடிகளை வெளிக்கொண்டு வந்த வெலியமுன குழுவின் அறிக்கைக்கு எதிராக ஊடகங்கள் மற்றும் சட்டத்துறை வழியாக நடவடிக்கை மேற்கொள்ளும் நோக்கத்தில் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளதாக பேசப்படுகிறது. (இ)


**கார் வாடகைக்கு தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு மாதாந்த அடிப்படையில் கார் வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:- 077 612 8189

**காணி விற்பனை**

மருதனார்மடப்பகுதியில் 4 பரப்புக்காணிவிற்பனைக்குள்ளது.

(986) தொடர்புகளுக்கு:077 328 8795

**உதவியாளர் தேவை**

ஆங்கில மருந்தகத்திற்கு அனுபவம் உள்ள பெண் உதவியாளர் தேவை.

தொடர்பு:-077 372 6685/ 077 770 2817

(414)

# பாராட்டி வாழ்த்துகிறோம்





**வடமராட்சி தென்புலோலியூர் சதாசிவம் வல்லிபுரநாதன் (மணிமாறன்) JP (அகில இலங்கை சமாதான நீதவான்)**

*18.04.2015- சாமசிறி தேசமானிய விருது*

சமய, சமூக, கலை, கலாசார ரீதியில் பெற்றுள்ளமையையிட்டு வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் ஓய்வுநிலை வங்கியாளர் உபய கதிர்காம முருகனின் அருளைப் பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

40 வருடகால நாடக கலைஞர், சமூக நாடகத்துறையில் கதை, வசனகர்த்தாவாகவும் இயக்குநராகவும் இருந்து வருகிறார். இவர் பல பதக்கங்கள், வெற்றிக்கிண்ணங்களை பெற்றவர்.

*சிவில் குழு (J/413) தவிசாளர், நியாயசபை உறுப்பினர், புலோலி பலநோக்கு கூட்டுறவு சங்க முன்னாள் தலைவரும் நெறியாளரும் ஆவார். உபயகதிர்காம ஆலய பரிபாலனசபை நிறைவேற்றுக்குழு துணைத் தலைவர், உபயகதிர்காம பெரியதேவன் நூலகத்தலைவர், உபய கதிர்காம முன்பள்ளி தலைவரும் ஆவார்.*

**வாழ்த்துவோர்:**

**உபயகதிர்காம முன்பள்ளி சமூகமும் நிர்வாகமும், உபயகதிர்காம நூலக நிர்வாகமும், புலோலி ப.நோ.கூ. சங்கத் தலைவர், நெறியாள்தல் உபயகதிர்காம தேவஸ்தான நிர்வாகம், புற்றளை சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை நிர்வாகம், புலோலி வணிகர் கழகம்.**

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 44 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/4463 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 39 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/4488 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 36 செவ் 12 இல்<br>உயரம்: 192cm<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் அமெரிக்கா<br>தொ.இ: B/4467 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 53<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்: studying law/ அரச தொழில்<br>தொ.இ: G/4490 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 61 செவ் 8 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/4468 | பிறப்பு: 1968 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 49 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MSC/ தனியார் தொழில் கனடா PR<br>தொ.இ: G/1168 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 19<br>உயரம்: 167CM<br>தகைமை/தொழில்: GAQ/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4469 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 29 செவ் 2 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/1172 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொகுதிக்கு 300 வீடுகள் விரைவில் அமைக்கப்படும்

## பிரதியமைச்சர் விஜயகலா தெரிவிப்பு

பிரதேச் செயலகங்கள் மற்றும் மாகாணசபை ஊடாக ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் 300 இலட்சம் ரூபா அபிவிருத்திக்கென ஒதுக்கப்படவுள்ளதுடன் தொகுதிக்கு 300வீடுகள் அமைக்கப்பட உள்ளன என மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

100நாள் வேலைத்திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேசத்தின் முதலாவது அபிவிருத்தித் திட்டம் நுணாவில் மேற்குகிராம சேவையாளர் பிரிவில்ஆரம்பித்து வைக்கப்பட்டபோது பொது நோக்கு மண்டபத்துக்கான அடிக்கல்லைநாட்டி வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அவர் தொடர்ந்து தனதுரையில், வீடுகள் அமைப்பதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்தகாலப் போர்ச்சூழலால் 7ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறுவர்கள் தாய் தந்தையை இழந்த நிலையிலும் 30 ஆயிரம் முதியோர் பாதிக்கப்பட்டும் உள்ளனர். இதில் அங்கவீனமாகியோரும் அடங்குவர். அவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

கடந்த ஆட்சிக்காலத்தில் அதிகாரிகளின் கைகளிலேயே அதிகாரங்கள் குவிந்திருந்தன. சில கட்சிகள் தமக்கு விரும்பிய இடங்களிலேயே அபிவிருத்திகளை மேற்கொண்டனர். அதற்கு முற்றுப்புள்ளிவைத்து மக்கள் கலந்து ஆலோசித்து தமக்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களை தாமே முன்மொழிந்து முன்னெடுக்கக்கூடியதாக நிலைமை மாற்றப்பட்டுள்ளது. இதற்கான வேலைத்திட்டங்களின்கீழ் பொது நோக்கு மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். மக்கள் பங்களிப்புடனான இவ் அபிவிருத்தித் திட்டம் பன்னிரண்டு அரை இலட்சம் பெறுமதியானது. இத்திட்டத்திற்கு அரசால் 10 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள் ளது. மிகுதி மக்கள் பங்களிப்புடன் நிறைவேற்றப் படவேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (இ-3-29)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(சாவகச்சேரி)

தேசிய கல்வியியற் கல்லூரிக ளில் ஆசிரிய பயிலுநர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விவாகமாகாத 25 வயதிற்குட்பட்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். கத்தோலிக் கப் பாட நெறிகசு விண்ணப்பிக்கும் மத குருமாருக்கு 30 வரை வயதெல்லை உண்டு.

2013 ஆம் ஆண்டு நடந்த உயர்தரப் பரீட்சையின் அடிப்படை யல்இசற் புள்ளி அடிப்படையில் தெரிவு இடம பெறும். இவர்கள் தமது க.பொ.த சாதாரணதரப்பரீட்சையில் மூன்று திறமைச் சித்திகளுடன் ஆறுபா டங்களில் சித்தி பெற்றிருத்தல்வேண்டும். விண்ணப பதாரர் ஒருவர் ஆகக்கூடியது மூன்று பாட நெறிகளுக்கே விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களை நேற்று முன்தினம் வெளியாகியுள்ள அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 29.05.2015 ஆகும்.

யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரியில் ஆரம்பக் கல்வி விஞ் ஞானம் (தமிழ், ஆங்கில மொழி மூலம்), கணிதம் (தமிழ், ஆங்கில மொழி மூலம்) சித்திரம, சங்கீதம் (கர்நாடகம்), நடனம் (பரதம்), விசேட கல்வி, ஆங் கிலம் ஆகிய கற்கைகளுக்கு மாண வர்கள் அனுமதிக்கப்படவுள் ளனர்.

யாழ். கல்வியியற் கல்லூரியில் நுணகலைப்பாடங்களுக்கான அனுமதி கடந்த சில வருடங்களாக நிறு த்தி வைக்கப்பட்டிருந்தது. இருப்பி னும் நிர்வாகத்தினரின் முயற்சி யால் இந்த ஆண்டு முதல் நுண் கலைப்பாடக் கற்கை நெறிகள் இடம்பெறவுள்ளன.

இதே வேளை இம்முறை அனுமதியில் புதிய ஒரு விடயமும் உள்ளடக கப்பட்டுள்ளது. அதாவது 2018 ஆம் ஆண்டில் பாடசாலை முறைமைக்கு அமைவாக அந்தந்த பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஆசிரிய தேவையை அடிப்படை யாகக் கொண்டு ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலிருந்தும் சேர்த் துக்கொள்ளப்படும் ஆசிரிய பயிலு நர்களின் எண்ணிக்கை தீர்மானிக் கப்படவிருக்கின்றது. (இ-3-29)

## சிறுகதைத் தொகுப்பு இன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கிருபா லேணர்ஸின் அனுசரணையில் மிருசுவில் தமிழ்தாசனின் இரண்டாவது வெளியீடான 'மனிதர்கள்' சிறுகதை தொகுப்பு இன்று 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மீசாலை மாவடிப் பிள்ளையார் ஆலய முன்றலில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஓய்வுநிலை அதிபர் அ.கைலாய பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரபல எழுத்தாளர் தேவி பரமலிங்கம் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகராட்சி மன்றத்தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை, ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் மற்றும் ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் கே.ஆர்.டேவிட் ஆகியோர்கலந்துகொள்ளவுள்ளனர். (இ-7)

## பொதுக்கூட்டம்

கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை மாலை 2மணிக்கு வித்தியாசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (இ-3)

# சமுர்த்தி நிவாரணம்கோரி மக்கள் எதிர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/61 தொடக்கம் ஜே/74 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு உரிய சமுர்த்தி நிவாரணத்தை வழங்கக்கோரி அப்பகுதி மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றினை மேற்கொண்டிருந்தனர்.**



யாழ்.பிரதேச செயலகத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வு நடவடிக்கையில் தாம் புறக்கணிப்பட்டதாக தெரிவித்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குருநகர் மத்தியில் அமைந்துள்ள சனசமூக நிலையமொன்றில் ஒன்றுகூடிய பாதிக்கப்பட்ட சமுர்த்தி பயனாளிகள் தமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தனர். இதன்போது வேறு சில மக்கள் யாழ். பிரதேச செயலரினையும் குறித்த கலந்துரையாடலுக்கு விடுமாறு அழைத்துள்ளனர்.

அதற்கமைய அங்கு சென்ற பிரதேச செயலரை அங்குநின்ற சிலர் அவமதிப்பும் செய்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரத்திடம் கேட்டபோது, ஒருவேளை உணவு இன்றி சாப்பாட்டு தேவையை பூர்த்தி செய்வ தற்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படுகின்றது.

எமது பிரதேச செயலர் பிரிவில் 17 ஆயிரம் குடும்பங்கள் உள்ளன ஆனால் 4 ஆயிரத்து 160 பேருக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படுகின்றது.

இவ்வாறிருக்கையில் அனைவருக்கும் சமுர்த்தி முத்திரை வழங்குவதென்பது எவ்வாறு முடியும். உண்மையாக வறியவர்களுக்கே சமு ர்த்தி நிவாரணம் வழங்கப்படல் வேண்டும்.

குறிப்பாக இவை தொடர்பில் மீளாய்வு செய்யப்படும் போது ஓரளவு வசதி கூடியவர்கள் நிராகரிக்கப்படுவதற்கானவாய்ப்புக்கள்உள்ளன.

அதற்காக அவர்கள் கவனம் செலுத்தினால் உண்மையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க முடியாத நிலையேற்படும்.

மேலும் இவை தொடர்பில் இறுதி மீளாய்வு ஒன்றினை நாளை திங்கட்கிழமை தாம் மேற்கொள்ள உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-4)

## மரதன் ஓட்டப்போட்டி

கொட்டடி கிராம அபிவிருத்தி சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் புத்தாண்டு விழாவை முன்னிட்டு மரதன் ஓட்டப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு நிலைய முன்றலில் ஆரம்பமாகும். முற்பகல் 10 மணிக்கு பெண்களுக்கான சங்கீதக்கதிரைப் போட்டி நடைபெறும். எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வைத்தீஸ்வரா கல்லூரி மண்டபத்தில் பொது அறிவுப்போட்டி நடைபெறும்.

எதிர்வரும் ஜூன்மாதம் 7 ஆம் திகதி புத்தாண்டு விழாவில் சான்றோர் மாணவர் மற்றும் நிகழ்வில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் பட்டமளிப்பும் இடம்பெறவுள்ளது. (இ-7)

## பொதுக்கூட்டம்

கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை மாலை 2மணிக்கு வித்தியாசாலைபிரதானமண்டபத்தில் நடைபெறவுள்ளது என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (இ-3)




# திருநாவுக்கரசர் திருநாள் நீர்வேலியில் செவ்வாயன்று

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் முன்னெடுக்கும் திருநாவுக்கரசு நாயனார் திருநாள் நிகழ்வுகளும் ஸ்ரீ கணேச அறநெறிப் பாடசாலையின் 14 ஆவது ஆண்டு பரிசில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வாழ்நாள் பேராசிரியரும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவருமாகிய அசண்முகதாஸ்தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுகளில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் தொழிலதிபர் க.கிருபாகரன் தம்பதியர் மங்கல விளக்கேற்றுவர். நீர்வை மணி கு.தியாகராசக் குருக்கள் ஆசியுரையையும் இந்து காலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் மகிந்தினி விஜயகுமார் வாழ்த்துரையையும் வழங்குவர்.

"மின்னம்பலத்தில் நாவுக்கரசர்" என்ற பொருளில் மறவன்புலவு க.சச்சிதானந்தத்தின் சிறப்புரையைத் தொடர்ந்து பன்முக நோக்கில் நாவுக்கரசர் என்ற பொருளில் கருத்தரங்கு இடம்பெறும். இதில் பக்தி நோக்கில் நாவுக்கரசர் என்ற பொருளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசனும் இலக்கிய நோக்கில் நாவுக்கரசர் என்ற பொருளில் விரிவுரையாளர் கு.பாலஷண்முகனும் பண்பாட்டு நோக்கில் நாவுக்கரசர் என்ற பொருளில் கலாநிதி மனோன்மணி சண்முகதாசும் கருத்துரைகளை வழங்குவர். இதே வேளை நாவுக்கரசரின் 'திருத்தாண்டகம்' பாடற்றொகுதி நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது. (இ-3)

## புதிய நிர்வாகத் தெரிவு

புலோலி கிழக்கு சந்தாதோட்டம் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதுவருட நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி யோகராசா-பரமேஸ்வரி தலைமையில் நடைபெற்றது.

இதில் நா.ரந்தீஸ் தலைவராகவும் க.வைகுந்தன் உபதலைவராகவும் இ.கிருபாகரசூரியன் செயலாளராகவும் ந.நவீன் சந்திரன் உப செயலாளராகவும் ந.சசிதரன் பொருளாளராகவும் நிர்வாக சபை உறுப்பினர்களாக சி.தயசீலன், வ.ரவிதாஸன், வே.சாந்தகுமார், க.நாகேந்திரன், ச.பேமராஜ், ஆ.செல்வவிநாயகம் ஆகியோர்களுடன் கணக்காய்வாளராக ஜெகீர்த்தனனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-3)

# 'இந்துக்களின் குரல்' அறிமுகவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

இந்துத் தேசிய மாத இதழான இந்துக்களின் குரல் அறிமுகவிழா -2015 இன்று 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3மணியளவில் யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தென்மராட்சி ஓய்வூதியர் சங்க ஓய்வுநிலைஅதிபர்செ.சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சிறப்பு விருந்தினர்களாக மாகாண சபை உறுப்பினர் கே. சயந் தன், யாழ்.சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் மற்றும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டி.குகதாசன், சாவகச்சேரி கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கா.ராசதுரை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் கௌரவ விருந்தினர்களாக மாவட்டத் தலைவர் டாக்டர் சு.சி.அருளானந்தம், சாவகச்சேரி வர்த்தக சங்கத் தலைவர் வ. ஸ்ரீ பிரகாஸ் யாழ்.பல்கலைக்கழக ஓய்வு பெற்ற பதிவாளர் யோ.ஜெயக்குமார், சாவகச்சேரி பல நோக்கு கூட்டுறவு சங்க பொது முகாமையாளர் யோ. தெய்வேந்திரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமய பாட பரிசளிப்பு விழா

(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி திருநெறிக் கழகத்தின் சைவசமய பாடப் பரீட்சையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் திருநெறிக் கழகத் தலைவர் வே.மகாலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி கல்விக் கோட்டப் பணிப்பாளர் அ.அமிர்தலிங்கம், கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளை தலைவர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி, கிளிநொச்சி மாவட்ட செயலகதிட்டப்பணிப்பாளர்ச.மோகனபவன், கிளி நொச்சி மாவட்ட செய லக பிரதம முகாமைத்துவ உதவியாளர் திருமதி கு.சறோஜினிதேவி, ஓய்வு நிலை அதிபர் ம.பத்மநாபன், கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபர் அபங்கயச்செல்வன்ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

ஆசியுரையினை கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரம குரு முதல்வர் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் வழங்கவுள்ளனர்.

இதன்போது வரவேற்பு நடனம், பரிசில் வழங் கல், கலை நிகழ்வுகள் என்பன நடைபெறும். (2-277)

# 4 வருடங்களாக வீதியில் கிடந்த கிரவல் பரவப்பட்டு புனரமைப்பு பணிகள் ஆரம்பம்



(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட திருநகர் வடக்கையும் கணேசபுரத்தையும் இணைக்கும் பிரதான வீதியில் கடந்த நான்கு வருடங்களுக்கு முன் னர் வீதியை செப்பனிடுவதற்காக பறிக்கப்பட்ட கிரவல் மண் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தி இருந்தநிலையில்தற்போதுபரவப்பட்டு வீதி செப்ப னிடப்பட்டுள்ளதாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதியின் புனரமைப்புப் பணிக்கென நான்கு வருடங்களுக்கு முன்னர் கிரவல் மண் பறிக்கப்பட்டு பரவப்படாமல் இருந்தது.

இதனால் வீதியால் பயணிக்கும் வாகனங்கள், பொதுமக்கள், வயோதிபர்கள் ஆகியோர் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கி வந்தனர்.

அத்துடன் பறிக்கப்பட்ட கிரவல் மண் மேல் பற்றைகள் வளர்ந்து இருந்தமையால் வீதியால் போக்குவரத்து செய்ய முடியாதநிலை காணப்பட்டது.

இவற்றினை கருத்தில் கொண்ட கரைச்சி பிரதேச சபையினர் கனரக வாகனங்களின் உதவியுடன் கிரவல் மண்ணை பரவி போக்குவரத்தை இலகுபடுத்தியுள்ளனர். (2-277)

# தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துவோரை பிடிப்பதற்கு அதிகாரங்கள் வழங்க வேண்டும்

## மீன்பிடி சங்கத் தலைவர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, நந்திக்கடலில் தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்தொழிலில் ஈடுபடுபவர்களை பொலிஸாரின் உதவியுடன் பிடிக்க, மீன்பிடிச் சங்கத்தினருக்கு அதிகாரங்களை வழங்க வேண்டும் என ஹிஜ்ராபுரம் மீனபிடிச் சங்கத் தலைவர் முத்து முஹம்மது ஜாபிர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபருக்கும் மீன்பிடிச் சங்கத்தினருக்கும் இடையில் நாளை திங்கட்கிழமை விஷேட சந்திப்பொன்று இடம பெறவுள்ளது. அந்த சந்திப்பில் மேற்குறிதத கோரிக்கையை விடுக் கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறுகையில்,

முல்லைத்தீவு நந்திக்கடலில் தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி இறால்,மீன் வகைகள் ஆகியன பிடிக்கப்படுகிறன. இது நந்திக்கடலில் தொழில செய்யும் மீனவர்களுக்கு பொருளாதார ரீதியில பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி தொழில் செய்யும் மீனவர்கள் பலர், கடற்றொழில் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டுள்ளனர்.

எனவே, தடைசெய்யப்பட்ட வலைகளைப்பயன்படுத்துபவர்களை பிடிப்பதற்குரிய அதிகாரங்களை தெரிவு செய்யப்பட்ட மீனவ சங்கங்களுக்கு வழங்கப்பட்டால், பொலிஸாரின் உதவியுடன் எந்தநேரமும் கண்காணித்து தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துப்வர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும் என்றார். (2)

# நிரந்தர பிரச்சினைகளுக்கு தீர்வுகள் எட்டப்படவில்லை


## வினோ எம்.பி.தெரிவிப்பு

எமது மக்களின் நிரந்தரமான பிரச்சினைகளுக்கு தீர்வுகள் எட்டப் படவில்லை. அவற்றிற்கு தீர்வு எட்டப்படும்போதுதான் மக்களின் வாழ்க்கையில் பாரியதொரு மாற்றத்தை காணலாம் என பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

கனடா வாழவைப்போம் அமைப்பு புலம்பெயர் உறவுகளை இணைத்து வாழ்வாதார உதவிகளை வழங்கி வருகின்றது. மாற்று வலுவுள்ளோர், பெண்க ளை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களை மையமாகக்கொண்டு வழங்கப்படும் வாழ்வாதார உதவிகள் அண்மையில் புதுக்குடியிருப்பு கைவேலியில் வழங்கப்ப டுள்ளன.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், காணிப்பிரச்சினை, வீட்டுத் திட்டங்கள் தொடர்பாக இன்னமும் தேவைகளும் பிணக்குகளும் காணப்படுவதால் நிலையான முயற்சிகளை மேற்கொள்ள முடியாதவர்களாக எமது மக்கள் காணப்படுகிறார்கள். எனவே இன்னமும் கடுமையாக நாம் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்காக நாளாந்தம் போராட வேண்டியவர்களாகவே இருக்கி ன்றோம் என்றார்.



இந்நிகழ்வில் 20 பெண் தலை மைத்துவ குடும்பங் களுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

அத்துடன் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் நோக்குடன் சிவன் மிக்சர் தொழிலகம் ஒன்று திறந்து வைக் கப்பட்டது.

இதில் கணிசமான பெண்களைத் தலைமையாக கொண்ட குடும்பங்கள் பயன்பெறவுள்ளனர்.

மாணவர் ஒருவருக்கு துவிச்சக்கரவண்டியும் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு நீரிறைக்கும் இயந்திரம் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது. (2)




# வேகக் கட்டுப்பாட்டை இழந்த பாரவூர்தி விபத்துக்குள்ளானது

(மன்னார்)

கடலுணவுகளை ஏற்றிச் செல்லும் பாரவூர்தியின் றொட் உடைந்து வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் சாரதி படுகாயமடைந்தார்.




இச்சம்பவம் நேற்று அதிகாலை மன்னார் பாலத்தின் பிரதான தாம்போதியில் இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பில் தெரியவருவதாவது,

கொழும்பிலிருந்து மன்னார் நோக்கி கடலுணவுகளை ஏற்றிப் பயணித்த பாரவூர்தி ஒன்று மேற்படி இடத்தை அண்மித்த வேளை விபத்துக்குள்ளானது

வாகனத்தை செலுத்திய சாரதி காயமடைந்தார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)

# வவு.நகர வரியிறுப்பாளர் சங்க உறுப்பினர்களுக்கும் வடமாகாண சபை உறுப்பினர்களுக்குமிடையில் சந்திப்பு



(குருமன்காடு)

வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கத்திற்கும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்குமிடையிலான சந்திப்பொன்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் பிராந்திய அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் அறவிடப்படும் சோலை வரிகளில் உள்ள பிரச்சினைகள் மற்றும் அவற்றின் கடந்தகால ஆவணங்கள் உரிய முறையில் பாதுகாக்கப்படாமை உள்ளிட்ட நகரின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய பல விடயங்கள் இதன் போது கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் தற்போது வருமான வரியை அறவிடப் பயன்படுத்தும் 2009ஆம் ஆண்டு வவுனியா நகர சபைக்குட்பட்ட பகுதிகளின் வரி அறவீடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு ஆவணங்கள் நகரசபையிடம் இல்லாமையால் அவற்றில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சருக்கு தெரியப்படுத்தி அது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வது எனவும் மீள மதிப்பீடுகளை மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், எம்.பி.நடராஜா,பிராந் திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பி.எஸ்.குமார,வவுனியா நகர சபைச் செயலாளர் க.சத்தியசீலன், வரியிறுப்பாளர்சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (2-250)

# பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ளன

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுகளில் 2ஆயிரத்து788 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இருப்பதாக பிரதேச செயலகங்களின் தகவல் தெரிவிக்கின்றது.

யுத்தம் மற்றும் இயற்கை இழப்புக்கள் காரணமாக இரண்டாயிரத்து 338 குடும்பங்கள் கணவனை இழந்த நிலையில் உள்ளதுடன் கணவனை பிரிந்த நிலையில் 450 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

19 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவில் 12ஆயிரத்து94 குடும்பங்கள் வசிக்கின்றன. இதில் கணவனை இழந்த நிலையில் ஆயிரத்து 451 பெண்கள இருக்கின்றனர். இவர்களில் 289 பேர் கணவனை இழந்த இளம் பெண்களாவர்.

இதனைவிட குடும்பப் பிணக்குகள் மற்றும் ஏனைய காரணங்களால் கணவனை பிரிந்த நிலையில் 312 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன.

27 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் கணவனை இழந்த 887 பெண்களும், கணவனை பிரிந்த நிலையில் 138 பெண்களும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக உள்ளன. இந்தக் குடும்பங்களில் தங்கி வாழ்வோரின் தேவைகளை இந்தப் பெண்களால் பூர்த்தி செய்யமுடியாத காரணத்தால் அவர்கள் பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ளனர்.

இக் குடும்பங்களிலுள்ள பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம், போசாக்கு என்பன அத்தியாவசியமாக கவனிக்கப்படவேண்டும். இதற்காக இந்தக் குடும்பங்களுக்கு பல்வேறு உதவிகள் தேவையாகவுள்ளன.

அவற்றை நிவர்த்தி செய்வதற்கு பல்வேறு உதவிகள் கிடைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி மாற்றத்திற்காக அமெரிக்கா இலஞ்சம்!

## மகிந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

**அமெரிக்கா 3 ஆயிரத்து 500 மடிக்கணனிகளை இளைஞர்களுக்கு வழங்கி இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

மடிக்கணனிகள் அமெரிக்க தூதரகத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக கணனி பயிற்சி நெறிகளும் வழங்கப்பட்டுள்ளன.

நாட்டில் இயங்கும் இணையத்தளங்களை கட்டுப்படுத்தும் பிரதான சக்தியாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர செயற்பட்டார்.

இவ் இணையத்தளங்கள் தேர்தல் காலத்திலும் அதற்கு பின்னரும் திட்மிட்ட முறை யில் இயங்கியுள்ளன.

தேர்தல்காலத்தில் இணையத்தளங்களில் விடுக்கப்பட்ட சவால்களை முறியடிக்க திறமையான இணையக்குழு ஒன்று தம்மிடம் இருக்கவில்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-5)

# நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு கிடையாது

நாட்டில் எரிபொருளுக்கு எவ் வித தட்டுப்பாடும் கிடையாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

எரிபொருள் விலையேற்றத்தை உருவாக்கும் நோக்கில் சில தரப் பினர் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக மின்வலு எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட் டுள்ளதாக போலிப் பிரசாரம் செய்து மக்களை பிழையாக வழிநடத்த சில தரப்பினர் முயற்சிக்கி ன்ற னர்.

எரிபொருள் விலையை அதிகரி க்க தீர்மானிக் கப்படவில்லை, எரிபொருள் தட்டுப பாடு ஏற்பட வாய் ப்பு கிடையாது.

எரிபொருள் மாபீயாக்களின் போலிப் பிரசாரங்களுக்கு மக்கள் ஏமார்ந்து விடக் கூடாது என மின் வலு மற்றும் எரிசக்தி அமைச்சு ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளது.(இ-5)

# விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு

வில்பத்து பாதுகாக்கப் பட்ட வனப்பகுதி அழிக்கப் படுவதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை விசாரணை செய்யுமாறு ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன சுற்றாடலதுறை அமைச் சின செயலாளருக்கு உத்தரவிட் டுள்ளார்.

இந்த பிரதேசத்தில் குடியிருப்புக்காக அமைச்சர் றிசாத் பதியுதீனின் உத்தர வின்பேரில் வனாங்கள் அழிக்கப்ப டுவ தாக குற்றஞ் சுமத்தப்பட் டுள்ளது. எனினும் இந்தக் குற்றச்சாட்டை அமைச்சர் றிசாத் பதியுதீன் மறுத்துள் ளார்.

எனினும் குறித்த சட்ட விரோத குடியேற்ற நடவடிக்கையை நிரூபித்தால் தான் அமைச்சுப்பதவியை இராஜினாமா செய்வேன் என அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 100 | 80 | 80 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 100 | 120 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 50 | 40 | 50 | 60 | 40 | 40 |
| தக்காளி | 50 | 100 | 80 | 80 | 60 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 50 | 50 | 40 |
| கோவா | 50 | 40 | 50 | 60 | 50 | 40 |
| கரட் | 140 | 80 | 110 | 120 | 100-120 | 100 |
| பூசணி | 120 | 40 | 40 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 50 | 50 | 40 | 70 | 70 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 100 | 100 | 60-100 | 60 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 120 | 140 | 100 | 100 |
| பாகற்காய் | 120 | 80 | 70 | 80 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 40 | 80 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | — | 80 | 70 | 80 | 80 | 70 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 | 50 | 60 | 60 |
| லீக்ஸ் | 200 | 160 | 120 | 160 | 140 | 140 |
| பீற்றூட் | 60 | 60 | 60 | 60 | 50 | 40 |
| கறிமிளகாய் | 100 | 80 | 70 | 80 | 50 | 40 |
| முருங்கைக்காய் | 160-200 | 400 | 280 | 400 | 300-350 | 400 |
| போஞ்சி | 200 | 140 | 150 | 200 | 120-140 | 140 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 | 60 | 40 | — | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 160-200 | 180 | 170 | 200 | 170-190 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 60 | 50 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 200 | 110 | 150 | 140 | 140 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 40 | 40 | 30 | 80 | 50 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 20 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 15 | 10 | 20 |

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

05.2015
10

- 1503 - கிறிஸ்தோபர் கொலம்பஸ் கேமான் தீவுகளை அடைந்து அங்கிருந்த பெருந்தொகையான கடலாமைகளைக் கண்டு அத்தீவுக்கு லாஸ் டோர்ட்டுகஸ் எனப் பெயரிட்டார்.
- 1612 - ஷாஜகான் மன்னன் மும்தாஜ் மகாலைத் திருமணம் புரிந்தான்.
- 1768 - மூன்றாம் ஜோர்ஜ் மன்னனைப் பெரிதும் குறைகூறி ஜோன் வில்க்ஸ் என்பவர் எழுதிய கட்டுரையை அடுத்து அவர் சிறை பிடிக்கப்பட்டார். இதை அடுத்து லண்டனில் பெரும் கல வரம் மூண்டது.
- 1774 - பதினாறாம் லூயி பிரான்சின் மன்னனாக முடிசூடினான்.
- 1796 - ரஷ்யப் படைகள் தாகெஸ்தான் குடியரசின் டேர்பெண்ட் நகரை முற்றுகையிட்டனர்.
- 1796 - பிரான்ஸ் மன்னன் நெப்போலியன் பொனபார்ட் இத்தாலியில் ஆஸ்திரியப் படைகளுக்கெதிரான போரில் பெரும் வெற்றி பெற்றான். 2,000 ஆஸ்திரியர்கள் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1810 - ஆர்ஜெண்டீனாவின் தலைநகரான புவெனஸ் அயரெஸ் நகர மண்டபத்தை புரட்சியாளர்கள கைப்பற்றினர்.
- 1857 - சிப்பாய்க் கிளர்ச்சி: இந்தியாவில் உத்தரப் பிரதேசத்தில் மீரட் என்ற இடத்தில் சிப்பாய்கள் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்கெதிராக கிளர்ச்சியை ஆரம்பித்தார்கள். இந்திய விடுதலைப் போராட்டம் ஆரம்பமானது.
- 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தலைவர் ஜெபர்சன் டேவிஸ் அமெரிக்கக் கூட்டுப் படைகளினால் ஜோர்ஜியாவில் கைப்பற்றப்பட்டார்.
- 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கக் கூட்டுப் படைகள் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தளபதியான வில்லியம் குவாண்ட்ரில் என்பவரை கென்டக்கி என்ற இடத்தில் தாக்கி படுகாயப்படுத்தினர். இவர் ஜூன் 6 இல் இறந்தார்.
- 1871 - பிரான்சுக்கும் புரூசியாவுக்கும் இடையிலான போர் பிரான்ஸ் சரணடைந்ததுடன் முடிவுக்கு வந்தது.
- 1877 - ருமேனியா துருக்கியிடமிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1908 - அன்னையர் தினம் முதன் முதலில் அமெரிக்காவில் மேற்கு வேர்ஜினியாவில் கொண்டாடப்பட்டது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியின் முதலாவது குண்டு இங்கிலாந்தில் கெண்ட் பகுதியில் வீழ்ந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பேர்க் ஆகிய நாடுகளுக்குள் ஜேர்மனி ஊடுருவியது.
- 1940 - வின்ஸ்டன் சர்ச்சில் ஐக்கிய இராச்சியத்தின் பிரதமரானார்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய இராச்சியம் ஐஸ்லாந்தினுள் ஊடுருவியது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் வான்படையின் தாக்குதலில் லண்டனில் கீழவை நாடாளுமன்றம் (House of Commons) சேதத்துக்குள்ளாகியது.
- 1946 - ஜவகர்லால் நேரு இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் தலைவரானார்.
- 1979 - மைக்குரேனேசிய கூட்டாட்சி நாடுகள் சுயாட்சி பெற்றன.
- 1993 - தாய்லாந்தில் விளையாட்டுப் பொருட்கள் தயாரி க்கும் தொழிற்சாலையில் இடம்பெற்ற தீ விபத்தில் பெரும்பான்மையாக இளம் பெண்கள் அடங்கிய 188 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.
- 1994 - நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பினத் தலைவரானார்.

**பிறப்புக்கள்**

- 1932 - கார்த்திகேசு சிவத்தம்பி, ஈழத்துத் தமிழறிஞர் (இ. 2011)
- 1938 - கோ. நம்மாழ்வார், இயற்கை ஆர்வலர் (இ. 2013)
- 1946 - பிருட்டே கால்டிகாசு, ஜேர்மனிய ஆய்வாளர்
- 1963 - ஆ. ராசா இந்திய அரசியல்வாதி.

**இறப்புகள்**

- 2003 - கோபி கிருஷ்ணன், எழுத்தாளர் (பி. 1945)

# நிவாரணப் பணிகளை நிறுத்துவதற்கு திட்டம்

(கொழும்பு)

நேபாளத்தில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள இலங்கை குழுவினர் பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட 2 ஆயிரத்து 500 ற்கும் அதிகமானோருக்கு மருத்துவ உதவிகளை வழங்கியுள்ளனர்.

பூகம்பத்தில் சிக்கி காயங்களுக்குள்ளான 800 இற்கும் அதிகமானோருக்கு சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளதாக நேபாளத்தில் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ள இலங்கை குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் மைத்ரி டயஸ் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், வெளிநாட்டுப் பணியாளர்களின் நிவாரணப் பணிகளை நிறுத்திக் கொள்ளுமாறு நேபாள அரசினால் அந்த நாட்டிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கமைய, நாளை மறுதினம் 11 ஆம் திகதியுடன் தங்களின் நிவாரணப் பணிகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக இலங்கை நிவாரண குழுவின் தலைவர் தெரிவித்தார். (இ-5)

# சிகரட் வகைகளுக்கான புதிய தீர்வை ஆராய்வு

(கொழும்பு)

சிகரட் வகைகளுக்கான புதிய தீர்வை முறையொன்றை சிபாரிசு செய்தல் தொடர்பில் விரிவாக ஆராய்வதற்கு ஒருங்கிணைந்த போதைப்பொருள் நிவாரண நடவடிக்கை குழு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இந்த குழு நேற்று முன்தினம் கூடியபோதே இதுகுறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதுதவிர, போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கான புதிய புனர்வாழ்வு முறை மற்றும் அதற்கான நியமங்களைத் தயாரித்தல் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

சட்டவிரோத மதுபானம் தொடர்பில் மூன்று முறைகளுக்கு மேல் குற்றம் நிரூபிக்கப்பட்டவர்களுக்கு கட்டாய சிறைத்தண்டனை விதிக்கப்படும் வழிமுறையைத் தயாரிப்பது குறித்தும் ஜனாதிபதி தலைமையிலான ஒருங்கிணைந்த போதைப்பொருள் நிவாரண நடவடிக்கை குழு ஆராய்ந்துள்ளது.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு தண்டனை வழங்குவதனை விட அவர்கள் அந்த பழக்கத்திற்கு ஆளாகுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதே முக்கியமானதாகும் என இதன்போது ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

பாடசாலை மாணவர்களை அடிப்படையாகக்கொண்ட போதைப்பொருள் நிவாரணத் திட்டமொன்றைத் தயாரிப்பது குறித்தும் இந்த கலந்துரையாடலில் பேசப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சித் தலைவர்களை ஜனாதிபதி சந்திக்கிறார்

## 20 குறித்து ஆராய

(கொழும்பு)

**உத்தேச 20 ஆவது திருத்தச் சட்ட மூலம் தொடர்பில் இறுதி இணக்கப் பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக் கும், அனைத்துக் கட்சித் தலைவர்களு க்குமிடையிலான முக்கிய சந்திப்பு நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.**

இந்தச் சந்திப்பில் கட்சிகளுக்கி டையில் ஏற்படும் இணக்கப்பாட்டைய டுத்து, உத்தேச 20 ஆவது திருத்தச்சட்ட மூலம் எதிர்வரும் 13 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப் பட்டு அமைச்சர்களின் கருத்துகள் உள் வாங்கப்பட்டு அங்கீகரிக்கப்படவுள்ளது.

இதையடுத்து, எதிர்வரும் 19 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன், சட்ட வியாக்கியானம் கோரி உயர்நீதி மனறத்துக்கும் அனுப்பிவைக்கப் படவுள்ளது என்று கேந்திர தொழில முயற்சி முகாமைத்துவ முகராண் மையின் தலைவர் அசோக அபே குணவர்தன தெரிவித்தார்.

ஊடகத்துறை அமைச்சு மற்றும் அரச தகவல் திணைக்களம் ஆகி யன இணைந்து நேற்று நடத்திய உத்தேச புதிய தேர்தல் முறைமை தொடர்பில் ஊடகங்களைத் தெளிவு படுத்தும் செயலமர்வின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

20ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டாலும், அடுத்து இடம்பெறவுள்ள பொதுத் தேர்தல் 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கமைய இடம்பெறுமா என்பதை எல்லை நிர்ணய சபையே தீர்மானிக்கும்.

புதிய முறைக்கமைய தேர் தலை நடத்தவேண்டுமாயின், எல்லை நிர்ணய சபையின் அறிக் கையைப் பெறவேண்டும். அந்த அறிக்கை வெளிவந்த பின்னர் தான் தேர்தலுக்குச் செல்ல முடி யும். இல்லாவிட்டால் அறிக்கை வெளிவரும்வரை தேர்தலைப் பிற்போட வேண்டிய நிலை ஏற்படும.

எல்லை நிர்ணய குழுவின் அறிக்கையை ஒரு வருடத்தில் வெளியிடலாம். அல்லது அவசர மாக செய்து முடிக்கவேண்டுமா யின், 3 மாதங்களுக்குள் வெளி யிடலாம். அல்லது தேவைக்கேற் றவாறு அறிக்கையின் ஒரு பகு தியை வெளியிடலாம் என தெரிய வருகிறது. (இ-5)

# பொதுமக்கள் மகிந்தவை பிரதமராக்குவார்களாம்

## விமல் நம்பிக்கை

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பொதுமக்கள் பிர தமர் பதவியில் அமர்த்துவார்கள் என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான கூட்டத்தின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தொடர்ந்து பேசிய அவர்,


மைத்திரிபால சிறிசேனவுக்கு 6.2 மில்லியன் பேர் வாக்களித் தனர். மகிந்த ராஜபக்ஷவுக்கு 5.8 மில்லியன் மக்கள் வாக்களித்தனர்.

எனவே ஐக்கிய தேசியக் கட்சி தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை ஆதரிப்பதா? அல்லது மகிந்தவை ஆதரிப்பதா? என்று சிறிசேன விரை வில் தீர்மானிக்கவேண்டும் என் றும் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த புதன்கி ழமை நடந்த ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவிற்கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற் கும் இடையில் நடந்த சந்திப்பின் போது தன்னை பிரதமர் வேட்பா ளராக்க வேண்டும் என்று முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசே னவிடம் கேட்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவான பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பி டத்தக்கது. (இ-5)

# தெஹ்ரானிலிருந்து வீரதுங்க தொடர்பு



உக்ரேன் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை விநியோகித்ததாக குற்றம் சுமத்தப்பட்டு, ரஷ்யாவு க்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தேட ப்பட்டு வருகிறார்.

இந்நிலையில் இலங்கையின் வெளியுறவு அமைச்சுடன் அவர் தெஹ்ரானில் இருந்து தொடர்பு கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட நாள் முதல் உதயங்க எங்கிருக்கிறார் என்ற விடயம் வெளியாகவில்லை.

இதனையடுத்து அவர் ரஷ்யா விலேயே இருக்கலாம் என்று நம்ப ப்பட்டது.

உதயங்க கடந்த வாரத்தில் தெஹ்ரானில் இருந்து இலங்கை யின் வெளியுறவு அமைச்சுடன், தொடர்பு கொண்டதாக அமைச்சர் மங்கள சமரவீர உறுதிப்படுத்தியு ள்ளார்.

எனினும் அவர் எவ்வாறு விசார ணைக்கு உட்படுத்தப்படுவார் என்ற விடயத்தை அவர் வெளியிடவி ல்லை. (இ-5)

# அரசியல்வாதிகளால் ஏமாற்றப்படுவதாக இத்தாலிவாழ் இலங்கையர் குற்றச்சாட்டு

இத்தாலியின் மிலானோ நகரில் வாழும் இலங்கையர்களின் கோரி க்கை கடந்த 25 ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நகரிற்குச் செல்லும் இலங்கை அரசியல்வாதிகள் பலர் தங்களுக்கு வாக்குறுதி அளித்த போதிலும், அவை நிறைவேற் றப்படவில்லை என மிலானோ வாழ் இலங்கையர்கள் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

மிலானோ நகரில் ஓர் இலங் கைக்கான கொன்சோல் காரியால யத்தை அமைத்துக் கொடுக்கு மாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும், இதுவரையில் இந் தக் கோரிக்கை நிறைவேற்றப்பட வில்லை. அதனைச் செய்ய அவர்க ளுக்கு கடினமாக இருந்தால், ஒரு நாள் நடமாடும்சேவையை செய்துதரு மாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன் காரணமாக கடவுச்சீட்டு புதுப்பித்தல் உள்ளிட்ட பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள மிலானோ வாழ் இலங் கையர்கள் நாளொன்றையும் 200 யூரோக்களையும் செலவிட வேண்டி யுள்ளதாக தெரிவித்துள்ளனர். (இ-5)

# வாரம் ஒரு தகவல்

## ஒரு காதல் கதை

“அப்பா, உங்களிடம் ஒரு கேள்வி”

“என்ன கேட்கப் போகிறாய்?”

“வாழ்க்கையில் 3 முக்கியமான விடயங்கள் என்ன தெரியுமா?”

“தெரியவில்லையே”

“எனக்குத் தெரியுமே. ஒரு புத்தகத்தில் படித்தேன்“

“என்ன படித்தாய்?”

“வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு விடயம் யாரையாவது காதலிக்க வேண்டும்”

“இரண்டாவது முக்கியமான விடயம் யாராவது நம்மைக் காதலிக்க வேண்டும்”

“மூன்றாவது முக்கியமான விடயம் இவையிரண்டும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும்”

“இப்பதான் தெரியுது... நீ எப்படியான விடயங்களை அதிகமாகப் படிக்கிறாய் என்று”

“நான் என்னப்பா... இன்னமும் சின்னக் குழந்தையா? வயதாகி விட்டதல்லவா!”

“புரியுதடா... ஏற்பாடு பண்ணுறேன்”

“நேற்றுக்கூட அம்மா என்னை எங்கே என்று தேடியபோது அவன் எங்கே போயிருப்பான். கழுதை கெட்டால் குட்டிச்சுவர் என்று சொன்னீங்களாமே?”

“ஆமாம். சொன்னேன்”

“இனிமேல் அப்படியெல்லாம் சொல்லாதீங்கப்பா”

“என்னடா சொல்கிறாய்?”


“அதற்கில்லையப்பா. நான் இப்பொழுது வாலிபன். இனிமேல் என்னை கழுதை என்று சொல்வது நல்லா இருக்காது என்று நினைக்கிறேன்”

“ஏன்?”

எதிர்வீட்டுப் பெண்ணை அவளுடைய அப்பா குட்டிச்சுவர் என்று சொல்லித் திட்டிக் கொண்டிருக்கிறார். அதனால... சொன்னேன்

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்னையைப் போற்றுவோம்

"அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம்" என்பதும், "தாயிற் சிறந்த கோயிலும் இல்லை, தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" என்பதும் முன்னோர் இட்டுச்சென்ற வேத வாக்காகும்.

தமிழ்க் கலாசார மரபின் சிறப்பு என்னவென்றால், ஒரு மனிதன் இந்த உலகின் எல்லா விடயங்களிலிருந்தும் துறவு மேற்கொண்டாலும்கூட, தாயிடமிருந்து துறவு என்பது இல்லை என்பதே. இதை இந்திய ஆன்மிக வரலாற்றில் மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்திய இருவர் நிலைநிறுத்திவிட்டுப் போனார்கள்.

ஒருவர், காலடியில் பிறந்து, தன் காலடியால் பாரத தேசம் முழுவதையும் மூன்று முறை சுற்றிவந்து, ஹிந்து மதத்தை ஒருங்கிணைத்து, நான்கு மடங்களை தமது நாட்டில் நிறுவி, 32 வயதில் இவ்வுலக வாழ்க்கையை முடித்துக் கொண்ட ஆதி சங்கரர் ஆவார்.

இன்னொருவர் செல்வச் செழிப்பிலே பிறந்து மிகப் பெரிய வணிகராக வளர்ந்து, அதன்பின் ஒரே நாளில் "காதறுந்த ஊசியும் வாராது காண் கடை வழிக்கே" என்று கூறி விட்டு, சென்னையில் தன்னுடைய பூத உடலை மண்ணிலோ, நீரிலோ, நெருப்பிலோ கலக்காமல் மறைந்து போன பட்டினத்து அடிகள் ஆவார்.

இந்த இருவரும் எல்லாப் பற்றுகளையும் துறந்தாலும், தமது அன்னையின் மேலுள்ள பற்றைத் தவிரக்க முடியாமல், அவர்களது அன்னைகளின் ஈமச் சடங்குகளில் கலந்து கொண்டு அன்றைய சமூகத்தின் பழமையை எதிர்த்துப் போரிட்டவர்கள்.

ஆதி சங்கரர் சிருங்கேரியில் இருக்கும்போது, தனது அன்னைக்குக் காலம் நெருங்கிவிட்டது என்று உணர்ந்து உடனடியாகக் காலடி திரும்புகிறார். அங்கிருந்த பழமை வாதிகள் சங்கரருக்கு அவருடைய வீட்டுக்குள்ளே நுழைவதற்கான அனுமதியை மறுக்கிறார்கள்.

ஆனால், தாயோடு ஓர் உயிருக்கு ஏற்பட்ட உறவு, துறவினால் அழிக்க முடியாதது என்று கூறி ஆதி சங்கரர் தன்னுடைய காவி உடையை நீக்கி விட்டு, அன்னைக்குப் பணிவிடை செய்கிறார். பிரம்மத்தை உணர்ந்த ஞானி தன்னுடைய மகன் என்பதை உணர்ந்திருந்த அந்த அன்னை ஆர்யாம்பாள், ஆதி சங்கரரிடம் தனக்கு பிரம்ம ஞானத்தைப் போதிக்க வேண்டும் என்று உயிர் பிரியும் தருவாயில் கேட்கிறாள்.

உடனே சிவ புஜங்கம் மற்றும் விஷ்ணு புஜங்கம் ஆகிய ஸ்லோகங்களை ஆதிசங்கரர் பாடுகிறார். அதைக் கேட்டுக் கொண்டே அந்தத் தாயின் உயிர் பிரிகிறது.

எல்லா உணர்ச்சிகளையும் கடந்திருக்க வேண்டிய ஞானியாகிய ஆதி சங்கரர் அந்த ஊர் மக்களின் எதிர்ப்பையும் மீறி, அன்னையின் சிதைக்குத் தீ மூட்டி 5 ஸ்லோகங்களைப் பாடுகிறார். அவைதான் உலகப் புகழ் பெற்ற மாத்ரு பஞ்சகம் ஆகும். அந்த 5 ஸ்லோகங்களின் பொருள்:

(1) தடுக்க முடியாத பிரசவ வேதனை ஒருபுறம் இருக்க, வாய்க்கு ருசி இல்லாதிருத்தல், உடம்பு இளைத்தல், ஒரு வருட காலம் மல சலம் நிறைந்த படுக்கை ஆகியவற்றோடு கூடிய கர்ப்ப காலத்தில் ஓர் அன்னை படும் துயரத்தையும், பாரத்தையும் கொஞ்சமாவது தீர்க்க முடியாதவன் ஆகி விடுகிறானே பிள்ளை என்பவன். தனக்காக அந்தக் கஷ்டங்களைத் தாங்கிக் கொள்ளும் தாயை என்னவென்று சொல்ல, அந்தத் தாய்க்கு வணக்கம்.

(2) தாயே, ஒரு சமயம் நான் படிக்கும் குருகுலத்துக்கு வந்து, கனவில் நான் சன்யாசம் பூண்டதாகக் கண்டு உரக்க அழுதாயே, அப்பொழுது குருகுலம் முழுவதும் உன் எதிரில் அழுததே, அப்படிப்பட்ட உன்னை உனது காலகளில் விழுந்து வணங்குகிறேன.

(3) தாயே, மரிக்கும் தருணத்தில் தண்ணீர்கூட கொடுக்கப்படவில்லை. மரித்த தினத்தில் சிரார்த்தம் கொடுக்க முடியாமல் இருந்தது. உன் மரண வேளையில் தாரக மந்திரம் கூட ஜபிக்கப்படவில்லை. காலம் கடந்து வந்துள்ள என்மீது இணையற்ற தயை காட்ட வேண்டும், தாயே.

(4) என் முத்தல்லவா, என் கண்கள் அல்லவா, என் ராஜா, என் குழந்தை சிரஞ்சீவியாய் வாழ வேண்டும் என்றெல்லாம் கொஞ்சினாயே தாயே. அத்தகைய வாயில், சாரம் இல்லாத பிடி அரிசியைத்தானே போடுகிறேன்.

(5) அன்று பிரசவ காலத்தில் அம்மா, அப்பா, சிவா என்று உரக்கக் கத்தினாய் அல்லவா, தாயே, இன்று நான் கிருஷ்ணா, கோவிந்தா, ஹரே முகுந்தா என்று கூறி அஞ்சலி செய்கிறேன்.

மேற்கண்ட பொருள் கொண்ட மாத்ரு பஞ்சகம் ஆதி சங்கரர் போன்ற ஒரு துறவியின் மனதுக்குள் இருந்தும், தாய்ப் பாசத்தை மீட்டெடுக்கச் செய்த பாடல்கள் ஆகும்.

கேரளத்தில் ஓர் ஆதி சங்கரர் போலவே, தமிழகத்தில் பட்டினத்தாரும் தன்னுடைய துறவுக் கோலத்தைத் துறந்து தனது தாயின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள வந்துவிடுகிறார்.

இவ்வுலக வாழ்க்கையில் எதிலும் சாரம் இல்லை என்றும், அணிந்திருந்த அரை வேட்டி உடபட எல்லாப் பந்தங்களும் சுமையாகப் போய்விட்டன என்றும் பற்றற்ற நிலையில் பாடிய பட்டினத்தாருக்கும் தனது தாயின் மரணம் தாங்க முடியாத வேதனையை ஏற்படுத்துகிறது.

அப்போது அவர் பாடிய 10 பாடல்கள் கேட்பவர் நெஞ்சை உருக்கும் தன்மை கொண்டவை. அதில் முதல் பாடல்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெ
லாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்
துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை
தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி
என்று பட்டினத்தார் பாடுகிறார்.

அடுத்த 3 பாடல்களில் எப்படிப்பட்ட அன்னைக்கு தான் தீ மூட்ட நேரிட்டது என்பதை உள்ளம் உருகப் பாடுகிறார்.

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்
மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னை காத
லித்து முட்டச்
சிறகினிட்டு காப்பாற்றிச் சீராட்டிய
தாய்க்கோ
விறகினிட்டுத் தீ மூட்டுவேன்

என்றெல்லாம் பாடி விட்டு, அடுத்த இரு பாடல்களில் தாயின் உடலில் தான் வாய்க்கரிசி போட நேர்ந்ததை எண்ணிக் கதறி அழுகிறார் பட்டினத்தார்.

அரிசியோ நான் இடுவேன் ஆத்
தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்
-
ருசியுள்ள தேனே அமிர்தமே
செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு
அள்ளி இடுவது அரிசியோ தாய்
தலை மேல்
கொள்ளிதனை வைப்பேனோ
கூசாமல் - மெள்ள
முகமேல் முகம் வைத்து முத்
தாடி என்றன்
மகனே எனஅழைத்த வாய்க்கு

மேற்கண்ட இரு பாடல்களும் ஆதிசங்கரரின் மாத்ரு பஞ்சகத்தில் வரும் நான்காவது மற்றும் ஐந்தாவது பாடல்களை அப்படியே ஒத்திருப்பதைக் காணும்போது நாம் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது.

தாயினுடைய உடல் தீப்பற்ற எரிவதைப் பார்த்து நெஞ்சு வெடித்துக் கதறுகிறார் பட்டினத்தார்.

.வேகுதே தீயதனில் வெந்து
பொடி சாம்பல் ஆகுதே
பாவியேன் ஐயகோ மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி
என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை

ஆனால், ஒன்பதாவது பாடலில் நெஞ்சைப் பிளக்கும் சோகத்தைப் பிழிந்து கொடுத்த பட்டினத்து அடிகள், கடைசிப் பாடலில் சுய உணர்வு பெற்று எழுகிறார்.

வீட்டிருந்தாள் அன்னை வீதி
தனில்
இருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்
நீறானாள் - பால்தெளிக்க
எல்லோரும் வாருங்கள் ஏதென்று
இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.

ஆதி சங்கரருக்கு ஆறாம் நூற்றாண்டிலும், பட்டினத்து அடிகளுக்கு பத்தாம் நூற்றாண்டிலும் ஏற்பட்ட அதே துயரம், இன்னொரு துறவிக்கும் ஏற்படுகிறது.

1900 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சுவாமி விவேகானந்தர் தனது தாயிடம் சிறிது காலம் போய் இருக்க விழைகிறார். அப்போது ஆதி சங்கரரை நினைவில் கொண்டு சுவாமி விவேகானந்தர் கூறினார்:

1884 இல் என் தாயாரை நான் வட்டு வந்தது பெரும் துறவு. இப்போது திரும்பவும் என் தாயாரிடம் போவது அதை விடப் பெரிய துறவு என்று எனக்கு இப்போது காட்டப்படுகிறது. ஒரு வேளை அன்று ஆதி சங்கரருக்கு எந்த அனுபவத்தைக் கொடுத்தாளோ அதே அனுபவத்தை நானும பெற வேண்டும் என்று தேவி விரும்புகிறாள் போலும்.

எனவே, நமது நாட்டைப் பொருத்த அளவில் ஆதி சங்கரர், பட்டினத்து அடிகள், சுவாமி விவேகானந்தர் போன்ற பிள்ளைகள் பிறக்கும் நாள் எல்லாம் அன்னையரை போற்றும் நாளாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவுக்கெதிராக மற்றுமொரு குழு!

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதமர் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவிக்கப்பட்டால், அதற்கு எதிராக போட்டியிட மற்றுமொரு தரப்பு தயாராக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளர் எஸ்.பி.நாவின்ன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் இவ்வாறு பிரதமர் வேட்பாளராக களமிறங்குவார்கள்.

தங்களுக்கும் பிரதமர் வேட்பாளர் பதவி வழங்கப்பட வேண்டுமென சிரேஷ்ட உறுப்பினர்கள் கோரிக்கை விடுப்பார்கள்.

நாடாளுமன்றத் தேர்தலின் போது எந்த சந்தர்ப்பத்திலும் பிரதமர் வேட்பாளர் ஒருவரை சுதந்திரக் கட்சி பெயரிட்டதில்லை.

பிரதமர் வேட்பாளர் யார் என்பதனை சுதந்திரக் கட்சி தேர்தலின் பின்னரே தீர்மானிக்கும்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்திலும் இந்த நடைமுறையே பின்பற்றப்பட்டது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இதே வழிமுறையை பின்பற்றுவார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாருடையதும் தனிப்பட்ட சொத்து கிடையாது.

நாட்டின் தேவைகளையும் கட்சியின் கொள்கைகளின் அடிப்படையிலுமே தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கட்சி என்ற ரீதியில் வெற்றியீட்டுவதே எமது நோக்கமாக அமைந்துள்ளது.

மாறாக தனியொரு நபரை மன்னராக்குவது எங்களது நோக்க மல்ல என எஸ்.பி. நாவின்ன சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார். (இ)


# ஜனாதிபதியை கொலை செய்வதற்கு மூன்று முறை முயற்சி! - சோமவன்ச

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகவும ஏற்கனவே 3 தடவைகளுக்கு மேல் அவரைக் கொலை செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் ஜே.வி.பியிலிருந்து பிரிந்து சென்ற முன்னாள் அக்கட்சித் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பல தடவைகள் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தபோதிலும் எதிர்காலத்திலும் ஜனாதிபதியை கொல்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படலாம் என அச்சம் வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,



"ஜனவரி 8ஆம் திகதி ஆட்சிக்கு வந்த மைத்திரிபாலவுக்கு எதிராக ஜனவரி 9 ஆம் திகதியே சூழ்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பில் நான ஏற்கனவே ஜே.வி.பியை வலியுறுத்தியிருந்தேன். ஜனநாய கத்தைப் பாதுகாக்கவே ஜே.வி.பி. எப்போதும் செயற்பட்டுள்ளது. நாட்டுக்கு எதிராக இவ்வாறான ஒரு நடவடிக்கை இடம்பெற்றமை அறிந்திருந்தும் இதற்கு எதிராக எவரும் குரல் கொடுக்காமை ஆச்சரியமாகவும் கவலையாகவும் உள்ளது.

இதனைத் தொடர்ந்து பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திர தின நிகழ்வின போதும் அவரைக் கொல்வதற்கான சூழ்ச்சியொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததாக நாங்கள் அறிந்தோம்.

அண்மையில் ஜனாதிபதி கலந்துகொண்டிருந்த கூட்டமொன்றில் ஆயுதத்துடன் இராணுவ அதிகாரி ஒருவர் நடமாடியிருந்தார்.

இவை அனைத்தும் ஏதே ஒரு சக்தியினாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப் படவேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மகிந்தவுக்காக ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் நிதிமோசடி செய்தவர்களுக்கு எதிராகவும் வழக்கு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார விளம்பரங்களை ஒளிபரப்பியமை தொடர்பில் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை பிரிவில் இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் 200 மில்லியன் நிதி மோசடியுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

இந்த மோசடி சம்பவம் தொடர்பாக இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழு நடத்திய விசாரணைகள் முடிவடைந்துள்ள நிலையில், சந்தேக நபர்களுக்கு எதிராக விரைவில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

அதேவேளை இத்தாலியில் இருந்து செய்மதி தொலைக்காட்சி மூலம் ரூபவாஹினி தொலைக் காட்சி அலைவரிசை ஒளிபரப்பப்பட்டமை தொடர்பில்நடந்த 6.5 மில்லியன் ரூபா முறைகேடான கொடுக்கல்- வாங்கல்கள் குறித்து ஆணைக்குழு வசாரணைகளை நடத்தி வருகிறது.

மகிந்த ஆட்சிக்காலத்தில் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கைக்கு அமைய இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு இந்த விசாரணைகளை நடத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மகிந்தவின் நிவாரணங்களை மைத்திரி குறைத்துவிட்டாராம்

## வாசுதேவ குற்றச்சாட்டு

(கொழும்பு)

மகிந்த அரசாங்கத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட நிவாரணங்கள் பல தற்போதைய அரசாங்கத்தினால் குறைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

"பெற்றுக்கொண்ட சுதந்திரம் ஆபத்தில் மகிந்தவுடன் மீண்டும் கட்டியெழுப்புவோம்" என்ற தலைப்பில் குருநாகல் பகுதியில் இடம்பெற்ற பேரணியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வைப்பு வட்டி விகிதங்கள் தற்போதைய அரசாங்கத்தில் குறைப்பதற்கான அறிகுறி காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை குறித்த பேரணியில் கலந்து கொண்ட விமல் வீரவன்ச இலங்கையில் தற்போது மேற்குலக சதிகள் இடம்பெறுவதாக தெரிவத்துள்ளார்.மேலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குறித்த பேரணியில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாலினி பொன்சேகா, டலஸ் அழகப்பெரும, முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா உள்ளிட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் இந்த கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த மகிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன, குமார வெல்கம, வீகே. இந்திக, காமினி லொக்குகே, கீதாஞ்சன குணவர்தன, பந்துல குணவர்தன, சரத்குமார குணரத்ன, சரண குணரதன, டி.பி. ஏக்கநாயக்க, வை.ஜீ. பத்மசிறி, ஜகத் பாலசூரிய, லொஹான் ரத்வததே, கமலா ரணதுங்க, அருந்திக்க பெர்னாண்டோ, பிரியங்கர ஜயரத்ன, ஜீ.எல்.பீரிஸ், அப்துல் காதர், ரஞ்சித் சொய்சா, மனுஷ நாணயக்கார, ஜானக வக்கும்புர, சேஹான் சேனசிங்க, மொஹான் சில்வா, எஸ்.சி.முத்துகுமாரன, நிஸாந்த முத்துஹெட்டிகம, சாமிக தர்மதாச, தேனுக விதானகமகே, உதித்த லொக்குபண்டார, திலும் அமுனுகம, சரத் வீரசேகர, ஸ்ரீயானி விஜேவிக்ரம, டளஸ் அழகபெரும, ரொஸான் ரணசிங்க, எஸ்.எம். சந்திரசேன, ஜானக பிரியந்த பண்டார, தாராநாத் பஸ்நாயக்க, நிமல் விஜேசிங்க, ஜயரத்ன ஹேரத், விஜித பேரகொட,நிர்மல கொத்தலாவல, மாலினி பொன்சேகா ஆகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் இதன்போது கலந்து கொண்டார். (இ-5)

# மதுபானங்களின் வலு தொடர்பில் ஆராய்வு

நாடு பூராகவும் விற்பனை செய்யப்படும், மதுபானங்களில் அடங்கும் அதன் வலு தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கையை வாழ்க்கை செலவு சுட்டெண்ணை கண்காணிக்கும் குழு நுகர்வோர் அதிகார சபையிடம் விடுத்துள்ளது.

இதற்கமைய, இலங்கை தர நிர்ணய நிறுவனம் மற்றும் அரச பகுப்பாய்வு திணைக்களம் என்பனவற்றின் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

சில மதுபானங்களில் அதன் வலு குறைக்கப்பட்டுள்ளதாகவும், அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் கிடைக்க பெற்றுள்ள முறைப்பாடுகளை அடுத்தே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி கந்தசாமி கமலவேணி

காரைநகர் தோப்புக்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கமலவேணி கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தில்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி கார்த்திகேசு மனோன்மணி

முதலாம் கட்டை,கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு மனோன்மணி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி முருகவேள் குணநாயகி

வடகோவையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி மணல்தறை லேனை வசிப்பிடமாகவும் கொண்ட முருகவேள் குணநாயகி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி முருகேசு இராசலட்சுமி

பம்பலப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு இராசலட்சுமி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப.10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுபின்னர் பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### நாகமுத்து வடிவேலு

(ஓய்வுபெற்ற துறைமுக அதிகாரசபை போமன்)

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து வடிவேலு கடந்த 6ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் திருகோணமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்



### கணபதிப்பிள்ளை துரைஐயா

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

மார்ட்டின்லேன் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை துரைஐயா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் செம்மணி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### வேலுப்பிள்ளை இராசதுரை

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Torcy ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராசதுரை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் நண்பகல்12 மணிவரை 7Boulevard de Menilmontant, 75011 Paris, France (Meto: Philappe Auguste) என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மயூரனுக்கு இறுதி அஞ்சலி!

(சிட்னி)

**இந்தோனேஷியாவில் பாலி 9 வழக்கில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட இலங்கை வம்சாவளியான மயூரன் சுகுமாரனின் இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெற்றுள்ளன.**







மயூரன் சுகுமாரன் அவுஸ்திரேலியாவில் அவரது குடும்பத்துடன வசித்து வந்தார்.மயூரன் சுகுமாரன் போதைபொருள் கடத்தலில் ஈடுபட்டார் என தெரிவித்து கடந்த 2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இவர் உள்ளிட்ட எண்மருக்கு கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி நள்ளிரவில் இந்தோனேஷியாவின் நுசக்கம்பங்கன் சிறைச்சாலை தீவில் வைத்து மரண தண்டனை நிறைவேற்றப்படடிருந்தது.இந்நிலையில் அவுஸ்திரேலியாவுக்கு கொண்டு செல்லப்பட்ட மயூரன் சுகுமாரனின் இறுதி கிரியைகள் நேற்று அவுஸ்திரேலியாவின் சிட்னியிலுள்ள டேஸ் பிரிங் தேவாலயத்தில் ஆராதனைகளுடன் இடம் பெற்றது.

இங்கு மயூரனின் குடும்பத்தவர்களும், அவரது உற்ற நண்பரும் ஓவியருமான பென் கில்ற்றியும் உரையாற்றியுள்ளார்கள் என சர்வதேச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மயூரன் சுகுமாரனின் பூதவுடலுக்கு அருகில் நிறப்பூச்சு மற்றும் தூரிகை வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் மயூரன் சுகுமாரன் அவுஸ்திரேலி யாவின் மிக சிறந்த ஓவியர்களில் இரண்டாம் இடம் வகித்திருந்தார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மயூரனுடன்மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட அன்ரூ சானின் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம சிட்னியில் இடம்பெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் என ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு சானுக்கு பிரியாவிடை அளித்தார்கள்.மயூரன் தம்மை விட்டு நிரந்தரமாக பிரியாவிடை பெற்றுச் செல்லும் தருணத்தில், அவரது புகைப்படங்கள் அடங்கிய அல்பத்தை பகிரங்கப்படுத்தியுள்ளனர்.

இதிலுள்ள படங்கள் மயூரனின் இளமை வாழ்க்கையையும், குத்துச் சண்டையில் அவருக்கு இருந்த ஆர்வத்தையும் புலப்படுத்துவதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

## மயூரனின் தாயாரின் வெளிவராத கடிதம்

மயூரன் சுகுமாரனின் தாய் இந்தோனேஷிய ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியிருக்கிறார். தமது மகனுக்கு பொதுமன்னிப்பு வழங்கத் தவறியமை பற்றி மனவருத்தத்தை வெளிப்படுத்தியுள்ள ராஜி சுகுமாரன், தம்மை நேருக்கு நேர் சந்திக்கக் கூடிய தைரியம் ஜனாதிபதிக்கு இருக்கவில்லையெனக் கூறியிருக்கிறார்.

ஹெரோயின்போதைப்பொருளை கடத்த முற்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மயூரன் சுகுமாரனுக்கும், அன்ரூ சானுக்கும் 10வருடாங்களுக்கு முன்னர் இந்தோனேஷியாவில்மரண தண்டனை விதிக்கப்பட்டது.

நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட தீவிர போராட்டங்களைத் தொடர்ந்து, இவர்கள் இருவருக்கும் கடந்த வாரம்மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இருவரும் நுசக்கம்பங்கன் தீவில் இந்தோனேஷிய துப்பாக்கிக் குழுவின் வேட்டுக்களை நெஞ்சில் தாண்டி உயிரிழந்தார்கள்.

இது பற்றி மயூரனின் தாய் எழுதிய கடிதத்தில்பல உணர்வுபூர்வமான வாசகங்கள் இடம்பெற்றுள்ளன.

'என் மகனையும், இன்னும் எழுவரையும் கொல்லுமாறு நீங்கள் உத்தரவிட்ட மனிதர்கள். துப்பாக்கி விசையை இழுத்த சமயம் நீங்கள் எங்கிருந்தீர்கள் என்பதை அறியேன், நீங்கள் தொலைதூரத்தில் இருந்திருக்கலாம். ஆனால், தம்மை நேசிப்பவர்கள் அனைவரும் அருகிலுள்ள ஹோட்டலில் தமது மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட செய்தியை கேட்பதற்காக காத்திருப்பார்கள் என்பதை அறிந்து கொண்டே தமது மகன்மரணத்தைத்தழுவினார் என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமது மகன் தீவிரமான குற்றத்தைப் புரிந்தபோதிலும், அதற்காக இந்தோனேஷிய மக்களிடம் பல தடவைகள் மன்னிப்புக் கோரியிருந்ததாக ராஜி அம்மையார் குறிப்பிட்டுள்ளார். மயூரன் சக கைதிகளைத் திருத்திய விதம் பற்றியும் அவர் கடிதத்தில் பேசியிருக்கிறார். தாம் புனர்வாழ்வு பெற்றதால் தாம் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது மயூரனின் கோரிக்கையாக இருக்கவில்லை. மாறாக, தம்மை கொன்றுவிட வேண்டாம் என்றே அவர் கோரினார் என்று தாயார் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-5)

## பிரிட்டன் பாராளுமன்றத் தேர்தலில் 10இந்திய வம்சாவளியினர் வெற்றி

(லண்டன்)

பிரித்தானிய பாராளுமன்ற தேர்தலில் பழைமைவாத கட்சி, தொழிலாளர் கட்சி, லிபரல் ஜனநாயக கட்சி உடபட கட்சிகள் சார்பாக இந்திய வம்சா வளியினர் 59 பேர் போட்டியிட்டனர். இவர்களில் 10 பேர் வெற்றி பெற்றுள்ளனர்.

பிரித்தானிய பாராளுமன்றத்துக்கு நேற்று முன்தினம். தேர்தல் நடைபெற்றது. இதில், கன்சர்வேட்டிவ் கட்சியை சேர்ந்த டேவிட் கமரூன் 331 ஆசனங்களை பெற்று இரண்டாவது முறையாக ஆட்சியை பிடித்துள்ளார்.

மேலும் 'லீசெஸ்டர் ஈஸ்ட் (Leicester east)' தொகுதியில் தொழிலாளர் கட்சியின் சார்பாக போட்டியிட்ட கெய்த் வாஸ் (keith) வெற்றி பெற்றுள்ளார்.

அந்த கட்சியின் மற்றொரு வேட்பாளரான வீரேந்திர சர்மா,தான் போடடியிட்ட ஈலிங்சவுத் ஹால் (Ealing southhall) தொகுதியில் 'வெற்றி பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேபோல் பழைமைவாத கட்சியின முக்கிய வேட்பாளரான பிரீத்தி படேல், விதாம் (witham) தொகுதியில் போட்டியிட்டு 27,123 வாக்குகள் வித தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

வால்சால் சவுத் தொகுதியில் தொழிலாளர் கட்சியின் சார்பாக போட்டியிட்ட வலேரி வாஸ், தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் தனது தொகுதியை தக்க வைத்துக் கொண்டார்.

அக்கட்சியின்சார்பில் லண்டன் ஈஸ்ட் தொகுதியில் போட்டியிட்ட சீமா மல்கோத்ரா வெற்றி பெற்றுள்ளார். பழைமைவாத கட்சி சார்பில் வடக்கு பிரித்தானியாவில் உள்ள ரிச்மாண்ட் (Rich mond) தொகுதி யில் முதல் முறையாக தேர்தலில் போட்டியிட்ட ரிஷி சுனாக், தன்னை எதிராக களமிறங்கிய யு.கே.ஐ.பி. வேட்பாளர் மேத்யூ குக்கை விட 27,744 வாக்குகள் அதிகம் பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். (இ-5)

## டேவிட் கமரூனுக்கு ஒபாமா வாழ்த்து

(வோஷிங்டன்)

பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சிக்குத் தனிப் பெரும்பான்மை கிடைத்ததையடுத்து, டேவிட் கமரூன் (வயது48) மீண்டும் அந்த நாட்டின் பிரதமராகிறார்.



பிரிட்டன் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றதற்காக அந்நாட்டு பிரதமர் டேவிட் கமரூனுக்கு, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டுகளைப் போல, டேவிட் கமரூடன் இணைந்து தொடர்ந்து பணியாற்ற போவதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன். அமெரிக்கா – பிரிட்டன் நாடுகளிடையேயான உறவு மேலும்பலப்பட வேண்டும என ஒபாமா தனது வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார். (இ-5)

## இந்தியா, ரஷ்யாவுக்கு பயங்கரவாத அச்சுறுத்தல்

### பிரணாப் முகர்ஜி பேச்சு

(மொஸ்கோ)

அயல் நாடுகளில் இருந்து வெளிப்படும் பயங்கரவாதங்கள் இந்தியா மற்றும் ரஷ்யாவின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

ரஷ்யாவில் நடைபெறும் இரண்டாம் உலகப் போர் வெற்றி விழாவில் பங்கேற்பதற்காக 5 நாடகள் பயணமாக இந்திய ஜனாதிபதி பிரணாப் முகரஜி ரஷயா சென்றுள்ளார். மொஸ்கோவில் நேற்று முன்தினம் அவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.இவ்விழாவில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தெரிவிக்கையில்,

அயல் நாடுகளில் இருந்து வெளிப்படும் பயங்கரவாத அச்சுறுத் தலை



இந்தியாவும், ரஷ்யாவும் சந்தித்து வருகின்றன. இரு நாடுகளின பாதுகாப்புகதும் இது பொது பிரச்சினையாக உள்ளது. இதற்கு இருநாடுகளின் தீர்வு காண முடியாது சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பும் அவசியம்.

ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா நிரந்தர உறுப்பு நாடாக ஆவதற்கு ரஷயா தொடர்ந்து ஆதரவு அளிப்பது பாராட்டுக்குரியது. இந்திய வரலாற்றில் கடினமான தருணங்களில் ரஷயா தூண்போல நின்று உறுதுணையாக இருந்து வருகிறது. இந்திய நாட்டின் மிக சிறந்த நண்பராக ரஷய ஜனாதிபதி புடின் உள்ளார். இரு நாடுகளின் பல்கலைக் கழகங்கள், உயர்கல்வி நிறுவனாங்கள் போன்றவை பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டியது அவசியம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## தலைதூக்கும் தீவிரவாதம்

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவில் வீட்டில் வெடிகுண்டுகளை பதுக்கி வைத்திருந்த சிறுவனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாசவேலைகளில் ஈடுபடுவதற்காக மெல்பேர்ன் நகரின் புறநகர்பகுதியான கிரீன்வேலியில் உள்ள வீடடில் வெடிபொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து நேற்று முன்தினம் மாலை அங்கு மத்திய மற்றும் மாநில பொலிஸார் திடீர் சோதனை நடத்தினர். அப்போது, இரண்டு மாடிகள் கொண்ட அந்த வீடடின்ஒரு அறையில உயிர்ப்புள்ள 3 நாட்டு வெடிகுண்டுகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டன.

இதையடுத்து வெடிகுண்டு நிபுணர்களுக்கு தகவல் அளிக்கப்பட்டு அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்து வெடிகுண்டுகளை பாதுகாப்பாக செயலிழக்கச் செய்தனர்.

இதுதொடர்பாக அந்த வீட்டில் வசித்து வரும் 17 வயது சிறுவனை பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். குடும்பத்தினருக்கு தெரியாமல் வீட்டில் வெடிகுண்டுகள் வைத்திருந்தது விசாரணையில் தெரியவந்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் சிறுவர்கள தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபடுவது பொலிஸாரை அதிர்ச்சியடையவைத்துள்ளது. கடந்த மாதம் தீவிரவாத தாக்குதலுக்கு திட்டமிட்டதாக 5 சிறுவர்கள் கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா மனிதர்களையும் நம்பி விடுவது ஆபத்து. ஒருவரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து. - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பொதுத் தேர்தலை ரணில் விரும்பமாட்டார்

19ஆவது திருத்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பலமான வியூகங்களை அமைத்தார். அதில் 19 ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு ஆதரவு தர மறுத்தால், மறுநாளே பாராளுமன்றத்தைக் கலைப்பேன் என்பது முக்கியமானது.

இவ்வாறு மைத்திரி கூறியதற்குள் 19ஆவது திருத்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கு ஆதரவு தருவீர்களாயின் இப்போதைக்குப் பாராளுமன்றத்தைக் கலைக்க மாட்டேன் என்ற உட்பொருள் உள்ளது.

இதனைப் புரிந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த தேர்தலில் கதிரை கிடைக்குமோ இல்லையோ கிடைத்த கதிரையை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தனர். இதன் காரணமாக 19ஆவது திருத்த சட்ட மூலத்தை ஆதரித்து வாக்களித்தனர்.

இதுதவிர, 19ஆவது திருத்த சட்ட மூலத்திற்கான வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு முன்னதாக தனது கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி மைத்திரி சந்தித்தார்.

அன்புக்குரிய பாராளுமன்ற உறுப்பினர்களே! எனது அதிகாரத்தைக் குறைப்பதற்கு உங்களிடம் ஆணை கேட்கிறேன் என்றார். இப்படி மைத்திரி கூறிய போதுதான் பாராளுமன்ற உறுப்பினர்கள் விழித்துக் கொண்டனர்.

ஆ, ஜனாதிபதி மைத்திரி தனது அதிகாரத்தைக் குறைப்புச் செய்வதற்குத்தான் 19ஆவது திருத்தச் சட்ட மூலத்தைக் கொண்டு வருகிறார். எனவே நாங்கள் சந்தோசமாக வாக்களித்து எங்களின் பதவிக் காலத்தையும் நீடித்துக் கொள்வோம் என்று முடிவு செய்தனர்.

19ஆவது திருத்த சட்ட மூலத்தை நிறைவேற்றிய கையோடு பாராளுமன்றத்தைக் கலைப்பது மைத்திரியின் திட்டமாக இருந்த போதிலும் 19ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்காத சூழ்நிலை ஏற்படும் என்பதை அவர் எதிர்பார்த்திருக்கவில்லை.

இந்நிலையில், பாராளுமன்றக் கலைப்பை ஒத்தி வைப்பது சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கான ஒரு வழி முறையாக உணரப்பட்டது.

அதேநேரம் 19ஆவது திருத்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டதையடுத்து பிரதம வேட்பாளர் என்ற ஒரு விடயம் முதன்மை பெறுகிறது.

எனவே, பாராளுமன்றத்தை உடனடியாகக் கலைப்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு போதும் விரும்பமாட்டார். பாராளுமன்றத்தைக் கலைத்தால், கிடைத்த பிரதமர் பதவியை நான்கு மாதங்களில் பறி கொடுக்க வேண்டியதாக இருக்கும்.

அதேசமயம் அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் பிரதமர் பதவி ரணிலுக்கு கிடைப்பதற்கான சந்தர்ப்பங்களும் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

ஆக, பாராளுமன்றத்தைக் கலைக்க விடாமல் தடுக்கவேண்டும் என்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மிகவும் உறுதியாக இருந்திருப்பார்.

அதாவது குறைந்தது ஒரு வருடத்திற்கேனும் பிரதமர் பதவியில் இருப்பதற்குத் தன்னை அனுமதிக்க வேண்டும் என்பது ரணிலின் கோரிக்கையாக இருந்திருக்கும்.

இது தவிர, உடனடியாகப் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தும் போது மகிந்த ராஜபக்ஷ கம்பனி களத்தில் இறங்கி பொதுத் தேர்தலைத் தமக்குச் சாதகமாக்கவும் கூடும்.

ஆகவே, பாராளுமன்றக் கலைப்பை பிற்போடுவதன் மூலம் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என்ற அடிப்படையில், பொதுத் தேர்தலானது 2016ஐ தாண்டக் கூடும் என அனுமானிக்கலாம்.

எதுவாயினும் பாராளுமன்றக் கலைப்புக்கு முன்னதாக சிறையில் அடைக்கப்பட வேண்டியவர்கள் அடைபடுவார்கள் என்பது நூறுவீத உண்மை.

## தூர சேவைப் பேருந்து சங்கத்தின்

# புறக்கணிப்பு போராட்டம் கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் தூர சேவைகளை மேற்கொள்ளும் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய தூரசேவைச் சங்கங்களால் நாளை 11ஆம் திகதி மேற்கொள்ளப்படவிருந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் வடக்கு மாகாண சபைப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனின் ஆக்கபூர்வ நடவடிக்கைகளைத் தொடர்ந்து கைவிடப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக வட மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், யாழ்.மாவட்ட அரச அதிபர், இலங்கைப் போக்குவரத்து சபை அதிகாரிகள், யாழ்.தூர சேவைப் பேருந்து உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் ஆகியோருடன் யாழ்.மாவட்ட செயலகத்தில் கடந்த 7 ஆம் திகதி நடத்திய கலந்துரையாடலில் தனியார் போக்குவரத்து சேவைக்கு 60 வீத சேவையும் இலங்கைப் போக்குவரத்து சபைக்கு 40 வீதசேவையும் என்ற உயர் நீதிமன்ற தீர்ப்பிற்கு அமைவாக நேர அட்டவணை தயாரிப்பது என்றும் இவ் அட்டவணை தயாரிப்பதற்கான குழு ஒன்று நியமித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

அக்குழுவினால் இரண்டு கிழமைக்குள் ஒருங்கிணைந்த நேர அட்டவணை ஒன்று தயாரித்துக் கொள்ளப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்துக் கொண்டார்.

மேலும் ஏனைய கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்ட செயலகங்களிலும் இதே போன்ற கலந்துரையாடல்கள் கௌரவ அமைச்சரால் நடத்தப்பட்டு யாழ். மாவட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் போல் பொதுவான நேர அட்டவணை ஒன்றினை தயாரிப்பதற்கான குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் நவீன முறையில் தனியாருக்கு இலங்கைப் போக்குவரத்து சபைக்கும் பொதுவான பேருந்து தரிப்பிடம் ஒன்று அமைத்துத் தருவதாகவும் வட மாகாணப் போக்குவரத்து அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

அமைச்சரின் உறுதி மொழியினை ஏற்றுக் கொண்டு பணிப்புறக்கணிப்பை கை விடுவதாக யாழ்.தூர சேவை பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (இ-5)

# இரகசிய வதைமுகாம்கள் இலங்கையில் இல்லவே இல்லை

## இருப்பதான குற்றச்சாட்டை மங்கள மறுப்பு

(கொழும்பு)

இலங்கையில் இரகசிய வதை முகாம்கள் உள்ளன என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டினை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மறுத்துள்ளார்.

கொழும்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார். காணாமல்போன தங்களுடைய குழந்தைகளை தேடிக்கொண்டிருக்கும் பெற்றோர்களை சந்திப்பதற்கான வாய்ப்பு கடந்தவாரம் எனக்கு கிடைத்தது.

அதன் போது இரகசிய முகாம்கள் இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். ஆனால் அவ்வாறான எதுவும் இலங்கையில் இல்லை என்ற உத்தரவாதத்தை நான் அவர்களுக்கு வழங்கினேன். அவ்வாறான இரகசிய முகாம்கள் குறித்த விபரங்களை அவர்கள் வெளியிட்டால் அது குறித்து முழுமையான விபரங்களை அவர்கள் தந்தால் முழுமையான விசாரணைகள் இடம்பெறும் என தெரிவித்தேன் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவும் இரகசிய முகாம்கள் குறித்து ஒருவருக்கொருவர் முரணான கருத்துக்களை வெளியிட்டு வரும் நிலையிலேயே வெளிவிவகார அமைச்சரின் இந்த கருத்து வெளியாகியுள்ளது. (செ-11)

# காயங்களை கடற்கரை மணலிலும் நன்மைகளை கற்பாறைகளிலும் எழுதப் பழகுவோம்


## பரமபிதா காட்டிய பாதை

இன்றைய நற்செய்தியில் இயேசு நம்மோடு நட்பாக, நண்பனாக இருக்க ஆசைப்படுவதைப் பார்க்கின்றோம். உலகில் உறவின் முக்கிய இடத்தைப் பிடித்திருப்பது நட்பு. நண்பர்கள்தான் ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் செதுக்கும் சிற்பிகள் என்பார்கள். நட்பின் சிறப்பை உணர்ந்த "இயேசு, தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" என்றார். தன்னைக் காட்டிக் கொடுத்தவரையும் 'தோழா, எதற்காக வந்தாய்?" என்ற இயேசுவின் உயிரை உறைய வைத்த அந்த வார்த்தைகள் பகைவனையும் பதறவைத்து விட்டது. இவ்வாறு இயேசு, பகையைக் கூட நட்பாக மாற்றவேண்டும். இருக்கின்ற நட்பை, உயிரைக் கொடுத்தேனும் வளர்க்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

இன்று எங்கள் வாழ்க்கையை உடைத்து உருக்குலைப்பதும் நண்பர்களே என்பவர்களும் உண்டு. கவிஞன் ஒருவன்: இறைவா, என் பகைவனை நான் பார்த்துக்கொள்கிறேன். நண்பனிடமிருந்து என்னை நீ காப்பாற்று என்று கதறியதையும் கேட்டிருக்கின்றோம். உயிரை வாங்குகின்ற நட்பு பல வடிவங்களில் அலைவதைப் பார்க்கின்றோம். சுயநலம் என்ற போர்வையில், பணம் பதவி ஆசையில் காட்டிக் கொடுக்கும் துரோகங்கள் நட்பில் நடத்தேறுகின்றன. அத்துடன் நயவஞ்சகமாக போலி அன்பு காட்டி நண்பனை கொலைசெய்வோரையும் நாம் இன்று காண்கின்றோம்.

இந்த இடத்தில் ஒருமுறை நான் நட்பு பற்றி வாசித்த ஒரு கதையை சொல்லித்தான் ஆகவேண்டும்: இரண்டு நண்பர்கள் பாலைவனத்திற்கூடாக பயணித்துக் கொண்டிருந்தனர். பாதிவழியில் இருவருக்குமிடையில் வாக்குவாதம் உண்டாக திடீரென ஒருவர் மற்றவரது கன்னத்தில் பளாரென அறைந்தார். அப்பொழுது தாக்கப்பட்டவர் "இன்று எனது உற்ற நண்பன் எனது கன்னத்தில் அறைந்து விட்டான்" என்று மணலில் எழுதினார். பின்னர் இருவரும் பலைவனத்தில் நீர் பகுதியை காணும் வரை தொடர்ந்து நடந்து கொண்டே சென்றனர். இறுதியில் நீர் பகுதிக்குள் இறங்கி குளித்துக் கொண்டிருக்கும்போது அடிவேண்டியவர் சேற்றுக்குள் திடீரென மூழ்கத் தொடங்கினார். உடனே அறைந்தவர் அவரை மிகுந்த கஷ்டத்துடன் இழுத்தெடுத்து காப்பாற்றினார். அப்போது "இன்று எனது உற்ற நண்பன் எனது உயிரை காப்பாற்றினார் என்று எழுதினார். இதையும் கண்ணுற்ற அறைந்த நண்பன் "நான் உன்னை காயப்படுத்திய போது மணலில் எழுதினாய். இப்பொழுது ஏன் கற்பாறையில் எழுதினாய் என வினவினார்". அதற்கு மறுமொழியாக மற்றவர்கள் எம்மை காயப்படுத்தும் போது நாம் மணலில் எழுத வேண்டும். அதனை மன்னிப்பு என்னும் காற்று அங்கே தடயமில்லாது அழித்துவிடும். ஆனால் மற்றவர்கள் எமக்கு நன்மை செய்யும் போது கற் பாறையில் செதுக்கிவிடவேண்டும் அதனை எந்த புயல்காற்றும் அழித்து விடாது என்று பதில்கூறினார். மன்னித்து ஏற்கும் பண்பும் நட்பின் அடையாளம்தானே. நாம் இயேசுவை காயப்படுத்தும் போதெல்லாம் அரவணைத்திட முன் வந்தார். நம்மைத் தேடி வந்து கொண்டே இருக்கிறார். தேடி வரும் கடவுளை நாம் நாடிச் செல்லும்போது அங்கே நட்பும் அன்பும் உருவாகும். பாசக் கயிற்றினால் நாம் பிணைக்கப்படுவோம். காயங்களை மணலிலும் நன்மைகளை கற்களிலும் எழுதப் பழகுவோம்.

இன்றைய நற்செய்தி இயேசுவோடு ஒருவர் கொண்டுள்ள உறவை இரண்டு வடிவங்களில் காட்டுகின்றது எனலாம். "பணியாளர்" - "நண்பன்". எம் விசுவாசப்பயணத்தில் இந்த வடிவத்தில் ஏதாவது ஒன்று முன்னிலை பெறும் என்பது உண்மையே. அது தலைவன் - பணியாளர் உறவு இல்லது நண்பன் - நண்பன் உறவாகும். இயேசு நம்மோடு நண்பனாக இருக்க வே ஆசைப்படுவதை நற்செய்தியில் பார்க்கின்றோம்: "இனி நான் உங்களைப் பணியாளர் என்று சொல்லமாட்டேன். ஏனெனில் தம் தலைவர் செய்வது இன்னது என்று பணியாளருக்குத் தெரியாது. உங்களை நான் நண்பர்கள் என்றேன்". நட்பை வளர்ப்போம். உயிரைக் கொடுத்தும் நண்பனைக் காப்போம்.



தலைவன் - பணியாளர் உறவை முன்னிலைப்படுத்துவோர் நாம் இயேசுவின் முன்பு தகுதியற்றவர்கள் என்று கூறுகின்றனர். இதற்குத் தான் இயேசு "நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன்" என்கின்றார். நமது கிறிஸ்தவ வாழ்வும், நமது பணியும், நமக்கு இறைவன் தந்திருக்கிற தனிப்பட்ட அழைப்பு அனைத்தும் இறைவனின் கொடை. எனவே, இறைவனுக்கு நன்றியுள்ளவர்களாய் வாழக் கடமைப்பட்டிருக்கிறோம். அத்துடன், இறுதியாக எதற்காக இறைவன் நம்மை அழைத்திருக்கிறார் என்பதையும் நாம் சிந்திக்கவும் இன்றைய வாசகம் அழைக்கிறது. "நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன்".

இறைவன் நம்மைத் தேர்ந்து கொண்டதன் நோக்கம் நாம் பிறருக்குப் பயனுள்ள வகையில் கனி தரவேண்டும் என்பதற்காகவே. எனவே நேர்மையோடு, பிறருக்குப் பயன்தரும் வகையில் நாம் வாழ்வோம். பகைவரைகூட நண்பனாக மாற்றுவோம்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திரப் பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கதேசத்துக்கெதிரான டெஸ்ட் பாகிஸ்தான் அபார வெற்றி



வங்கதேச அணிக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் 328 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியுள்ளது.

வங்கதேசம்- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி கடந்த 6 ஆம் திகதி முதல் மிர்பூரில் நடைபெற்று வந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, அசர் அலி (226), யூனிஸ்கான் (148), அசாத் ஷபிக் (107) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் 6 விக்கெட் இழப்பிற்கு 557 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது.

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய வங்கசேதம் 2ஆவது நாள் ஆட்ட முடிவில் 107 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 5 விக்கெட்டை இழந்து தத்தளித்தது.

மூன்றாம் நாள் ஆட்டத்தை தொடர்ந்த வங்கதேசம் 203 ஓட்டங்களில் சுருண்டு பாலோ ஆன் ஆனது. ஆனால், பாகிஸ்தான் பாலோ ஆன் கொடுக்காமல் 2 ஆவது இன்னிங்சை தொடர்ந்தது.

அந்த அணி 41.1 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 195 ஓட்டங்களை எடுத்து டிக்ளேர் செய்தது.

இதனால் வங்கதேச அணிக்கு 550 ஓட்டங்கள் வெற்றி இலக்காக பாகிஸ்தான் நிர்ணயித்தது.

550 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் வங்கதேச அணி 2ஆவது இன்னிங்சை தொடங்கியது.

அந்த அணி நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 63 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

இம்ருல் கெய்ஸ் 16 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். தமீம் இக்பால் 32 ஓட்டங்களுடனும், மொமினுல் ஹக்யூ 15 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இந்நிலையில் நேற்று தொடர்ந்து ஆடிய வங்கதேச அணியில் தமீம் இக்பால் (42) நிலைக்கவில்லை. மக்முதுல்லா (2) வந்த வேகத்தில் நடையை கட்டினார்.

ஷாகிப் அல் ஹசன் (13) ஏமாற்றினார். முஸ்பிக்குர் (0), சவுமியா சர்கார் (1) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். நிதானமாக விளையாடி வந்த மொமினுல் ஹக்யூ (68) அரைசதம் கடந்து ஆட்டமிழந்தார்.

டய்சூல் இஸ்லாம் (10), சுவகாட்ட ஹொம் (39) ஆட்டமிழக்க, முகமது ஷாகிட் (14) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதனால் வங்கதேசம் 221 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதன் மூலம் 328 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகராகவும் தொடர் நாயகராகவும் பாகிஸ்தானின் அசர் அலி தெரிவானார். (க)



## சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III-2015

# திருநெல்வேலி YMHA ஐ வீழ்த்தி கே.சீ.சீ.சீ.கால் இறுதிக்கு தெரிவு







ஓர் இனிங்சில் (50 ஓவர்) 3 சதங்கள் சத்யன், உமாநாத், யதுசன்
2ஆவது விக்கெட் இணைப்பாட்டம் (248)சதீயன், உமாநாத்
3 ஆவது விக்கெட் இணைப்பாட்டம் உமாநாத், யனுதாஸ் (150)

சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III சுற்றுப்போட்டியில் இருந்து ஓர் அணியை தெரிவு செய்வதற்கான தகுதிகாண் போட்டிகள் 2 ஆவது சுற்றில் 8 ஆவது போட்டி கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கே.சீ.சீ.சீ. அணி திருநெல்வேலி YMHA அணியை 307 ஓட்டங்களால் வெற்றி பெற்று காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சீ.சீ.சீ. அணி 50 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 424 ஓட்டங்களை பெற்றது. சத்யன் 109, உமாநாத் -101, யனுதாஸ்-100, ஆதித்தன்- 26, வல்லவன்- 19 ஓட்டங்களை பெற்றனர். சுதா, நிமல்சன், சிவேந்திரன் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி YMHA அணி 25.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 117 ஓட்டங்களை பெற்றனர். பவன் 19, ஜெயராஜ்10,நிசான் 13, நிலாயன் 30 ஓட்டங்களை பெற்றனர். பார்த்தீபன் 01,யனுதாஸ்01, ஜெயரூபன் 04, சாம்பவன், வல்லவன் தலா 01 இலக்கினை கைப்பற்றினர்.கே.சீ.சீ.சீ. அணி பெற்ற 424 ஓட்டங்கள் இச்சுற்றுப் போட்டியில் 2 ஆவது அதிகூடிய ஓட்டங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சுற்றுப்போட்டியில் அதிகூடிய ஓட்டங்களை பெற்ற கழகம் சென்ற லைட்ஸ் விளையாட்டுக்கழகம் என்பது குறிப்பிடத்தக் கது. (க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சன்ரைசர்ஸ் ஐதராபாத் வெற்றி

ஐபிஎல் சீசன் 8-ன் நேற்றைய ஆட்டத்தில் டெல்லி அணியை வீழ்த்தி சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி வெற்றி பெற்றது. முன்னதாக நாணயச்சுழற்சி வென்ற சன்ரைசர்ஸ் அணி துடுப்பெடுத்து ஆட தேர்வு செய்தது. இதனையடுத்து களமிறங்கிய அந்த அணி 20 ஓவரில் 4 விக்கெட்டுகளை இழந்து 163 ஓட்டங்களை குவித்தது.

அந்த அணியின் தொடக்க வீரர்களாக ஷிகர் தவான் மற்றும் வோர்னர் இருவரும்களமிறங்கினர். 4-வது ஓவரிலேயே தவான் ஆட்டமிழக்க ஹென்ரிக்ஸ், வோர்னருடன் ஜோடி சேர 5-வது ஓவரின் முதல் பந்திலேயே வோர்னர் அவுட்டானார். அடுத்து மோர்கன் ஹென்ரிக்ஸ் கூட்டணி ரன் அடிப்பதை விட விக்கெட் விழாமல் பாதுகாப்பிலேயே குறியாய் இருந்தது. இதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கை சுமாராகவே இருந்தது.



11 மற்றும் 15 ஓவர்களில் முறையே மோர்கன் மற்றும் ஷர்மா இருவரும் அவுட்டாக ஹென்ரிக்ஸ் மட்டும் அதிரடியாக ஆடி 46 பந்துகளில் 74 ஓட்டங்கள் எடுக்க ஐதராபாத் அணி 20 ஓவர் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 163 ஓட்டங்கள் எடுத்தது. இதனையடுத்து 164 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய டெல்லி அணி 20 ஓவரில் 4 விக்கெட்டுகளை இழந்து 157 ஓட்டங்கள் எடுத்தது. எனவே ஐதராபாத் அணி 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

'போட்டியின் ஆட்ட நாயகனாக ஹென்ரிக்ஸ் தெரிவானார். (க)




# ரசல் அதிரடி

# பஞ்சாப்பை வீழ்த்தி கொல்கத்தா திரில் வெற்றி

பஞ்சாப் அணிக்கு எதிரான ஐபிஎல் போட்டியில் கொல்கத்தா அணி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

ஐபிஎல் தொடரில் நேற்று நடந்த லீக் ஆட்டத்தில் பஞ்சாப்- கொல்கத்தா அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணித்தலைவர் பெய்லி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.

தொடக்க வீரர்களாக களமிறங்கிய முரளி விஜய், மனேன் வோரா சிறப்பான தொடக்கம் கொடுத்தனர்.

முரளி விஜய் 28 ஓட்டங்களும், வோரா பொறுமையாக விளையாடி 39 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

பின்னர் களமிறங்கிய மக்ஸ்வெல் அதிரடி ஆட்டத்தை தொடர்ந்தார். 22 பந்துகளில் 43 ஓட்டங்கள் (3 சிக்சர், 4 பவுண்டரி) எடுத்தார். இதனால் அணியின் ஓட்டங்கள் மளமளவென உயர்ந்தது.


அடுத்து வந்த சஹா தன் பங்கிற்கு 25 பந்தில் 33 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார்.

குர்கிராட் சிங் 4 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, மில்லர் அதிரடியாக விளையாடி 11 பந்தில் 27 ஓட்டங்கள் (2 பவுண்டரி, 2 சிக்சர் ) எடுத்தார். அணித்தலைவர் பெய்லி களத்தில் இருந்தார்.

இதனால் 20 ஓவர் முடிவில் பஞ்சாப் அணி 5 விக்கெட் இழப்பிற்கு 183 ஓட்டங்களை எடுத்தது.

கொல்கத்தா சார்பில், சுழலில் அசத்திய சுனில் நரைன் 4, ரசல் 1 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பின்னர் சற்று கடின இலக்கை நோக்கி களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு உத்தப்பா (17), அணித்தலைவர் கம்பீர் (24) ஓரளவு நல்ல தொடக்கம் கொடுத்தனர்.




மணீஷ் பாண்டே (22) நிலைக்கவில்லை. சூரியகுமார் (9) ஏமாற்றம் அளித்தார்.

யூசுப் பதான் அதிரடியாக விளையாடி 29 ஓட்டங்கள் (3 சிக்சர், 1 பவுண்டரி) எடுத்தார்.

மறுமுனையில் விளாசித் தள்ளிய ரசல் அரைசதம் கடந்தார். அவர் 21 பந்தில் 51 ஓட்டங்கள் (4 சிக்சர், 5 பவுண்டரி) குவித்தார்.

ஜொகன் போத்தா (2), பிராட் ஹாக் 5 ரன்-அவுட் முறையில் வெளியேற, சாவ்லா 18 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

19.5வது ஓவரில் கொல்கத்தா அணி 9 விக்கெட் இழப்பிற்கு 184 ஓட்டங்கள் எடுத்தது.

இதனால் 1 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வீழ்த்தி திரில் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக கொல்கத்தா அணியின் ரசல் தெரிவானார். (க)

## தமிழ் இனப்படுகொலை வாரம்...

தீர்மானித்துள்ளோம்.

ஆகவே வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள எட்டு நிர்வாக மாவட்டங்களிலும் வடக்கில் உள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு யாழ்ப்பாணம்,மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலை, மட்டக்களப்பு அம்பாறை உட்பட எட்டு மாவட்டங்களிலும் அனுஷ்டிக்க வேண்டும் என நாம் தீர்மானித்திருக்கின்றோம்.

ஆகவே இந்த படுகொலைகளை நினைவுகூரக்கூடிய விதத்திலே மக்கள் பெரிய அளவிலே துணிந்து முன்வந்து அனுஷ்டிப்பதன் ஊடாகத்தான் நாங்கள் சர்வதேசத்திடம் நீதியை கோரி நிற்கின்றோம் எங்களுக்கு ஒரு அரசியல் தீர்வு தேவை என்ற விடயத்தை பொறுப்பு கூறலை இலங்கை அரசு உறுதிப்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட எங்களுடைய மக்களுக்கு நிவாரணம், நீதி கிடைக்க வேண்டும் என்பதை உலகத்திற்கு சொல்லக்கூடிய விதத்தில் மக்கள் ஆர்ப்பரித்து பல்லாயிரக்கணக்கில் எழவேண்டும்.

குறிப்பாக முள்ளிவாய்க்காலுக்கு அண்மையில் விஜயம் செய்த அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலர் உயிரிழந்த மக்களுக்கு மலர் அஞ்சலி செலுத்தியுள்ளார். அவர்கள் செய்தது போன்ற அஞ்சலியை நாமும் முள்ளிவாய்க்கால் உட்பட அனைத்து இடங்களிலும் அஞ்சலி செலுத்துவது எந்த விதத்திலும் எந்த சட்டத்தையும் மீறும் செயலாக அமையாது.

அவ்வாறு நாம் அஞ்சலி செலுத்துகின்ற போது இலங்கை அரசின் படைகள் தடுக்குமாக இருந்தால் அதனை அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகம் நன்றாக புரிந்து கொள்ளும். ஆகவே எங்களுடைய மக்கள், தமது உறவுகளை பறிகொடுத்த மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு அனைத்து மாவட்டங்களிலும் ஒன்று கூடி உரிய இடங்களில் நடைபெறுகின்ற தமிழ் இனப்படுகொலை வார நிகழ்வுகளில் கலந்து கொள்வதோடு தாமும் அஞ்சலிகளை செலுத்த வேண்டும்.

இவ்வஞ்சலியை இலங்கை ஆட்சியாளர்கள் எவ்வளவு வன்முறைகள் பிரயோகித்து தடுத்தாலும் எமது மக்கள் கொல்லப்பட்டதனை அனுஷ்டித்தே காட்டுவோம். ஆகவே மக்கள் அச்சமுறாமல் கடந்த காலங்களில் இருந்த நிலைமைகளை விட இன்று சர்வதேசத்திற்கு அடிபணிந்து போகவேண்டிய நிலைமையை சர்வதேசம் உருவாக்கியுள்ளது.

ஆகவே இந்த சூழ் நிலையை பயன்படுத்தி கொல்லப்பட்ட எமது ஆயிரம் ஆயிரமுறவுகளை நினைவுகூருவதற்கு அவர்களுக்கு விளக்கேற்றி சுடரேற்றி அஞ்சலி செலுத்த முன் வர வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்என்றார்அவர். (செ-4)

## சர்வதேச நிபு...

பூர்வாங்க பணிகளை ஆரம்பிப்பதற்காக, காணாமல் போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையும் இந்தக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்காணாமல்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் உள்ள விடயங்களை இந்த சர்வதேச நிபுணர்கள் குழு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

இலங்கையின் உள்ளக விசாரணைக் குழுவுக்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளுள் மனிதவுரிமை மீறல்கள் சம்பந்தமாக கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளை ஆராய்ந்தே எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இந்த சர்வதேச நிபுணர் குழு தனது அறிக்கையை வெளியிடவுள்ளது.

ஜெனிவாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கும்வகையிலேயே இந்த அறிக்கை வெளியிடப்படவுள்ளதாக தெரிய வருகிறது.

வடக்குக் கிழக்கில் காணாமல் போனோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காணாமல் போனோர் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக ஆணைக்குழு ஒன்றை அமைத்திருந்தார்.

காலப்போக்கில் மனிதவுரிமை விவகாரங்கள் தொடர்பில் ஆராயும் நோக்கில் அதன் விடயப் பரப்பை விஸ்தரித்து, அதற்கு ஆலோசனை வழங்குவதற்காக டெஸ்மன் டி சில்வா தலைமையில் அறுவரடங்கிய சர்வதேச நிபுணர்கள் குழு ஒன்றையும் அவர் அமைத்திருந்தார்.

இந்நிலையில் இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்பும் இந்தக் குழு வன்பணியைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு புதிய அரசும் ஒப்புதல் வழங்கி, அதன் பதவிக்காலத்தை நீடித்திருந்தது.

அதேவேளை, காணாமல் போனோர் தொடர்பில் கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு அடுத்த வாரமளவில் 4 விசாரணைக்குழுக்கள் அமைக்கப்படவுள்ளதாகவும், ஒரு குழுவுக்கு நான்கு பேர் என்ற அடிப்படையில் 16 அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள்வெளியாகியுள்ளன. (செ-11)

## சுதந்திரக் கட்சி...

குருநாகல் வெலகெதர மைதானத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மகிந்தவுக்கு ஆதரவான கூட்டத்தில் அவர் கலந்து கொள்ளாத நிலையில் இக்கருத்தை அங்கு கடிதம் மூலம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த வெளிப்படுத்தியுள்ளார்.

அக் கடிதத்தில் மகிந்த ராஜபக்ஷ கூறுகையில், இன்று உங்கள் முன் நான் சில அரசியல் காரணங்களால் சமுகமளிக்க முடியாமை குறித்து வருந்துகிறேன்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஐந்து லட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் உங்கள் குருநாகல் மாவட்டத்திலிருந்தே எனக்கு கிடைக்கப்பெற்றிருக்கின்றன. அந்த வகையில் உங்களின் பேராதரவுக்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

விடுதலைப்புலிகளைத் தோற்கடித்து நாட்டிற்கு முழுமையான சுதந்திரத்தை பெற்றுக்கொடுத்த என்மீது பழிவாங்கும் வகையில் வீண்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான தற்போதைய அரசினால் எனக்கும் என் சார்ந்தவர்களுக்கும் எதிராக அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

எப்படி இருப்பினும் நான் சுதந்திரக்கட்சியின் பிரதிநிதித்துவத்தை கொண்டவன். அதை யாரும் மறுக்க முடியாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின்மேடையில் நான் விரைவில் தோன்றுவேன். இதற்கான திகதியை மக்களான நீங்களே தீர்மானிப்பீர்கள்.

மற்றுமொரு தருணத்தில் உங்களை நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும் என காத்திருக்கிறேன் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது மக்களுக்கான கடிதத்தில் தெரிவித்தார்.

இச் செய்தியை முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும வாசித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## பிரான்...

கொல்களத்தில் 113 கடா ஆடுகள் பலியிடப்பட்டன.

அதேபோன்று வெட்டப்படும் கடாக்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. பரிசோதனைக்கு உட்படுத்தப்படாத கடாக்களை வெட்ட அனுமதி வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் 80க்கு மேற்பட்ட கடாக்கள் திருப்பிக்கொண்டு செல்லப்பட்டன.

ஆடு பலியிடப்பட்ட போது பொலிஸாரும் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மு.பிரதி...

அருளானந்தம் (வயது 61) உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை வேளை பருத்தித்துறை தம்பசிட்டி 1-ம் கட்டை வீதி ஊடாக யாழ்.வீதிக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்த பிரஸ்தாப நபரை வடக்கு மாகாண கல்வி அமைச்சிற்கு சொந்தமான பஸ் பின்புறமாக வந்து வேகமாக மோதித்தள்ளியுள்ளது.

இதில் தூக்கி வீசப்பட்டு வீதியில் தலை அடியுண்டு வீழ்ந்த நிலையில் சம்பவ இடத்திலேயே அவர் பரிதாபகரமாக மரணமானார்.

சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் மோட்டார் சைக்கிளை திடீரென வீதிக்கு திருப்ப முற்பட்டவேளையே விபத்து இடம்பெற்றதாக கூறுகின்றனர்.

சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் குறித்து பஸ்ஸின் சாரதியை கைது செய்துள்ளதோடு விபத்து குறித்து விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை விபத்து நடந்த இடத்திற்கு பருத்தித்துறை நீதவான் மா.கணேசராசா நேரில் சென்று விசாரணைகளை நடத்தியிருந்தார். (செ-19,60)


# வீடு வாடகைக்கு

732, ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரேசன் சந்திக்கு அருகாமையில் மூன்று அறைகளுடன் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. (436)

தொடர்புகளுக்கு :- 0771736689 0772844970

# தங்குமிட வசதி

வெள்ளவத்தையில் A/C, Non A/C உடனான தனி அறைகள் வாடகைக்குப் பெற்றுக்கொள்ள இன்றே அழையுங்கள். யாழ்.மகால் Rest

தொடர்புகளுக்கு :- 19/1, சுவி சித்தாரா றோட், வெள்ளவத்தை, கொழும்பு-06 (065)

T.P :- 0113158398, 0770260180, 0773074477

# கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் சிவன் கோயிலுக்கும் மனோகரா சந்திக்கும் இடையில் கடை வாடகைக்கு உண்டு. (419)

மேலதிக விபரங்களுக்கு : 0775905166

# விற்பனைக்கு

வல்வெட்டி பருத்தித்துறை - யாழ்ப்பாண வீதியில் வீட்டுடன் கூடிய 9 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (423)

தொடர்புகளுக்கு :- 0755605510


## எறும்பாகி...

றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் அவ்வாறு செய்திருக்காவிட்டால இன்றும் ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷவும், பாதுகாப்பு செயலாளராக கோத்தபாய ராஜபக்ஷவும் தான் இருந்திருப்பார்கள் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

திருடர், மோசடிகாரர்களை விரபடியடிப்பதற்கு பிரதான இரு கட்சிகளுக்கும் அவசியமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் திருடர்களில் பெரிய திருடர்களை கைது செய்வதில்லை. அது நல்லாட்சிக்கு எதிரான ஒன்றாகும். அன்று மகிந்த மிக உயரமான ஒரு இடத்திலே இருந்தார், மக்களை அன்று எறும்புகளை போல் நடத்தினார். ஆனால் இன்று மகிந்த எறும்பாகிவிட்டார். மக்கள் உயரமான இடத்திலே இருக்கின்றார்கள் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## மைத்திரி...

துக் கொண்டு முன்னோக்கி செல்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்திய பிரதமர் மோடியும் கமரூனுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து மோடி தனது டுவிட்டர் வலைத்தளத்தில், 'மறுபடியும் நீங்கள் தேர்தலில் வெற்றிபெற்றதற்காக எனது வாழ்த்துகள்' என்று குறிப்பிட்டுள்ளார். (செ-11)


# மரண அறிவித்தல்

## அமரர் சபாரட்ணம் விக்னேஸ்வரி



பலாலி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், அப்பையா லேன், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்ணம் விக்னேஸ்வரி 09.05.2015 நேற்று சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - நீலாம்பாள் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - கண்மணி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற Dr. தங்கராசா, காலஞ்சென்ற இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சபாரட்ணம் (ஓய்வு பெற்ற மேற்பார்வையாளர், நீர்ப்பாசன இலாகா, யாழ்.மாநகரசபை) அவர்களின் அன்பு மனைவியும் கௌசலாதேவியின் பாசமிகு தாயாரும் சந்திரகுமார் (இளைப்பாறிய முகாமையாளர், இலங்கை வங்கி, திருநெல்வேலி) அவர்களின் அன்பு மாமியாரும் சுதர்சன் - ஜெகபாலினி (கனடா), ருஷாந்தன் (Abans Finance Jaffna), பிரஷ்ஷிக்கா - குகப்பிரியன் (லண்டன்), தினுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆருஷன் (கனடா), அக்ஷறா (கனடா), அஜந் (லண்டன்), அட்சிகா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் சந்திரகௌரீசன், பவானி, ஜெயந்தி, பஞ்சநிதி, சாந்தகுமாரி, தயாநிதி, கலாநிதி, யோகநிதி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10.30 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : சந்திரகுமார் (மருமகன்)

தொ.பே : 0212213177 (C-942)

'பிரஜிஸ்தன்'
அப்பையா லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

# ALLIANCE FRANÇAISE DE JAFFNA

## பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்



- வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.
- உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.
- INTERNATIONAL DIPLOMAS.
- ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)

வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள் (446)

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

# Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றது.

- French, Italian, English (A-I Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

(C-928)

**Vivekananda Academy**

அனைத்து புதிய வகுப்புக்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

(Gov. Reg.No: W/A 76795)

Tel: 0213216928, 0774842464 ,0212220393

# cctv துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் வாய்ப்பு



| ஒரு நாள் செயன்முறை பயிற்சி நெறி | 4 நாட்கள் வதிவிட பயிற்சி நெறி |
|---|---|

**CCTV, PABX Intercom, Network Cabling & Wireless**



- CCTV Camera Installation
- Cabling for CCTV Camera

- PABX Intercom Installation
- Cabling for PABX System

- Structured Network Cabling
- Wireless Router Installation & Configuration



**CCTV, PABX Intercom Fiber & Copper Cabling Access Control System**

- Copper Cabling with Practicals
- Fiber Cabling with Practicals

- CCTV Camera Installation
- Cloud Configuration
- Mobile & Remote Monitoring
- DDNS Configuration
- Backup & Access Permission
- DVR/NVR & Hard Disk Configuration
- IP Camera Installation & Configuration

- PABX Intercom Installation
- Key Phones Configuration
- Smart Home Installation
- Access Control Systems
- Security Alarm Systems
- FingerPrint Access



* 12 வருட அனுபவம்வாய்ந்த ஆசிரியர் குழாம்
* தொழிற்துறை அனுபவம் வாய்ந்த வல்லுனர்கள்
* குறைந்த கட்டணம்
* Real Equipments இனால் பயிற்சி வழங்கப்படும்

* உணவு மற்றும் தங்குமிட வசதி வழங்கப்படும்
* இலவசமாக கருவிகள் வழங்கப்படும்
* WinSYS இனால் அங்கீகாரம் வழங்கப்பட்ட சான்றிதழ்

## Hello 077-3013060

**WinSYS NETWORKS®**

*The network security training provider of the nation*

#77, Clock tower Road, Jaffna
www.winsys.lk | info@winsys.lk

BRANCHES
Colombo : 0777-259927
Kandy : 0777-047708
Batticaloa : 0777-832871

(C-934)

# தூக்கணம்

புத்தம் புதிய வடிவங்கள், எங்கும் இல்லாத வடிவங்கள்

எமது காட்சியறைகளில் பார்வையிடலாம்



வவுனியா யாழ்ப்பாணம்

(C-941)

பிரணவன் என்ரபிறைசஸ்

635, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 077 3818799

SPEED LANKA EXPRESS



# வெளிநாடுகளுக்கான

## தபால் பொதிகள் சேவை

- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- வெளிநாடுகளில் இருந்து பொதிகளை பெற்றுக்கொள்ளும் வசதி

**Speed Lanka Express (Pvt) Ltd.**

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (914)

0776217926, 021 2217180

www.speedlanka.net


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி
சங்குநாதம்
Sankunatham
வள்ளுவர் ஆண்டு 2046 10.05.2015 தொலைபேசி : 021 222 3378
நாதம் 14



# மகிந்த - மைத்திரி சந்திப்பு புது வியூகத்தின் ஆரம்பம்




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த-மைத்திரி சந்திப்பு புது வியூகத்தின் ஆரம்பம்


குருஷேத்திரம்

இலங்கை வேந்தன் இராவணன் அசோகவனத்தில் இருக்கும் சீதையைத் தரிசிக்கச் செல்கிறான். தரிசிப்பின்போது தன் விருப்பத்தை நிறைவேற்றுமாறு வேண்டுதல் செய்வதே அவனின் நோக்கம்.

இராமனையே நினைத்திருக்கும் சீதைக்கு இராவணன் மீதுகடுங்கோபம். அதேநேரம் சீதையிடம் செல்லும் இராவ்ணனை தேவ களம் புகுந்து இறந்தபோதும் சீதை மீது கொண்ட ஆசையில் இம்மியும் குறைவு ஏற்படவில்லை என்பதுதான் இங்கு விசித்திரமான உண்மை.

அண்ணா நான் போர்க் களம் செல்கிறேன். நான் இறந்துவிட்ட செய்தியை நீ அறிந்தபின்னராயினும் சீதையை விட்டிடு என்று இரக்கிறான் கும்பகர்ணன். புத்தி சொல்லக்கூடிய தம்பி இருந்தும் அண்ணன் இராவணன் அழிந்தான் என்பதுதான் சோக மான கதை.

இத்தகையை அழிவுகளுக்கும் இழப்புக்களும் அடிப்படை விதி என்று கூறுவதைவிட ஆசையும் பிறர்க்குத் துன்பம் இழைப்பதால் ஏற்படும் பாவமுமே காரணமாகிவிடுகிறது என்ற உண்மை உணரப்பட வேண்டும்.



ஆசை ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வி என்ற செய்தியை வரலாற்றுப் பதவியாக்கியது.

இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்து வீதியின் இருமருங்கிலும் மாலைகளோடு மக்கள் காத்திருப்பர். தோல்வி யோடு வீடு சென்றதால் அம்பாந்தோட்டை மக்கள் இரு கைகளையும் தலையில்

ஆம், மகிந்தவின் தம்பி பசில் ராஜபக்ஷ சிறையில் அடைபட்டுக்கிடக்கிறார். அடுத்த தம்பி கோத்தபாய ராஜபக்ஷ விசாரணைகளுக்குச் சென்று வருகிறார். எனினும் மகிந்த ராஜபக்ஷவின் அண்ணன் சமல் ராஜபக்ஷ எந்தத் தளம்பலும் இல்லாமல் சபாநாயகர் என்ற பதவியில் நிலையாக இருக்கிறார்.

மைத்திரியின் ஆட்சியிலும் சமல் ராஜபக்ஷவுக்கு எவரும் அவப்பெயர் சூட்டவில்லை. இதிலிருந்து மகிந்த மீதான ஊழல் குற்றச்சாட்டு வேண்டுமென்று சோடிக்கப்பட்டதல்ல என்பது நிரூபணமாகிற தல்லவா?

எதுவாயினும் ஜனாதிபதித் தேர்தலில் தோற்றதன் காரணமாக தனக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களில் இருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்கான வியூகங்களை மகிந்த ராஜபக்ஷ அமைப்பார் என்பது நிறுதிட்டமான உண்மை.

இதன் ஒரு கட்டமாகவே அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தார். சந்திப்பு தோல்வியில் முடியும் என்பது மகிந்தவுக்கு நன்கு தெரியுமாயினும் தனது வியூகத்தைப் பலமாக அமைப்பதற்கு மைத்திரியுடனான சந்திப்பு அவசியம் என்று மகிந்த கருதியிருந்தார்.

மகிந்த-மைத்திரி சந்திப்புத் தோல்வியில் முடிந்ததாயினும் அந்தத் தோல்வியில் இருந்து மகிந்த மற்றொரு வியூகத்தை அமைப்பார். அது தனிக்கட்சியை ஆரம்பித்து பிரதம வேட்பாளர் பதவியில் போட்டியிடுவது என்பதாக இருக்கும்.

எனினும் மகிந்தவின் வியூகத்தை உடைக்க மைத்திரியும் ரணிலும் பிரம்மாஸ்திரத்தை ஏவவே செய்வர்.

## பெண் ஆசையால் அழிந்த இராவணனும் பதவி ஆசையால் சீரழிந்த மகிந்தவும்

லோகத்துப் பெண்களும் கடைக்கண் கொண்டு பார்த்ததாகக் கம்பன் கூறுவான்.

எத்தனையோ அழகுநிறை பெண்கள் இராவணனின் பார்வைக்காக ஏங்கி வரம் கிடக்க இராவணனோ சீதைக்காக வரம் கிடக்கிறான். இதுதான் உலகம்.

அசோகவனத்தில் இருக்கும் சீதையிடம் தன் விருப்பத்தை இராவணன் கூறும் போது சீதை அவனைப் பார்த்து நீ ஏழை என்று பகர்கிறாள்.

எல்லா வளமும் பொருந்திய இராவணனுக்கு ஏழை என்ற சொற்பதம் எங்ஙனம் பொருந்தும். இங்குதான் கம்பனின் கவித்துவம் மேலோங்குகிறது. ஏழை என்பது பொருளாதாரத்தோடு மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. அறிவியல்; பண்பாட்டியல்; பழக்கவழக்கத்தில் பற்றாக் குறை இருந்தால் அங்கும் ஏழை என்ற பதம் பிரயோகப்படுத்தக்கூடியது.

ஆக, இராவணன் அறிவில் ஏழையாக இருந்தான். இதனால் பிறர்மனை நோக்கா பேராண்மை அவனிடம் பஞ்சமாகவே இருந்தது. எத்தனையோ சுகபோகங்கள் இருந்தும் சீதை மீது அவன் கொண்ட ஆசையால் அவன் வம்சமே அழிந்து போயிற்று. தம்பி கும்பகர்ணன், மகன் இந்திரசித்து இவர்களெல்லாம் போர்க்

இத்தகைய அழிவுகளும் அதற்குக் காரணமான ஆசைகளும் இலங்கை ஆட்சிப்பீடங்களில் இடையிடையே விஸ்வரூபமெடுத்துக் காட்டவே செய்கிறது.

ஆம், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்தவர். பதவியில் இருந்தபோது அவர் எவ்வ



ளவு தொகையை மோசடி செய்தார் என்ற புள்ளிவிபரங்களை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர வெளிப்படுத்தியிருந்தார்.

விடுதலைப்புலிகளைத் தோற்கடித்தவர் என்ற பெரும்புகழ் தென்னிலங்கையில் அவருக்கு இருந்ததாயினும் மூன்றாவது தடவையும் ஜனாதிபதியாக இருக்க வேண்டும் என்ற பதவி

விட்டு அரசியலிலிருந்து ஓய்வுபெறுகிறேன் என்று மகிந்த அறிவித்திருப்பாராயின் அவரின் பிரியாவிடைக்காக தென்னிலங்கை இந்திரவிழாக்கோலம் பூண்டிருக்கும்.

என்ன செய்வது புத்திமதி சொல்லக்கூடிய தம்பி இருந்தும் இராவணன் அழிந்தான் எனில் அழிவான சிந்தனை கொண்ட தம்பியர் இருந்தால் அண்ணனுக்கு ஏற்படக்கூடிய அழிவு பலமடங்காகும் என்பதற்கு மகிந்த ராஜபக்ஷவின் நிலைமை நல்ல எடுத்துக்காட்டு.

பதவி ஆசை கொண்ட மகிந்த ராஜபக்ஷவுக்கு தேர்தலில் ஏற்பட்ட தோல்வி என்பது எதிர்பார்க்காத ஒன்று. இரண்டு தடவையோடு வீடு சென்றிருந்தால்

வைத்து அழுதனர்.

ஏன் இப்படியொரு அழுகை. மகிந்த உயிரோடுதானே இருக்கிறார் என்றால் அதுவல்ல அழுகைக்கான காரணம். தேர்தலில் தோற்றதால் இனி மகிந்தவுக்கு கெடுகாலம் என்பதாலேயே அம்பாந்தோட்டை மக்கள் அழுதனர்.

தோற்று வெளியேறுதல் என்பதும் ஆட்சிக் காலம் முடிந்து வீடு செல்வதென்பதும் வேறுபட்டவை. தோற்றால் ஆபத்து. ஆட்சிக்காலம் முடிந்தால் அது நிறைவு.

எனவே மகிந்த ராஜபக்ஷவின் ஆசை அவரை ஆபத்திற்குள் இழுத்து விழுத்தியது. இந்த ஆபத்தை ஏற்படுத்துவதில் அவர் தம்பியர்களுக்கும் நிறைந்த பங்குண்டு. அண்ணன் சமல் ராஜபக்ஷ விபூஷணன் போல நடந்து கொண்டதால் சபாநாயகரை மாற்றுங்கள் என்ற கோஷம் இதுவரை எழவில்லை.

ஆக, நல்லவர்களை இந்த நாடு விரும்பும். நல்லவர்களுக்கு எதிராக கெட்டவர்களும் குற்றம் சாட்டார்கள் என்பதற்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நல்ல உதாரணம்.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## யாழ். பல்கலைக்கழகத்தில் கையெழுத்து மோசடியாம்



ஆலடிப்பிள்ளையார் கோவிலில் பண்டிதர் பரமலிங்கத்தின் சொற்பொழிவு நடந்து கொண்டிருக்கிறது. மஞ்ஞைகள் நடமிடும் மாதோட்டம் என்ற பொருளில் பண்டிதரின் தெய்வீகப் பேருரை தொடர்கிறது.

*நத்தார் படை ஞானன் பசு...* மன்னார் மாதோட்ட நன்னகரில் வீற்றிருக்கும் கௌரி அம்பாள் உடனுறை கேதீச்சரநாதன் கோயில் கொண்ட திருக்கேதீச்சரம் தேன்பொந்து என்று நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் புகழப்பட்ட தலம். பாடல் பெற்ற ஷேத்திரம் என்ற பெருமைக்குரிய திருக்கேதீச்சரத்தில்...

இப்படிப் பண்டிதரின் சொற்பொழிவு நீண்டு நிறைவுற்றது. தெய்வீகப் பேருரையைத் தொடர் முடிவுற்றதும் ஆலடி மாநாடு கூடியது.

**விதானையார்:** என்ன பண்டிதர் ஐயா ஆலடிப்பிள்ளையார் கோயிலில் திருக்கேதீச்சரத்தைப் பற்றிப் பேசினீர்கள். என்ன சங்கதி?

**பண்டிதர்:** அதையேன் கேட்கிறியள் விதானையார். திருக்கேதீச்சரத்தான்ர நிதியில பெரியதொரு மோசடி நடந்திருப்பதாகத் தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன.

**கங்காணி:** என்ன? திருக்கேதீச்சரத்தில நிதிமோசடியோ?

**பண்டிதர்:** ஓம் கங்காணியார். மன்னார் மாதோட்டத்தில உள்ள திருக்கேதீச்சரத்துக்கு மலேசியா நாட்டில வாழ்ந்த விசுவப்பா என்ற சிவபக்தர் அந்த நாட்டிலதான் முதலீடு செய்த பங்குகளை ஆலயத்திற்கு நன்கொடையாகக் கொடுத்துள்ளார்.

மலேசியாவில் உள்ள 11 கம்பனிகளில் உள்ள 108674 பங்குகள் இப்படி நன்கொடையாகக் கிடைத்துள்ளது. இந்தப் பங்குகளிலதான் மோசடி நடந்துள்ளதாம். இது தொடர்பில ஐந்து பேர் கொண்ட குழுவொன்று கையொப்பமிட்டு அறிக்கை வெளியிட்டுள்ளது.

**வாத்தியார்:** என்ர சிவனே! சிவ சொத்தில கை வைத்தால் குலநாசமல்லோ நடக்கும் என்ற உண்மை இவையளுக்குத் தெரியாமல் போயிற்றுதோ

**விதானையார்:** ஆலய நிர்வாகங்களில இருக்கிறவியள் இப்படியான மோசடியில இறங்கினால் தர்மம் அறுந்துபோயிடும்.

**மூப்பர்:** அதுசரி பண்டிதர் ஐயா இந்த நிதி மோசடி தொடர்பில விளக்கம் விசாரணை ஏதும் நடக்குதோ.

**பண்டிதர்:** விசாரணையள் நடக்கிறதாக் கேள்வி இருந்தும் என்ன செய்யிறது. வல்லவன் பம்பரம் மணலிலும் சுத்துதல்லோ. விளக்கம் விசாரணைகளை இருட்டடிப்புச் செய்யத் திரைமறைவில முயற்சி நடப்பதாகவும் கேள்வி.

**வாத்தியார்:** பாடல் பெற்ற திருத்தலம் என்ற பெருமையோடு நாங்கள் இருக்க, அங்க கண்களை மூடிக்கொண்டு நிதிமோசடி நடந்திருக்கு. என்ன கெடுகாலமோ தெரியாது. எங்கட சில இந்து ஆலயங்களில நிதி மோசடி என்பது சர்வ சாதாரணமாக நடக்குது. இது தொடர்பில விசாரணை நடத்திறதுக்கு ஆன அமைப்பும் இல்லை. இறைவன் மீதுகொண்ட அதீத நம்பிக்கையால சனங்கள் தங்கட சொத்துக்களை, பணங்களை கோயில்களுக்கு வழங்கினால் நடக்கிறது நிதி மோசடியாக இருக்குது.

படிச்ச சனங்கள் இப்படி எண்டால் நாளை எங்கட சந்ததிக்கு வழிகாட்டுறது யார் என்ற கேள்வியல்லோ எழும்.

**மூப்பர்:** என்ன? படிச்ச சனங்களோ! வாத்தியார் படிப்பென்ன? படிப்பு. அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர் மக்கட் பண்ணில்லாதவர் என்று வள்ளுவன் அழகாகச் சொல்லியல்லோ இருக்கிறான்.

எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில நடந்த கொடுமை தெரியாதோ?

**கங்காணி:** என்ன மூப்பர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில என்ன நடந்தது?

**மூப்பர்:** கங்காணியார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்திட்ட 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி ஏதோவொரு விடயத்திற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட கையொப்பப் பிரதிகளை வேறவேற தேவைக்காக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் பயன்படுத்தியுள்ளதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவர் இராசகுமாரன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

**வாத்தியார்:** என்ர பரமேஸ்வரப் பெருமானே புத்திஜீவிகள் என்று தங்களைச் சொல்லுறவியள் இப்படிச் செய்தவியளோ!

**பண்டிதர்:** வாத்தியார் இந்த வேலையள் செய்யிறதில புத்திஜீவியள், வேற என்ன? படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, புத்தம் புதிய தொழில்முயற்சி கள் இப்படி ஏதேனும் ஆய்வுகளோ நடக்குது. ஏதோவொரு தேவைக்காக முந்தியெடுத்த கையொப்ப பிரதிகளைத் தங்கட சுயலாபங்களுக்காகவும் பயன்படுத்திறதிலதானே எங்கட புத்தியள் செலவாகுது.

**கங்காணி:** அது சரி பண்டிதர் இப்படியான மோசடி வேலை செய்யிறவர்களுக்கு என்ன தண்டனை.

**பண்டிதர்:** என்ன தண்டனை. கொடுக்கிற பேராசிரியர் பட்டத்திற்கு இதுவும் ஒரு தகைமையாகக் கருதப்படும்.

எவ்வளவோ கஷ்டப்பட்டுப் படித்த பிள்ளையளை வெளியில துரத்திப்போட்டு, பந்தம் பிடிச்சவியளுக்கும் செல்வாக்குள்ள பெற்றோரின் பிள்ளையளுக்கும் விரிவுரையாளர் பதவி கொடுத்தால் இப்படித்தான் நிலைமை இருக்கும்.

இனிமேலாவது பல்கலைக்கழக விரிவுரையாளர் நியமனங்களில் செல்வாக்குச் செலுத்தமாட்டம் என்று சம்பந்தப்பட்ட அத்தனை பேரும் பல்கலைக்கழகத்தில இருக்கிற பரமேஸ்வரன் கோயிலில சத்தியம் செய்ய வேணும். இல்லையெண்டால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒருபோதும் உருப்படமாட்டாது.

**மூப்பர்:** எதுவா இருந்தாலும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின்ர தலைவர் இராசகுமாரன் விடுத்த குற்றச்சாட்டுத் தொடர்பில யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் உண்மை நிலையை வெளிப்படுத்தவேணும். இராசகுமாரன் சொன்ன குற்றம் உண்மையென்றால் விஞ்ஞான ஆசிரியர் சங்கம் அதற்கு மன்னிப்புக் கேட்டாக வேணும்.

இப்படியான மோசடிகளைச் செய்துபோட்டு நாளைக்குப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இவையள் நீதி நேர்மை பற்றிக் கதைக்கலாமோ!

அந்தப் பிள்ளையள் தான் இவையள மதிக்குங்களோ.

**விதானையார்:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எங்கட தமிழ்மக்களின்ர ஒரு பெரும் சொத்து எண்டு நாங்கள் நினைச்சம். ஆனால் அந்த நினைப்பெல்லாம் கந்தறுந்து போயிற்று.

செல்வாக்கும் பந்தமும் ஒருவரை ஒருவர் விழுங்கும் சதித்திட்டங்களும் சீச்சீ

ஒரு பெரும் கலாபீடத்தில இப்படியோ நடக்கிறது. உலகத்தில இருக்கிற பல்கலைக்கழகங்களை எடுத்துப் பாருங்கள். அந்தப் பல்கலைக்கழகங்கள் அமைந்துள்ள சமூகம்- சூழல் எவ்வளவு முன்னேற்றம் கண்டுள்ளது.

ஆனால் இங்க 2013 ஆம் ஆண்டு வாங்கின கையொப்ப பிரதிகளை போட்டோக்கொப்பி எடுத்து அதை வேறவேற அறிக்கைகள், கடிதங்கள் கண்டனங்களோட இணைச்சு விடுகிறதென்றால் எப்படி எங்களைக் கல்வித் தெய்வம் மன்னிக்கும்.

**மூப்பர்:** இதுமட்டுமல்ல விதானையார் பல்கலைக் கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கத்திலும் ஒருசிலர் தான் இந்த வேலையைச் செய்திருப்பினம். அவையளின்ர இந்த உதவத்த வேலையால அந்தச் சங்கத்தில இருக்கிற நேர்மையான புத்திஜீவிகளுக்கு மல்லோ இழுக்கு.

**வாத்தியார்:** அந்த இழுக்கை அவையள்தான் களையவேணும். இந்தக்குற்றச் செயலைச் செய்தது யார் என்பதைப் பகிரங்கப்படுத்திவிட்டு சங்கத்தில இருந்து சம்பந்தப்பட்டவியளை விலத்தவேணும். இப்படிச் செய்யும்போதுதான் இப்பேற்பட்ட மோசடிகள், சட்டவிரோத சம்பவங்கள் தடுக்கப்படும்.

(வாத்தியார் வைத்திலிங்கம் இப்படி ஆவேசமாகச் சொல்ல அதனை ஏற்பதுபோல பிள்ளையார் கோயில்மணியும் ஒலித்தது)

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இயற்கை மன்னிக்காது

மலையிலிருந்து அருவிவ... து, "சலசல" என வேகமாக ஓடிக்கொண்டி...ந்தது. அந்தப் பகுதி உயரமான மரங்களும் ...டர்த்தியான புல்வெளியுமாக இருந்தது. அ...ாங்கு வண்ணப்பூக்கள் பூத்துக்குலுங்கியி...தன. அவை காற்றில் அசையும் அழகே த... அந்த அழகான பகுதியில் எல்லா விலங்...ளும் ஒன்று கூடி யாருக்காகவோ காத்திரு...ன.

திடீரென மின்னலொன்று ...வட்டியது.

ஜொலிக்கும் வண்ண ...ழிடையில், கையில் மந்திரக் கோலுட... சிறகடித்துப் பறந்து வந்து தரையிறங்...னாள் ஒரு தேவதை. எல்லா விலங் குகளு... வணங்கின.

"என்னை அழைத்ததற்க...ன நோக்கம் என்ன?" என்று கேட்டது தேவ...தை.

கூட்டத்தின் நடுவே தும்பிக்...கயை தூக்கி பிளிறிக்கொண்டுவந்த யானை 'தேவதையே வணக்கம். இப்ப என்ன நடக்கு...துன்னு தெரியுமா?" இந்த மக்கள் உயரமா...ருக்கிற மரங்களையெல்லாம் வெட்டி, காடுகள...ா அழிச்சிட்டே வாறாங்க. இப்படியே போனால் ...ாடே இல்லாமல் போய்விடும். இதைத் த... ...னும் தேவதையே"என்றது.ள

ஓடிக்கொண்டிருந்த த... ...ரிலிருந்து குதித்து வந்தது ஒரு குட்டிமீன். ...தேவதையே நீர் நீராகவே இல்லை. எல்...ம் கறுத்துப் போச்சு. இப்ப தண்ணீர் ஓ...றது இல்ல, சாக்கடையும், தொழிற்சாலைக் ...வும் கலந்து ஓடுது"என்றது.

அடுத்து வந்தது குயிலக்கா. "...ான் இருந்து பாடுறதுக்கு முன்னம் ஒரு கா...தில் நிறைய தோட்டந்தொரவு, தோப்பு எல்...ம் இருந்தன. ஆனால், இன்னைக்கு அதெல்...ாம் குறைஞ்சிடுச்சு. அப்படியே பாடினாலு... என் பாட்டு யார்காதிலயும் கேட்கிறதில்லை. ஒரே இரைச்சல் சத்தம் காட்டை நிறைக்கு... மனிதர்கள் வாழும்பகுதியிலிருந்து இந்த இ...ரச்சல் சத்தம் வருவதால், என்பாட்டு அதற்கு...ள அமுங்கிப் போகுது"என்றது.

இப்படி ஒவ்வொரு விலங்கு...களும் தங்களது குறைகளைக் கூற, அமை...ாகக் கேட்டுக் கொண்டிருந்தாள் தேவதை.

இறுதியாக இயற்கையை... பாதுகாக்க வேண்டும் என்று எல்... ...ங்குகளும் ஒரேமித்த குரலில் கூறின. "... ...ர பார்த்துக் கொள்கிறேன்" என்று கூறி... ...டு தேவதை விடைபெற்றுக் கிளம்பினாள்.

மறுநாள் அந்த நாட்டு அ...சனின் கனவில் தோன்றி, ஐந்து விரல்களை... காட்டினாள். பிறகு இரண்டு கடைசி விரல்...ளை மடக்கினாள். மீதியுள்ள முதல் மூன்... விரல்களையும் பாதுகாப்பாக இருக்க எ...கை செய்து மறைந்தாள் தேவதை.

இரவில் கண்ட கனவிற்கு அர்த்தம் தெரியாமல் குழம்பிப் போனான் அரசன். ஊரில் உள்ள அனைவரையும் அழைத்து விளக்கம் கேட்டான். யாருக்கும் தெரியவில்லை.

கடைசியாக ஒரு பெரியவர் விளக்கம் சொன்னார். "5 விரல்களும் ஐம்பூதங்கள் (நீர், நிலம், காற்று, நெருப்பு, ஆகாயம்) கடைசி இரண்டையும் தவிர்த்துவிட்டால், மீதியுள்ளது நீர், நிலம், காற்றுதான். இம் மூன்றும் கெட்டுப்போகாமல் பாதுகாக்க வேண்டியது உன் கடமை" என்றார்.

அரசுனும் அமைச்சர்களும் ஒன்று கூடி பல்வேறு திட்டங்களைத் தீட்டினர். காடுகளை அழிப்பதைத் தடுப்பது. ஆபத்து தரும் தொழிற்சாலைகளை மூடுவது, பிளாஸ்டிக் பொருட்களை தவிர்ப்பது. நச்சுக்காற்று வெயளியேறுவதை நிறுத்துவது, இரைச்சலைக் குறைப்பது, அணு ஆயுதத்தை எதிர்ப்பது. என முடிவு செய்தனர்.

சில நாட்கள் கழித்து, சில அமைச்சர்கள் நமது திட்டத்தை நிறைவேற்றினால், நமது நாடு வளர்ச்சியில் பின்னால் போய்விடும். அறிவியல் வளர்ச்சி ஏற்படாது என்றனர்.



அரசன் யோசிக்க ஆரம்பித்தான். நீண்ட நேரத்துக்குப் பிறகு, தேவதை கூறியதை விட்டுவிடுவோம் என்று முடிவுசெய்தான். சில ஆண்டுகளில் நாடு நவீனமயமானது. வளர்ச்சி பலமடங்குகளானது. மக்களின் வாழ்க்கை முறை அறிவியல் வளர்ச்சி காரணமாக மாறிப் போயிருந்தது. ஆனால், இயற்கை வளம் குறைந்துகொண்டே வந்தது.

பால்போல ஓடிய தண்ணீர், சாக்கடையும் தொழிற்சாலைக் கழிவுமாக ஓடியது. குயிலோசை கேட்ட காற்றில், காதைக்கிழிக்குமளவுக்கு இரைச்சல் அதிகமாக இருந்தது. ஆலமரமும் வேல மரமும் நின்ற இடத்தில் உயரமான கட்டடங்களும் மாளிகையுமாக இருந்தது.

சில குடும்பங்கள் மட்டும் வீடுகளில் மழை நீர் சேகரிப்பு, மரம்வளர்ப்பு, பிளாஸ்டிக் தவிர்ப்பு, விவசாயத்துக்கு முன்னுரிமை, நீர் நிலைப்பாது காப்பு என்பவற்றில் ஈடுபட்டனர். இயற்கையை நேசித்தனர்.

ந்நாட்கள் செல்லச் செல்ல, இயற்கை மிகவும் மோசமாகப் பாதிப்படைந்தது. தேவதை அரசனிடம் வந்து எச்சரித்தாள். அரசன் அதைக் கண்டு கொள்ளவில்லை.

நாட்டில் பருவ மழை பெய்வது கொஞ்சம் கொஞ்மாகக் குறைந்தது. தண்ணீர் பற்றாக் குறையானது. நாடு வறண்டுபோனது. புதுப் புது நோய்கள் மக்களைப் பீடித்தன. அரசனும் மக்களும் அவற்றிலிருந்து மீளமுடியாமல் மிகவும் அவதிப் பட்டனர்.

திடீரென பெருமழை பெய்தது. நாடுமுழுவதும் வெள்ளக்காடானது. மக்கள் வெள்ளத்தில் தத்தளித்தனர்.

அச்சமயம் சிறகடித்துப் பறந்துவந்த தேவதை இயற்கையை நேசித்த மக்களை மட்டும் காப்பாற்றிச் சென்றது. வெள்ளத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த அரசன் "காப்பாத்துங்க.... காப்பாத்துங்க" என்று கத்தியவாறு இருந்தான். ஆனால், தேவதை அவனைக் கண்டுகொள்ளவில்லை. அவன் நீரில் அடித்துச் செல்லப் படும் பொழுது தேவதை அவனிடம் கூறியது ... "கடவுள் எப்போதும் மன்னிப்பார்; மனிதன் எப்போதாவது மன்னிப்பான்; ஆனால், இயற்கை ஒருபோதும் மன்னிக்காது; தண்டித்துவிடும். இயற்கையைப் பாதுகாக்காமல் விட்டது தன்னுடையதவறுதான்என்று அப்போதுதான் உணர்ந்து கொண்ட அரசன், தன் உயிரைக் காத்துக் கொள்ள முடியாமல் மாண்டான்.

## அரும்புகளே ...!



சின்னஞ்சிறிய குழந்தைகளே
தேன்மொழி பேசும் குயிலினமே
கன்னலின் இனித்திடும் நற்சாறாய்
கவலைகள் தீர்த்திடும் மருந்தமுதே.

நல்லதை என்றும் எண்ணிடுவீர்
நற்செயல் புரிந்தே உயர்ந்திடுவீர்
அல்லதை புறத்தே ஒதுக்கிடுவீர்
ஆன்றோர் நல்வழி நடந்திடுவீர்.

தேசம் தன்னை நேசித்தே
தினமும் கடமை ஆற்றிடுவீர்
பாசத்துடன் தமிழ் மொழியை
பாங்காய் நாளும் வளர்த்திடுவீர்.

கல்வியைக் கண்ணாய்போற்றிடுவீர்
கணினி இயலைக் கற்றிடுவீர்
பல்மொழி ஞானம் பெறுவதனால்
பாரனில் எங்கும் சென்றிடலாம்.

எல்லா உயிரும் சமமென்ற
உணர்வை நெஞ்சினில் கொள்வீரே
அல்லா ஏசு புத்தர் ராமபிரான்
அனைவரும் நமக்கு ஒன்றேதான்.

வேண்டாம் நமக்குள் பிரிவினைகள்
வெறுப்பின் வேர்களை அறுத்தெறிவீர்
அண்டவன் பேரால் நமக்குள்ளே
அடிதடி நிகழ்தலைத் தடுத்திடுவீர்,

சொல்லும் செயலும் ஒன்றானால்
சொர்க்கம் நம்முன் உருவாகும்
கல்லும் கூட கனியாகும்
கனவுகள் எல்லாம் நனவாகும்.

வாழும் நாட்கள் மிகக்குறைவு
வாழ்க்கை நீண்ட கடும்பயணம்
சூழும் தடைகளைப் பொடியாக்கி
சுறுசுறுப்புடனே உழைத்திடுவீர்.



யாழ்/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
பி.பிறேமிதா
தரம் 3



உடுப்பிட்டி தென்னிந்திய

## எந்தப் பெரிய பூட்டுகள்!




1) ஒடிசா மாநிலத்தில் உள்ள பூரி ஜகந்நாதர் ஆலயத்தில் உள்ள உண்டியலுக்கு, இரண்டு அடி உயரம், ஒரு அடி அகலம், 50 கிலோ எடையுள்ள பூட்டு தயாரித்து போடப்பட்டுள்ளது. இதனது திறப்பு 14.5 அங்குலம் நீளம் உடையது.



உலகிலேயே கையால் செய்த மிகப் பெரிய பூட்டு இதுதான். 2002 இல் தயாரிக்கப்பட்ட இந்தப் பூட்டு, பித்தளை மற்றும் அலுமினியத்தால் செய்யப்பட்டது.

2) பாகிஸ்தானைச் சேர்ந்த குஜ்ரான்வாலாவில் இலத்திரனியல் தொழில் நுட்பத்தில் இயங்கும் பூட்டு ஒன்று உள்ளது. இதன் உயரம் 3.505 மீற்றர் அகலம் 1.37மீற்றர், தடிப்பு63.5 செ.மீற்றர்,அதன் நிறையோ 1883 கிலோகிறாம். இதனுடைய திறப்பின் நிறை 120 கிலோகிராம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## வியாசர் பதில்கள்

**அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்**

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



### டென்னிஸ் வீரர் முரே நடால் பற்றி?

இரா.ஜெ.துஷ்யா — சூராவத்தையூர்

**குடிநீரை அரசியலாக்குபவர்களைப் பற்றி?**

23-ம் புலிகேசி படத்தில் வெளிவராமல் போன ஒரு காட்சி. குதிரை ஒன்று மழையில் நனைய அதற்கு ஓடிப்போய் புலிகேசி குடை பிடிக்கிறான். அருகில் இருந்தவர்கள் இன்று முதல் நீ குதிரைக்கு குடைபிடித்த வள்ளல் என்று போற்றப்படுவாய் என்று கூறுவர். அரசியல்ல இதெல்லாம் சாதராணமப்பா.

கிருஷா — வரணி

**உங்கள் மனைவியின் அழகின் இரகசியம் என்ன?**

பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசும் என்பார்களே. இந்தப் பூவோடு (வியாசர்) முப்பது வருடங்கள் வாழ்க்கை நடத்தினால் அந்த நார் மணம் வீசுவதில் ஆச்சரியம் இல்லையே.

மு.தினுஜன் — ஆவரங்கால்

**ஓசாமா பின்லேடன் எதற்காக தீவிர வாதியாக மாறினார்?**

அது எனக்குத் தெரியாது. ஆனால் அமெரிக்க இராணுவம் அவரை சுடும் போது சுடாதீர்கள் சுடாதீர்கள் என கதறினாராம். அவரின் வாயில் இருந்து இந்தவார்த்தை வரும்போதே அவரின் கொள்கைகள் தவிடுபொடியாகி விட்டன.

ராஜி — அல்வாய்

**பெண்களின் அன்பைப் புரிந்து கொள்ளாமல் நடக்கும் ஆண்கள் பற்றி?**

அன்பைப் புரிந்து கொள்ளாத ஆண்கள் கஞ்சியில் பயறைப் போல என்றால் அந்த கஞ்சியில் அரிசியைப் போல பெண்கள். கஞ்சியில் பயறா? அரிசியா, அதிகம் கண்டு பிடியுங்களேன் பிளீஸ்.

வினோத் — மானிப்பாய்

**எல்லா பெண்களும் சந்தர்ப்பவாதிகள் தானே?**

கிடைக்கும் சந்தர்ப்பத்தை கனகச்சிதமாக பயன்படுத்தும் ஆண்களிடம் வேறு எப்படி நடந்து கொள்வது.

அனுஷா — வரணி

**நீங்கள் பார்த்த படத்தில் உங்களுக்கு பிடித்த படம் எது?**

'ஓ காதல் கண்மணி' மணிரத்தினம் நீண்ட இடைவெளிக்குப் பிறகு அருமையாக செதுக்கியிருக்கிறார். பாருங்களேன் பிளீஸ்.

### அமெரிக்க ராஜாங்க செயலர் ஜோன் கெரி கூட்டமைப்புடன் கதைத்தது நடக்குமா?

பிரியா — நெல்லியடி

**மயூரன் சுகுமாரின் தண்டனை ஏற்றுக் கொள்ளக் கூடியதா?**

குற்றவாளிகள் தண்டிக்கப்படுவது சரி. ஆனால் மயூரனுக்கு இந்தோனேசியா அரசாங்கம் எதற்காக புனர்வாழ்வளித்தது? சிறைச்சாலை கைதிகளுக்கு கணனி, ஆங்கில பாடங்களை கற்பிக்க எதற்காக மயூரனை நியமித்தது? சிறை தொகுதி ஒன்றிற்கு (இருபது கைதிகளுக்கு) பொறுப்பாய் எதற்காக மயூரனை நியமித்தது? புனர்வாழ்வு அளிக்கப்பட்டு ஒரு கைதியை மனிதனாக்கிவிட்டு எதற்காக மரண தண்டனையை நிறைவேற்றியது?




அபி — கரவெட்டி

**தமிழ் பெண்களின் இன்றைய கலாசாரம் எப்படியிருக்கிறது?**

இன்று மோட்டார் சைக்கிள் ஓடும் பெண்களில் இருந்து அனைவரிடத்திலும் பாவனைக்கு வந்த ஒரு புதிய உடை. சாரி, பஞ்சாபி என அனைத்து உடைக்கு மேலே போடும் ஒரு கறுப்பு கோட். ஒரு பெண்ணைக் கேட்டேன் எதற்காக இதை போடுகிறீர்கள் என. தெரியாது எல்லோரும் போடுகிறார்கள் அதனால்தான் என்றார். ஒரு பெரியவர் சொன்னார் இது குளிர் பிரதேசங்களில் போடும் உடை என்று. அது சரி அந்த கறுமத்தை இந்த வெயிலுக்கு எதற்காக போடுகிறார்கள்?

மதன் — அல்வாய்

**தற்காலத்திற்கேற்ப ஒரு கவிதை சொல்லுங்களேன்.**

அம்மி மிதித்து அருந்ததிபார்க்கும்
திருமணங்கள்
விவாகரத்தில் முடிகிறதென்றால்
அந்த விவகாரத்திற்கு
இறைவன் துணை போகின்றானா?

### நீங்கள் பார்த்த படத்தில் உங்களுக்கு பிடித்த படம் எது?

என்.பிரியா — கிளிநொச்சி

**எல்லா விடயங்களிலும் வெற்றிவாகை சூட என்ன செய்யலாம்?**

தோல்வியும் கவலையும் இல்லாமல் எல்லாவற்றிலும் வெற்றியும் சந்தோசமும் என்றால் அதற்கு பெயர் வாழ்க்கை இல்லையே.

சக்தி — முறிப்பு

**ஒரு பொண்ணு நம்ம காதலிக்குறா என்று எப்படி தெரிஞ்சு கொள்ளுறது?**

இதைக் கண்டுபிடிக்க சக்தி இல்லாத உனக்கு ஏன் இந்த பெயர்.

கீர்த்தனா — முகமாலை

**சினிமாவில் நாய்களை எப்படி நடிக்க வைக்கிறார்கள்?**

சினிமா நாயகிகளை நடிக்க வைப்பதை விட நாய்களை நடிக்க வைப்பது சுலபமானது ஏனென்றால் தமிழ் தெரிந்தவர்கள் யாரும் நாயகிகள் இல்லையே.

ரி.சிவகுமார் — பருத்தித்துறை

**அமெரிக்க ராஜாங்க செயலர் ஜோன் கெரி கூட்டமைப்புடன் கதைத்தது நடக்குமா?**

நடக்கும் என்பார் நடக்காது நடக்காதென்பார் நடந்துவிடும்.

அனு — வரணி

**உங்களுக்கு உங்க மனைவியை விட நமீதாவை 'ரம்பப் பிடிக்குமாமே?**

ம்ம்ம்... அதுசரி என் மனைவியின் தங்கையின் பெயர் நமிதா என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?

ஜூசார் — கரவெட்டி

**டென்னிஸ் வீரர் முரே நடால் பற்றி?**

03.06.1986 ஸ்பெயினில்பிறந்த ரபேல்நடால் அவர்கள் ராபா என ரசிகர்களால் செல்லமாக அழைக்கப்படுவார் 1.85 மீற்றர் உயரமுள்ள இவா 2001-ம் ஆண்டு தொழில் ரீதியாக விளையாட ஆரம்பித்தார்.

பிரஞ்சு ஓபன் டென்னிஸில் 2005, 2006, 2007, 2008, 2010, 2011, 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் பட்டத்தை வென்று சாதனை வீரராக நிமிர்ந்து நிற்கிறார். இவரின் பிரதான எதிராளியாக ரோஜர் பெடரர் வர்ணிக்கப்படுகிறார்.

எம்.தக்ஷி — யாழ்ப்பாணம்

**ரைம் பாஸசுக்கு கதைக்கும் பெண்கள்பற்றி?**

ரைம் பாஸ்சுக்கு கதைக்கும் ஆண்களிடம் சிக்கினால் அவர்களின் கதை அம்பேல் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## இனியொரு மாரி இவளுக்கு வேண்டாம்

மாரி மழையோடு மதம் பிடித்த காற்றடிக்க
ஓலைக்குடிசையிலே தாழ்வாரம் தஞ்சமென்று
ஓரம் நனைந்தபடி ஓராடும் குட்டியொன்றும்;
ஓராட்டக் கட்டிலிட்ட ஏணையிலே
ஒரு வயதுப் பிள்ளையொன்றும்
ஒழுக்கொதுங்கி இருக்குதென்று
பெருமூச்சு விட்டபடி
நேற்றிரவு மூத்தமகள்
படித்து வைச்ச புத்தகத்தை
ஈரம்படுமுன்பே இருந்த
இடம் மாற்றிவிட்டு
இருந்த நால் பாத்திரத்தில்
பெருமொழுக்கு ஏந்தவைச்சு
மீதி நூறோழுக்குக்கும்
பணிவிடைகள் செய்துகொண்டு
முன்வாசல் வழியாக
ஒழுக்கு வெள்ளம் விரட்டயிலே
ஓரத்தடியிலே மாட்டிவைச்ச
கணவன் படம்
மழைபட்டு நனைஞ்சிருக்க
பதறிப்படம் கழற்றி எடுத்து
மார்பணைக்கையிலே
அவள் கண்கள் பொழிந்தமழை
மாரிமழை நிகராமோ
வறுமையுடன் தவிப்பே வாழ்க்கையின்
நியதி என்றால்
இனியொரு மாரி
இவளுக்கு வேண்டாம்

மேகலைவன்

## வலம்வரும் வலம்புரி

நாள்தோறும் என்வீட்டில்
வலம்வரும் வலம்புரியே
என்கையில் நீ தவழாத நாளேயில்லை
நீ இல்லை என்றால்
இதயம்கூட ஒருகணம் துடிப்பிழக்கும்
ஞாயிறு வேளையிலே என்
நாவின் நாதமாய்
சங்குநாதமாய் எனக்குள் நீ
ஆலடி மாநாடாய் விழிப்படையவைத்து
கவிதைக்கெல்லாம் களம் கொடுக்கும்
கவிதைக்கலசத்துடன்
என் மௌத்தின் தேடலாய்
சிந்தயையோடு சிரிப்பூட்டும்
வியாசர் பதிலில்
என்னைத் திணறடிக்க வைக்கின்றாய்
பரந்துபட்ட சிந்தகையை
விரைந்துதரும் இன்னும்
பல்சுவை அம்சத்துடன்
சங்குநாதமாய் வலம்வரும்
வலம்புரியே
என்வாழ்த்துக்களுடன் நன்றிகளும்
என்றும் தொடர்க உன் பணி

த.தனுஜா
அல்வாய்

## இமயம் தொட

நீ மின்மினி தான்
எப்போது
சூரியனை எதிர்த்திட
சபதமெடுக்கிறாயோ?
அப்போதே
நீ வீராதி வீரனாகி விடுகிறாய்
உன்னை எரித்திடும்
என்பதறிந்தும்
அவனை எதிர்த்திடத்துணிகிறாயே
நீ வீரனல்ல மாவீரன்

மாவை. நா.கஜேந்திரன்

## அதிர்வின் உதிர்வுகள்

பூபாளம் இசைக்கின்ற நேபாள தேசம்
பூகம்ப அதிர்வினால் பொலிவிழந்து போனதோ
நெஞ்சங்களை நோகவைக்கும் செய்தி
அஞ்சாதவனையும் அதிரவைக்கும் காட்சி
வாழ்வுக்கு ஆதாரமான பூமித்தாயே
வீழ்வுக்கும் நீயே காரணமாகலாமா
நீ சினந்தால் எத்தனை உயிர்கள் அழியும்
நீ அணைத்தால் உயிரினம் யாவும் வாழும்
சிறுகச் சிறுக தோன்றிய பொருள்வளம்
இறுகப் பற்றியே நொறுக்கிவிட்டாயே
ஆண்டவர் படைப்பில் முதலிடம் நீயே
பாண்டவர் நெறியிலும் முதல்வளம் நீயே
இனியொரு கோபங்கொள்ளாதே அம்மா
தனிநிறை தேசமாய் நேபாள்த்தை உருவாக்கு
பட்டறிவு வேதனையில் பதைபதைத்தோம்
குட்டபருந்து துரத்தும்போது துடிதுடித்தோம்
எட்ட இருக்கும் உனது நிலை உணர்ந்தபோது
எம் கண்களில் உதிரம் ஆறாய் பெருகுதம்மா
பூமித்தாயே பொறுமை கொள்ளம்மா
மனிதரை மன்னித்து நல்வாழ்வு தருவாயே

சந்தியாபாலா
அல்லைப்பிட்டி

## சுமைதாங்கிகள்

உதிரத்தை உணவாக்கி
உயிரூட்டுபவள் தாய்
உதிரத்தை வியர்வையாக்கி
உழைப்பவர் தந்தை
ஐயிரண்டு மாதம்
கருவறையில் சுமப்பவள் தாய்
பிஞ்சுப்பாதம் நோகுமேயென -தன்
நெஞ்சில் நடக்க வைப்பவர் தந்தை
தங்கையின் மகிழ்ச்சிக்காக- தன்
சின்னச் சின்ன ஆசைகளை
துறப்பவர்கள் அண்ணாக்கள்
மொத்தத்தில் குடும்பத்தையே
சுகமான சுமையாக சுமப்பவர்கள்
அண்ணனும் தந்தையும் தான்

பா.சத்யா
அல்வாய்

# மௌனத்தின் தேடல்- 248



## நம்பி விடலாமா?

எண்ணிப் பண்ணியே
பதினெட்டாம் திருத்தம்
எடுத்த அடுத்த நகர்வு
பார்த்துச் சொன்ன
ஜோசியத்தை நம்பியே
ஆழமறியாமல் கால்விட்ட
கதை எழுதிய தை எட்டாம்நாள்
நின்ற பாக்கி இருவருடங்களும்
பயனற்றுப்போகவே
மாற்றியது தலைவிதியை!
உடனிருந்த குற்றத்திற்காய்
நாள் குறித்து
பதினெட்டின் சீழை
பத்தொன்பதால் சீவியே
பரிகாரம் தேடினரே!

அராலியூர்
சோ.சிவகுமாரன்

## தேடல்

சுற்றிவளைத்து வேலியிட்டு
சுருள் கம்பிக்குள்
சுயத்தை தொலைத்து
பாவ இருளின் நடுவினிலே
சோகம் பலதாங்கி நின்றே
காலம்தனை கரையவிடும்
கைப்பொம்மைகளாகிவிட்ட எமக்கு
ஆறறிவு ஜீவனால்
அடையமுடியா நீதியை
அறியத்துடிக்கும்
ஐந்தறிவு ஜீவனே!
தப்பாமல் குறி சொன்ன
உன்துப்புக்கள்
தீப்பிழத்து எரிந்து
விடும் இவ்வுலகில்
உனைப்போல் நாம் வாழ எமக்காய்
நீ தேடுவது எதுவோ??

மல்லாவிக்கஜன்

## மூடத்தனம்

அஞ்ஞானம் போக்கும்
விஞ்ஞானக் கல்வியால்
மெய்ஞ்ஞானம் பெற்று
ஆய்வுகள் செய்து கண்டபல
உண்மைகளினடிப்படையில்
மண்ணைவிட்டு விண்ணுலகில்
வாழ இடந்தேடுமிக்காலத்தில்
தன்னம்பிக்கையில்லாது கிளியிடம்
தன்னெதிர்காலம் பற்றிக்கேட்பது
எவ்வளவு மூடத்தனம்

துரை
தென்மட்டுவில்

## உன் வாழ்க்கை உன் கையில்

நவீன விஞ்ஞான உலகில்
நடைபயின்றிடும் மானிடரே!
மூடநம்பிக்கைக்குள் முடங்கிப்
போவதைத் தவிர்த்து
விதியை மதியால் வெல்லலாம்
என்பதை மனதில் வைத்து
உன் வாழ்க்கை உன் கையிலே
மற்றவர் கையில் இல்லை
என்பதை மனக்கண் கொண்டு
நடைபயின்றிடு

ம.அ.மரியஜெனிற்றா
சாவகச்சேரி

## கலாசாரம்

பாதைகள் பல மாறிவந்தாலும்
கணனி யுகத்திற்கு
மனிதன் மாறிவிட்டாலும்
மூடநம்பிக்கையும் சமய கலாசார
சாஸ்திரங்களும்
நம் மனித இனத்தை விட்டு
போவதுமில்லை
மாறப்போவதுமில்லை

இரா.ஜெ.துஷ்யந்தா
அளவாவெட்டி[illegible]

## சுதந்திரமில்லை

நம் நாட்டில் இன்று
தமிழர்களுக்கு மட்டுமல்ல
மனிதர்கள் எதிர்காலத்தை அறிந்திட
சீட்டெடுத்துப்போடும்
இந்த ஜோசியக்கிளிக்கும்
சுதந்திரமில்லை

ச.ஜெயரூபன்
பருத்தித்துறை

## செவ்வாய்தோஷம்

ஜோஸ்ய கிளியே ரகசியமாய்
ஒரு சீட்டு எடு
வரும் வரன்கள் யாவும்
தொலைதூரம் தள்ளிப்போகின்றன
காரணம்... எனக்கும்
செவ்வாய்தோஷம் இருக்குமோ

த.தனுஜா, அல்வாய்

## ஜோசியம்

ஜோசியம் என்னும் பெயரில்
கிளியின் சுதந்திரத்தைப் பறிக்கும்
மனிதர்களே!உங்களுக்கென்று
தனியாகஒரு "சுதந்திரதினம்"
தேவைதானா?

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## தோல்வியில்லை

கிளியின் அன்பை
கண்டு ஏங்கப்போகும்
மனிதர் கூட்டம்தான்
உண்மை சொன்னால்
ஏற்றுக்கொள்வோம்
தோல்வி இல்லைதான்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## விழித்திடு மானிடா

ஐந்தறிவு படைத்த கிளியின்
ஜோதிடத்தில் உன் வாழ்வை நம்பி
உயர்ந்த வாழ்வை
இழக்கும் மானிடனே
விழித்தெழு இழந்தவை போகும்
இனியும் உன்
வாழ்வை இழக்காதே

இ.ஸபீனா
கரவெட்டி கிழக்கு

## சிறகொடித்த செல்லக்கிளியே

சிறகொடித்த பறவையாய் நீ நின்று
உன்சேவைதனை நீ புரிந்தாய்
உன் பணிதேடுவோர் நலன்
தீர்த்து நன்மை புரிந்திடுவாய்
அழகிய சின்னக் கதைபேசும்
செல்லக்கிளியே உன்புகழ்
என்றென்றும் பாரில் ஓங்குக

செ.பேபிசாளினி
மட்டுவில் தெற்கு

# மௌனத்தின் தேடல் -249

**அன்பு வாசகர்களே !**



உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 13.05.2015ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஆதரவாகப் பேசுகிறார் சுஷ்மா!

"இனி, தமிழக மீனவர்கள் தடை செய்யப்பட்ட வலைகளைக் கொண்டு சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி இலங்கைப் பகுதியில் மீன் பிடிக்கக் கூடாது. மீறினால், இலங்கை அரசு அந்த மீனவர்களைக் கைதுசெய்வதோடு, அவர்களுடைய படகுகளையும் பறிமுதல் செய்யும்" என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கூறியதால் கொந்தளித்துப் போயிருக்கிறார்கள், தமிழக மீனவரகள்.

மீனாகுமாரி அறிக்கையின் பரிந்துரைகளை நிராகரிக்க வேண்டும், மீன்வளத் துறைக்கு தனி அமைச்சகம் அமைத்திட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய மீனவர்கள் பேரவை சார்பில் டில்லி ஜந்தர் மந்தரில் கடந்த மாதம் 23 ஆம் திகதி பேரணி நடைபெற்றது. பேரணி முடிந்து பி.ஜே.பி தலைவர்களை தமிழக மீனவர்கள் சந்தித்தனர். அப்போது, பி.ஜே.பி தலைவர்கள் பேசிய பேச்சு மீனவர்களை ஆத்திரம் அடையச் செய்துள்ளது.

**அப்படி என்னதான் நடந்தது?**

காரைக்கால் பிராந்திய மீனவர் சங்கத் தலைவர் வீரதாசனிடம் பேசினோம். "ஜந்தர் மந்தர் பேரணியை முடித்துவிட்டு ஊருக்குத் திரும்ப காத்துக்கொண்டிருந்த போது, பி.ஜே.பி தலைவர்களிடம் இருந்து பேச்சுவார்த்தைக்கான அழைப்பு வந்தது. 28ஆம் திகதி டில்லியில் உள்ள பி.ஜே.பி அலுவலகத்தில் மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன், முரளிதரராவ், தமிழிசை சௌந்தரராஜன், இல.கணேசன், ஹெச்.ராஜா ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடந்தது. எங்கள் பிரச்சினைகளை அவர்களிடம் எடுத்துக் கூறினோம். அமைதியாகக் கேட்டுக்கொண்டனர். மறுதினம் 29ஆம் திகதி காலை 11 மணியளவில் வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவ்ராஜை சந்திக்க நேரம் வாங்கிக் கொடுத்தனர்.

நம்பிக்கையோடு அவரைப் பார்க்கச் சென்றோம். ஆனால், அங்கு நடந்த விடயங்கள் வேறு மாதிரியாக இருந்தன. நாங்கள் இந்தியக் குடிமக்கள் என்பதை





## கொந்தளிக்கும் தமிழக மீனவர்கள்

மறந்துவிட்டு, இலங்கைக்கு ஆதரவான ஒரு நிலைப்பாட்டை சுஷ்மா சுவராஜ் எடுத்திருந்தார். இருநாட்டு மீனவர் பேச்சுவார்த்தை இப்போது இறுதிக்கட்டத்தை எட்டியிருக்கிறது. இந்தச் சூழலில் மத்திய அரசானது தலையிட்டு மீனவர்கள் நலனை முன்னிறுத்தி பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்க வேண் டும். அதைவிடுத்து, இலங்கைப் பகுதிக்கு மீன்பிடிக்கச் செல்லக்கூடாது என்று தடாலடியாகச் சொல்வது எந்த விதத்தில் நியாயம்? இருநாட்டு மீனவர் பேச்சுவார்த்தையின் சாராம்சத்தை அறியாமல் தங்கள் மீதான நெருக்கடியை அப்பாவித் தமிழக மீனவர்கள் மீது திணிப்பது நியாயமா?" என்றார் ஆவேசமாக.

நாகப்பட்டினம் மீனவர் சங்கத் தலைவர் வீரமுத்து, "10 ஆண்டுகளுக்குப் பிறகு இருநாட்டு மீனவர் பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தை எட்டியிருக்கிறது. இப்படிப்பட்ட சூழலில் மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜின் பேச்சு எங்களுடைய எதிர்கால வாழ்வாதாரத்தைக் கேள்விக்குறியாக்கி இருக்கிறது. எங்களை வேதனைப்படுத்திப் பார்ப்பதில் மத்திய அரசுக்கு ஏன் இவ்வளவு மகிழ்ச்சி என்று தெரியவில்லை. தங்கம் மற்றும் கஞ்சா போன்ற போதைப் பொருட்களை நாங்கள் கடத்துவதாக மத்திய அரசு மதுரை உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றை சமர்ப்பித்துள்ளது. இது அப்பட்டமான பொய். இந்த அளவுக்கு வேறு யாரும் எங்களை இழிவுப்படுத்த முடியாது" என்றார் காட்டமாக.

இராமேஸ்வரம் மீனவர் சங்க தலைவர் என்.தேவதாஸ், "குறுகிய கடல் பகுதியாக இருப்பதால்தான் நாங்கள் எல்லை தாண்டி செல்ல வேண்டியுள்ளது. அதற்கான தீர்வை பெற்றுத் தருவார்கள் என எதிர்பார்த்து சென்ற எங்களை ஏமாற்றிவிட்டனர். எங்களின் வாழ்வுரிமையை காப்பாற்றுவதாகச் சொன்னவர்கள் எங்களின் கழுத்தை அறுத்துவிட்டனர். இனி மத்திய அரசினை நம்பி பிரயோசனம் இல்லை. எனவே எங்களின் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து விவாதிக்க 15 மாவட்ட மீனவர்களும் காரைக்காலில் சந்திக்க உள்ளோம். எங்களின் வாழ்வாதாரத்தைக காப்பதற்கான நடவடிக்கைகள், போராட்ட முன்னெடுப்புகளை அந்தக் கூட்டத்தில் முடிவு செய் வோம்" என்றார்.



சுஷ்மா சுவராஜின் பேச்சு, மீனவர்களை அழைத்துச் சென்ற தமிழக பி.ஜே.பி நிர்வாகிகளைத் தடுமாற வைத்துள்ளது. மத்திய இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணனிடம் பேசினோம். "மீனவர் பிரச்சினையை சுமுகமாக முடிப்பதே எங்களது நோக்கம். தடை செய்யப்பட்ட படகுகளை, வலைகளைப் பயன்படுத்த வேண்டாம் என்றுதானே கேட்கிறோம். தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டபோது அவர்களுக்காக மோடியிடம் சென்று முறையிட்டவர் இதே வெளியுறவுத் துறை அமைச்சர்தான். தமிழக மீனவர்களை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கம் பி.ஜே.பி-க்கு இல்லை. இரு நாட்டு அரசுகள், இரு நாட்டு மீனவர்கள், முக்கியமாக மாநில அரசு ஆகியோரின் ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே இதில் நிரந்தரத் தீர்வு கிடைக்கும்" என்றார்.

தங்களுக்கு விடிவுகாலம் பிறக்கப்போகிறது என்று சில மாதங்களுக்கு முன்பு நம்பிக்கையுடன் சொல்லிக்கொண்டிருந்த தமிழக மீனவர்களின் வார்த்தைகளில் இப்போது வேதனையே வெளிப்படுகிறது.

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**சென்றவாரம் 03.05.2015 ஞாயிறு வலம்புரியில் குடி தொடர்பான குழுச்சிகிச்சை பற்றிய உளசமூகப் பயிற்று விப்பாளரும், ஆலோசகருமான இர. சந்திரசேகரசர்மா அவர்களின் நேர்காணல் வெளிவந்தது. இவ்வாரம் அதன் தொடர்ச்சி வெளிவருகின்றது.**

எமது குழுச்சிகிச்சைக்கு வந்து குடியைவிட்டு நல்லமுறையில் முன்னேறி சமூகத்திற்கு உதார ணமாக வாழ்பவர்களில் குறிப்பிட த்தக்க ஒருவரின் கதையை இங்கே தருகின்றோம். (பெயர்கள் மாற்ற ப்பட்டுள்ளன)

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு கிராமத்தில் கந்தசாமி என்ற ஒரு விவசாயி இருந்தார். அவருக்கு வயது 45.மனைவி பிள்ளைகளும் இருக்கிறார்கள். இரண்டு பெண் ணும் ஓர் ஆணுமாக மூன்று பிள்ளை கள் இருந்தனர். மூத்தபெண் பிள் ளைக்கு 18 வயதிருக்கும். உயர் தர வகுப்பில் படித்துக் கொண் டிருந்தார். கடைசி ஆண் பிள்ளை க்கு 12 வயது.

அவர் கடந்த இருபது வருட மாகக் குடித்து வருகிறார். காலை யில் இரண்டு போத்தல் கள். மத்தி யானம் ஒருபோத்தல் கள் அல் லது கால் போத்தல் சாராயம், மாலையில் இரண்டு போத்தல் கள் அல்லது கால் போத்தல் சாராயம் குடிப்பார். பணத்தட்டுப்பாடு இரு க்கும்போது அரைப் போத்தல் கசி ப்புக் குடிப்பார். ஆரம்பத்தில் நண் பர்களோடு சேர்ந்து குடிக்கப் பழ கினார். பின்னர் திருமண வீடுக ளிலும், மரணவீடுகளிலும் நண்பர் களோடு குடித்தார். படிப்படியாக நாளாந்தம் குடிக்கத் தொடங்கி விட்டார். இப்பழக்கம் அவரைக் குடிக்கு அடிமையாக்கி விட்டது.

மனைவியும் பிள்ளைகளும் குடியை நிறுத்தும்படி எவ்வளவோ சொல்லியும் கேளாமல் தொடர்ந்து குடித்து வந்தார். ஒருநாள் தெரு வில் மயங்கி விழுந்ததால் வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் குடிக்கு அடிமையா னவர் என்பதும் கண்டுபிடிக்கப் பட்டது. அவரது ஈரலிலும் நோய் தொடங்கியிருந்தது.

அவரை நாம் சந்தித்தோம். குடு ம்பத்தில் பாரதூரமான பிரச்சினை கள் வந்தபோது அதிலிருந்து விடு படுவதற்கு கடுமையாகக் குடிப்ப தாகச் சொன்னார். ஆனால் குறை ப்பதற்கு முயற்சிப்பதாகவும் குடி யில் தங்கியிருப்பதில்லை என்றும் குறிபபிட்டார்.கடன் தொல்லையை மறப்பதற்கும் குடிப்பதுண்டு என் றும் சொன்னார். பின்னர் அவரது மனைவியையும் அழைத்துவரச் செயது இருவரையும் சந்தித்தோம. இருவரிடமிருந்தும் தகவல்களைப் பெற்றோம். மனைவியின் கருத் துப்படி கணவன்மிகநல்லவர்.ஆனால குடித்தால் தான் கொடுமையா னவர். சிலவேளைகளில் முரட்டுத் தனமாகப்பொருட்களை உடைப்ப திலும் மனைவியையும் பிள்ளை களையும் அடிப்பதிலும் ஈடுபட்டார். முன்னர் போல அவரால் வயலு



க்குப் போய் வேலை செய்ய முடிய வில்லை. அதனால்வருமானம் குறை ந்தது. கடன்களும் உயர் ந்தன. அண்டை அயலவருடன் சண்டை பிடித்தார். அவ கண வனை விட்டுச் செல்ல எண்ணினா. நாம் அந்த மனிதருடன் தொடர்ந்து கதைத் தோம். கடன் பிரச்சினை கள் பற் றிக் கவலைப்பட்டதால் குடித்த தாக அவர் சொன்னார். முதலில் தான் அதிகம் குடிப்பதை மறுத் தார். சிலவேளைகளில்தான் குடிப் பதாகச் சொன்னார். கள் குடிப்ப தில் என்ன பிழை என்று கேட்டார். பின்னர் ஒரு நாளைக்குத் தான் குடிக்கும் அளவை வெளிப் படை யாகச் சொன்னார். அவர் தனது குடியில் ஒவ்வொரு மாத மும் எவ்வளவு பணம் செலவழிக் கிறார் என்பதை அவரைக்கொண்டே கணக் கிடச் செய்தோம். அவ்வளவு பணம் குடியில் செலவழிப்பது அவ ருக்கே ஆச்சரியமாக இருந்தது. தான் குடியில் அதிகபணத்தை இழப்பதையும் உணர்ந்தார்.

பின்னர் அவரது குடும்பத்தைப் பற்றிக் கேட்டோம். அவர் மிகவும் துன்பமடைந்தார். தனது மனைவி மிகநல்லவளென்றும், ஆனால் அவளோடு இயைந்து போக முடிய வில்லை என்றும் சொன்னார். பிள் ளைகள் அவருக்கு இப்போது கீழ்ப் படிவதில்லை என்றும் சொன்னார். முன்னர் எப்படி இருந்தது என்று அவரைக் கேட்டோம். எல்லாம் நன்றாகவே இருந்தன என்று அவர் ஒத்துக் கொண்டார். தனது அட ங்காத குடியின் பின்னர்தான் அதி கமான பிரச்சினைகள் தொடங்கின என்பதையும் அவர் ஒத்துக் கொண டார். இப்போது தனக்கு வெட் கமாக இருக்கிறதென்றும்,குடியை முற்றாகவிட விரும்புவதாகவும் அவர் சொன்னார். அவரை எமது குழுச்சிகிச்சைக்கு ஒவ்வொரு வாரமும் குறிப்பிட்ட ஒரு நாளில் வரச் செய்தோம். அவர் ஒழுங்காக வந்துகுடியை விட்டவர்களின் குழு வில் சேர்ந்து கொண்டார். அவரது ஒதுங்கல் அறிகுறிகளுக்கு (With drawal symptoms) மருந்துகள் கொடுக்கப்பட்டன. சிலசமயம் அவ ரது மனைவியும் வந்து குடும்பத் தில் ஏற்பட்டுள்ள [illegible]

பற்றிச் சொல்லுவார். பிள்ளை களுக்குப் படிக்கக்கூடிய ஒரு சூழ் நிலை ஏற்பட்டிருப்பதைக் குறிப்பிட் டார். பிள்ளைகளுக்கும் இப்போது மகிழ்ச்சி என்றார். காலப்போக்கில் அவர் தனது விவசாயத்தை நல்ல முறையில் ஒழுங்காகச் செய்ய முடிந்தது. வருமானமும் பெருகி யது. குடியில் செலவழிந்த பண மும் மிச்சமாகியது. அவர் தனது கடன் தொல்லையிலிருந்து மெல்ல மெல்லவிடுபட்டார். அவரது குடும் பம் முன்னேற்றமடைந்ததோடு, அவர்கள் ஒன்றாகச் சமயக் கொண் டாட்டங்களுக்கும் திருவிழாக்க ளுக்கும் செல்லக்கூடியதாக இரு ந்தது. உறவினர்களும் நண்பர் களும் தமதுவீட்டுநிகழ்வுகளுக்கு அவர்களையும் அழைத்தனர். (நன் றிதமிழ் சமுதாயத்தில் உளநலம்)

**4.ஒருவர் குடியைஎவ்விதம் விடலாம் என்பதற்கு,உங்கள் ஆலோசனைஎன்ன? உடனே விட்டுவிடலாமா?**

முதலில் அவர் குடியை முற் றாக விட வேண்டும் என்று தீர்மா னிக்க வேண்டும். சிலர் சிறிது சிறி தாகக் குறைத்துக் கொண்டே வந்து முற்றாக நிறுத்தி விடுவார் கள்.

எனவே குடியைவிட விரு ம்புபவர்கள் ஒரு வைத்திய நிபு ணரின் ஆலோசனையுடன் வைத் தியசாலையில் சேர்ந்தே குடியை உடனடியாகவிட வேண்டும். ஒது ங்கல் அறிகுறிகள் ஏற்படுமானால் ஒருவைத்தியரின் ஆலோசனை யுடன் குடியை விடலாம்.

**மது அருந்துவதை உடனடி யாகநிறுத்தும் ஒருவரில் ஏற் படும் மாற்றங்கள்.**

✦ குழப்பமான மாறாட்டமான மனநிலை ஏற்படும்.

✦ சிலவேளைகளில் வலி ப்பு ஏற்படலாம்.

✦ பயந்து அமைதியின்றி ஓடித் திரிவர்.

✦ எவரையும்சந்தேகக் கண் கொண்டு பார்ப்பர். இப்படியான வர்களை வைத்தியசாலையில் உள்ள உளமருத்துவப் பிரிவில் வைத்துசிகிச்சை பெறவேண்டி யிருக்கும்.

வழமையாக மறுபடியும் குடி [illegible]

கள் அற்றுப்போகும் அதற்காகத் தான் திரும்பவும் குடிக்கின்றார் கள். இதனைத் தடுப்பதற்காகவே வைத்தியசாலையில் வைத்தியர் அந்த மருந்துகளைக் கொடுக்கின் றார். இப்படியே சிலநாட்களில் அவர் குடியை மறந்து சாதாரண மனிதர் போலவாழத் தொடங்கு வார்.

ஆனாலும் இவர்கள் சில வேளைகளில் சூழ்நிலை காரண மாக மீண்டும் குடிக்கத் தொடங்கு வதுமுண்டு. இப்படிப்பட்டவர்கள் குடியைவிட விரும்புகின்றேன். ஆனால்முடியவில்லை என்று சொல் வார்கள். இவர்களை வைத்திய சாலையில் அனுமதித்து வெறு ப்புச் சிகிச்சை கொடுக்கப்படும்.

**வெறுப்புச் சிகிச்சை:** மது அல்லது போதைப் பொருட் பாவ னைக்கு அடிமையானவர்களுக்கு அவற் றிலிருந்து தாமாகவே விட முடியாதவர்களுக்கு, சில வேளை களில் கொடுக்கப்படுகின்றது. விட் டவர்களும் பூரணமாக நிறுத்த விரும்புபவர்களுக்கும் இச்சிகிச்சை கொடுக்கப்படுகின்றது.

மதுவில் ஒரு வெறுப்பை ஏற்ப டுத்தி அவர்கள் மீண்டும் குடியை நாடுவதைத் தடுக்கும். அந்த மண த்தையே அவர்கள் வெறுத்து விடுவார்கள். இவர்களுக்கு முன்பு குறிப்பிட்ட குழுச்சிகிச் சையும் புனர்வாழ்வும் தேவைப் படும்.

**5.பலர் துக்கத்தை மறக் கவும் சந்தோசத்துக்காகவும் குடிக்கின்றோம் என்கின்றார் கள். இது பற்றி உங்கள் கரு த்து என்ன?**

சிலர் துக்கத்தை மறக்கக் குடிக் கின்றோம் என்கின்றனர். வேறு சிலர் ஜாலியாகக் குடிக்கின்றோம் என்கின்றனர். ஆனால் மது சந் தோசத்தைத் தருவதுமில்லை. துக்கத்தை மாற்றுவதுமில்லை. ஒருவர் மரண வீடொன்றில் குடி த்துவிட்டு இறந்தவரின் பிரிவுக்காக துன்பப்பட்டு அழுகின்றார். அவரே பின்னர் திருமண வீடொன்றில் குடித்துவிட்டு சிரித்து மகிழ்கின் றார். எனவே துன்பத்தையோ, மகிழ்ச்சியையோ மது தரவில்லை என்பது கண்கூடு.

ஒருவர் 20 வருடமாகக் குடிப்ப தாகவும் தனது மனைவி முன்னும் பின்னுமாக குடியை விடும்படி பல இடங்களுக்கு அழைத்துச் சென் றதாகவும் சொன்னார். "குடிக்க ஆரம்பிக்க முன்னர் குடிக்குமிட த்தை எட்டிப் பார்த்தாராம். அங்கு அவரின் நண்பர்கள் குடித்துக் கொண்டிருந்தார்களாம். அவர்க ளைப் பார்த்தே குடிக்க ஆரம்பித் தாராம்.

மனைவியின் ஆய்க்கினைக் காக ஒருகட்டடத்தில் ஒன்றாக இருந்தவர்களைப் போய்ப் பார்த் தாராம். அவதானிக்கும் போது தனது நண்பர்கள் குடியை விட்டு ஒரு குழுவாகக் கலந் துரை யாடிக் கொண்டிருந்தார்களாம். அவர் களைப் பார்த்து குடியை விட்டா ராம். எல்லாம்நண்பர்களால் தான்.

அவர் தற்போது குடியால் ஏற்ப டும் கேடுகள் பற்றியும் குடிக்க ஆரம்பிக்க வேண்டாம் என்றும் ஆரம்பித்தால் நிறுத்துவது கடி னம் என்றும் இளைஞர்களுக்கு ஆலோசனை கூறுகின்றார். குடி க்கு "மறுக்கக் கற்றுக் கொள் ளுங் கள்" என்றும் சொல்லி வழிகாட்டு கின்றார்.



"வேண்டாம் என்று சொல்லப்பழகவேண்டும்"

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படு கின்றன. தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு, 8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**


மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக் களும் ஏற்றுக்கொள்ளப்படும்:


Email: psych@sltnet.lk Face book : Shanthiham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










அண்மையில் தமிழகத்தின் *மானாட மயிலாட* என்ற தொலைக்காட்சி நிகழ்வானது உலகசாதனையை வெற்றிகரமாக நிறைவேற்றியிருந்தது.

இவ்வெற்றியை நிலைநாட்டியவர்கள் ஒரு பெண் நடனக்கலைஞர் கலாமாஸ்டர், தலைமையிலான குழுவினராவர்.

இவ்விடயத்தை ஊடகவாயிலாக பலரும் அறிந்திருக்க வாய்ப்பு உள்ளது. ஆயினும் கடந்த 03.05.2015 ஞாயிறு அன்று இரவு, சாதனைக்குரிய இந்த நிகழ்வை கலைஞர் அலைவரிசையில் பார்க்கத் தவறியவர்கள் துரதிர்ஸ்டசாலிகள்தான்.

இந்நிகழ்வினைத் தொலைக்காட்சியில் கண்டுகளித்தவர்களுக்கு நிச்சயமாக ஒரு பிரமிப்பு இருக்கும்.

அந்த பிரமிப்பு எதைப்பற்றியதென்றால், அந்நிகழ்வு காட்சிப்படுத்தப்பட்ட மாய அறை பற்றியதாகத்தான் இருக்க முடியும். இந்த மாய அறைதான், இந்நிகழ்ச்சி சாதனை படைப்பதற்கு அடிப்படையாக இருந்தது.

மாய அறை தமிழ் சினிமாவிலேயே இதற்கு முதல் இரண்டு தடவைகள்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதுவும் உலகநாயகன் கமலஹாசனால் மட்டும்தான்.

அதன் பிறகு இந்தியாவில் மானாட மயிலாட நிகழ்வில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நாம் பொதுவாக நடன, நாடக, கூத்து அரங்குகள் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். அவை படச்சட்டக அரங்கு, வட்ட அரங்கு, அரைவட்ட அரங்கு...இப்படி.

ஆனால், இந்த மாய அறை பற்றி அறிந்தது மிகக்குறைவே. நடிகர் கமல் *அபூர்வ சகோதரர்கள்* படத்தில் இப்படியான மாய அறையைப் பயன்படுத்தி தனது உருவத்தைக் குட்டையாக்கி நடித்துப் பாராட்டுகளைப் பெற்றிருக்கிறார்; வேறும் ஒரு படத்தில் இதைப் பயன்படுத்தியிருக்கிறார் என்று மட்டும்தான் பொதுவாக அறிந்து வைத்திருக்கிறோம்.

இப்போ *மானாட மயிலாட* என்ற நிகழ்வினூடாக மீண்டும் அதைப் பற்றிய ஆர்வம் தூண்டப்பட்டிருக்கிறது.

அதற்கு விருந்தாகவே, அந்த அறையின் மர்மங்களையும் மாயத் தோற்றங்கயையும் பற்றி இங்கு ஆராய்வதற்கு முற்படுகிறோம்.

முதலில் இங்கு *அரங்கு* என்ற சொற்பதம் பயன்படுத்தப்படவில்லை, என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். *அறை* என்ற சொற்பதமே பயன்படுத்தப்பட்டுள்ளது.


அரங்கு என்பது, அது விளையாட்டு அரங்காக இருந்தாலும் சரி, நடன, நாடக அரங்காக இருந்தாலும் சரி, பல நூறு அல்லது பல்லாயிரம் பார்வையாளர்கள் ஒரே நேரத்தில் அரங்கின் முன் அல்லது சுற்றிவர இருந்து பார்த்து இரசிக்க முடியும்.

ஆனால், மாய அறையை அவ்வாறு பலபேர்கூடியிருந்து நேரடியாகப் பார்த்து இரசிக்க முடியாது.

ஏனெனில் அங்கே காட்சியைப் பார்ப்பதற்கென்று பிரத்தியேகமான துவாரம் காணப்படுகிறது. அத்துவாரத்தினூடகவே பார்க்கமுடியும்.



எனவே, படமாக்கும் கருவி (வீடியோக் கமரா) நேரடியாக அதனைப் பதிவு செய்ய முடியும். இதனால், திரையரங்குகளினூடாகவோ அல்லது தொலைக்காட்சியினூடாகவோ பல கோடிக்கணக்கான பார்வையாளர்கள் அத்தகைய மாயக் காட்சியைக் கண்டுகளிக்க முடியும்.




மாயத் தோற்ற அறை

முதலாவது விசித்திரம்: அது யாதெனில், இங்கே பார்ப்பதற்கான பிரத்தியேக துவாரத்தினூடாக அந்த அறைக்குள்ளே நோக்கும் பொழுது இந்த அறை, கன வடிவமானதாகத் தெரியும். ஆனால், இது சரிவக வடிவமானதாக அமைக்கப்பட்டுள்ளது என்பதுதான் உண்மை.

இரண்டாவது விசித்திரம்:

அந்த அறையில் இருக்கும் ஒரு நபர் அல்லது பொருள் அறையின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு நகரும் பொழுது, அந்த உருவம் வளர்ந்து செல்வதுபோல அல்லது தேய்ந்து(குறுகி) செல்வது போலத் தோற்றமளிக்கும்.

ஒத்த உயரமுடைய இருவர் அல்லது இரட்டையர்கள் இந்த அறைக்குள்ளே இருப்பார்களாயின் ஒருவரை நெட்டையாகவும் மற்றவரைக் குட்டையாகவும் காண முடியும்.

இது அவர்கள் நிற்கின்ற நிலையத்தை அல்லது அசைகின்ற பாதையைப் பொறுத்து மாறுபாடு அடைகிறது. இத்தருணத்தில் எமது கண்களையே எம்மால் நம்பமுடியாமல் இருக்கும். அந்த இரட்டையர்களா இவர்கள் என்று சந்தேகிக்கத் தோன்றும். ஏனெனில் உருவத்தை விரித்தும் சுருக்கியும் காண்பிக்கும் -தோற்ற மாறுபாட்டை உருவாக்க இந்த அறையால் முடிகிறது.

இவை மட்டுமல்ல இந்த அறைக்குள்ளே வரையப்படும் சித்திரங்கள், அதற்குள்ளே கையாளப்படும் பொருட்கள்(கலைப்பொருட்கள்) இவையும் கூட சேர்ந்து மாயாயாலம் செய்யக்கூடியவை. எம்மைப் பிரம்மிக்கவைக்கக் கூடியவை.

இத்தகைய மாயத்தோற்ற அறை உலகிலேயே இருபதாம் நூற்றாண்டிலேயே (1946) முதன் முதல் உருவாக்கப்பட்டது. அத்தகைய முதலாது ஸ்தாபகர்தான் அமெரிக்காவைச் சேர்ந்த கண் மருத்துவரான அடேல்பேர்ட் எமிஸ் (Adelbert Ames) என்பவராவார்.

இவர், 19 வது நூற்றாண்டின், ஹேர்மான் ஹெல்ம்ஹோல்ட்ஸ் என்பவரது சிந்தனைக் கருதுகோளை அடிப்படை மூலமாக வைத்தே செயற்பட்டார்.

மாயக்காட்சி அறை அடேல் பேற் எமிஸ் என்பவரால் முதன் முறையாக உலகில் தோற்றுவிக்கப்பட்டதால், இவ் வைறையை எங்கே ஸ்தாபித்தாலும் *எமிஸ் அறை* என்றும் அழைக்கிறார்கள்.

**எமிஸ் அறையின் கட்டமைவு:**

எமிஸ் அறையை உள்ளே நோக்கும் பொழுது, அது சாதாரண அறைகள் போன்று கனவடிவில் தோன்றினாலும், உண்மையில் அது சரிவக வடிவத்தில் கட்டப்பட்டிருக்கிறது. உண்மையான வடிவம் திறமையாக, எமக்குத் திரித்து, கன உருவம் போல் காண்பிக்கப்படுகிறது. இவ்வாறு காண்பிப்பதில் அறைக்குள் செலுத்தப்படும் நேரான ஒளிக்கற்றைகளின் பங்களிப்பும் முக்கியமானதாகும். இவை மட்டுமல்ல அதற்குள்ளே இன்னும் பல மாறுபாடான விடயங்கள் இருக்கின்றன.

அறையின் நிலம்,கூரை,சில சுவர்கள், தூரத்திலுள்ள யன்னல் ஆகியவையும் கூட சரிவக வடிவமான மேற்பரப்பைத்தான் கொண்டிருக்கின்றன.

அறையின் நிலம்(தளம்) மட்டமாக இருப்பது போல் எமக்குத் தோன்றினாலும், உண்மையில் அது இடது பக்க மூலை, வலது பக்க மூலையிலும் மிகத்தாழ்வாக இருக்கும். அல்லது வலது பக்க மூலை, இடது பக்க மூலையிலும் மிகத்தாழ்வாக இருக்கலாம்.

சுவர்கள், நிலத்துக்கு செங்குத்தாக இருப்பதுபோல் தோன்றினாலும், உண்மையில் அவை, சற்று வெளிநோக்கிச் சாய்வாக அமைக்கப்பட்டுள்ளன.


இத்தகைய, வழமையான எமது கட்டட நிர்மாண முறைகளுக்கு மாறான வேறொரு விதத்தில் அமைக்கப்பட்ட இவ்வறை, மாயத் தோற்றக் காட்சிகளை விளைவிப்பதற்கு இன்னொரு முக்கியமான காரணியும் பங்களிக்கிறது என அறிஞர்களான செக்கல், கிளார்க் (Seckel and klarke) ஆகியோர் கூறுகிறார்கள்.

அதாவ்து, எமது மூளையின் செயற்பாடும், இந்த மாயத்தோற்ற விளைவுக்கு பங்களிக்கிறது. மூளையின் காட்சியமைப்புத் தொகுதியானது, இயற்கையில் நாம் பார்த்துப் பழகிய எமது கடந்த கால அனுபவங்களின் அடிப்படையிலே இக்காட்சிகளை மதிப்பிடுகிறது. எனவேதான் எமிஸ் அறையின் மர்மங்கள் எமக்குப் புலப்படாமல் போகின்றன.

மக்கள், தமது கலாசாரத்தில், சூழலில் காணப்படாத- கட்டமைவை கருதுவதில்லை, கற்பனை செய்யவதில்லை. தமக்குத் தெரிந்த சதுரம், முக்கோணம், கனவடிவம், கோளம்... இவற்றை இலகுவாக பதிவு செய்துகொள்கிறார்கள். இதுவும் மாயத்தோற்றத்தில் முக்கியமான பங்காற்றுகின்றது என்பதே அவர்களின் கூற்றாகும்.

**எமது கண்கள் எம்மை ஏமாற்றுகின்றனவா...?**

சில சமயங்களில் எமது கண்கள் எம்மை ஏமாற்றுகின்றன இதை, நாம் சொல்லவில்லை. உளவியலறிஞர் றிச்சாட்



கிறெகொறி (Richard Gregory) சொல்கிறார்.

அவர் மேலே காட்டப்படும் புகைப்படத்தை அதற்கு உதாரணமாகத் தருகிறார். இந்தப்படத்தில் ஒரு பெரியவரும் அவர் அருகே ஒரு சிறியவரும் நிற்கிறார்கள் என நாம் எண்ணிக் கொள்கிறோம். அவர்களின் பாதம் ஒரே கிடைத்தளத்தில் இருப்பது போலவும் தோன்றுகிறது. ஆனால், உண்மை அதுவல்ல. பெரிய உருவத்தவர் தரையின் முன்பகுதியிலும் சிறிய உருவத்தவர் தரையின் பின்பகுதியிலும் உள்ளனர்.

ஆயினும் புகைப்படக் கமரா நில மட்டத்துடன் இருந்ததாலும் பின்னணிக் காட்சி மறைக்கப்பட்டிருப்பதாலும் எமது கண் நம்மை ஏமாற்றுகிறது புரிகிறதா?

யாழ்.பாமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரி - மகிந்த சந்திப்பு தர்மசங்கடத்தில் சந்திரிகா

அரசியலில் இதெல்லாம் சாதாரணம் என்று சில சம்பவங்களைச் சுட்டிக்காட்டமுடியும். எதிரிக்கெதிரி நண்பர்கள் ஆவதும், நண்பர்களுக்கு இடையில் பிளவு ஏற்பட்டு எதிரியாவதும் தொண்டர்கள் தலைவராவதும் தலைவர்கள் சிறைக்குச் செல்வதும் பின்னர் தாம் சிறைக்குச் சென்றதற்கு காரணமானவர்களைச் சிறைக்கு அனுப்ப படாத பாடுபடுவதும் என்று இந்தப் பட்டியல் நீண்டுகொண்டு செல்லும்.

இலங்கை அரசியலிலும் இநத நடைமுறைகளை விலக்கிய காலகட்டம் உண்டு என்று எக்காலத்தையும் குறிப்பிட்டுக கூற முடியாது. காரணம் அவ்வாறான காலகட்டம் இருந்ததில்லை. அதற்கான சூழ்நிலையை நம்முடைய அரசியல்வாதிகள் ஏற்பட விட்டதுமில்லை. இனியும் விடப்போவதில்லை. ஏனெனில் அரசியலில் இவை சாதாரணமான விடயங்களாகப் பார்க்கப்படுகின்றன.

எதிரிக்கெதிரி நண்பர்கள் ஆனதால் இலங்கை அரசியலில் பெரும் திருப்புமுனையை கடந்த ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தல் ஏற்படுத்தியிருந்ததை யாவரும் அறிவார்கள். இதை அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகள் கூட ஆசியாவில் நிகழ்ந்த பெரும் அரசியல் மாற்றம் என்று வர்ணித்தும் உள்ளன. அந்த அளவிற்கு இலங்கை ஜனாதிபதித் தேர்தல் ஆசியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது உண்மையே.

இந்த பரபரப்புக்கு முழுக்காரணமானவர் மகிந்த ராஜபக்ஷவே. அவர் நீதித்துறையில் தேவையற்ற தலையீடுகளை அதிகளவில் செய்து ஆட்சிப் பீடத்தில் நிலைத்திருக்க வேண்டும் என அயராது பாடுபட்டதையும் ஆட்சிக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் தேர்தலை நடத்தி தேவையில்லாத புறக்கணிப்புக்கு உட்பட்டதையும் யாவரும் அறிந்திருப்பார்கள். ஆட்சி மோகம் ஆட்சியிலிருந்து அவரை அகற்றியது.

இது இவ்வாறிருக்க , இறுதிக் கட்டப் போர் பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்களைக் காவுகொண்ட நிலையில் அதற்கான நீதி, நியாயத்தை சர்வதேச நாடுகள் பெற்றுத்தரும் என்று அளவு கடந்த நம்பிக்கையினை வைத்து எதிர்பார்த்து நின்ற, நிற்கின்ற ஈழத்தமிழருக்கும் ஜனாதிபதித் தேர்தல் முடிபுகள் பழிக்குப் பழிவாங்கிவிட்டோம் என்ற மனக் கிளர்ச்சியை ஏற்படுத்தியிருந்ததையும் மறுப்பதற்கில்லை.

மைத்திரி தமிழரின் வாக்குப் பலத்தினால் ஜனாதிபதியானார் என்ற மகிழ்ச்சியைவிட சிறுபான்மையினரின் வாக்குகள் எமக்குத் தேவையில்லை என்ற ஆணவம் மேலோங்கிய மகிந்த பட்டாளத்திலிருந்த சிங்கள அமைச்சர்கள் சிலரின் கருத்துக்களுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாகவும் ஆயுதவழியில் ஒடுக்கியவர்களை ஜனநாயக வழியில் வீழ்த்தும் நோக்குடன் வாக்களித்து மகிந்தவை ஆட்சியிலிருந்து அப்புறப்படுத்திய மனக்கிளர்ச்சியாகவே இவை பார்க்கப்படுகின்றன. சிங்கள பௌத்தர்கள் என்ற இறுமாப்பிலிருந்தவர்களு க்கும் இது பெரும் இடியாகவே விழுந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் உருவாக்கப்பட்ட பொது எதிரணியில் போட்டியிட்டு மகிந்தவுக்கு ஆப்பு வைத்த மைத்திரி 100 நாள் திட்டத்தை ஆரம்பித்தும் பொருட்களின் விலைகளைக் குறைத்தும் மகிந்த ஆட்சியில் நடந்த ஊழல் மோசடிகளை வெளிக்கொணர்ந்தும் சீனா, பாகிஸ்தான் நாடுகளை ஓரங்கட்டி அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகளை அரவணைத்தும் செல்லமுற்பட்டார்.

100 நாள் திட்டத்தில் தமிழருக்கு நன்மைகள் எதுவுமில்லை என்ற போதிலும் நல்லாட்சிக்கான சில நன்மைகளை தமிழர்களில் சிலர் அனுபவிக்க முடிந்தது. 6 ஆயிரத்து 500 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் வலிகாமம் வடக்கில் இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள்ளடக்கப்பட்டிருந்த நிலையில் 1000 ஏக்கர் காணிகள் மட்டுமே தற்போது விடுவிக்கப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

புதிய அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் எரிபொருள் உள்ளிட்ட பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டாலும்கூட அதற்காக தமிழ் மக்கள் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தவில்லை.காரணம் தமிழரின் எதிர்பார்ப்புகளும் மத்திய அரசு கொடுக்க முற்படுவதும் என்றும் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாகவே யுள்ளது.

தமிழருக்கு கொடுத்த அல்லது அவர்களின் வாக்குகளுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையையும் மத்திய அரசு கொடுக்க மறுத்துவரும் நிலையில் மைத்திரி மகிந்த சந்திப்பு அண்மையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

தென்னிலங்கையில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த இந்நாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்து பேச்சு நடத்தியிருப்பது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். எதிர்வரும் பொதுத் தேர்தலில் அக்கட்சிக்கு போதுமான ஆதரவு மக்கள் மத்தியில் கிடைக்கும் என்பதற்கு அப்பால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இக்கட்டான நிலையை ஏறபடுத்தியுள்ளது என்பதை ஏற்றாலும் ஏற்காவிட்டாலும் உண்மையதுவாக வேயுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் களத்தில் மைத்திரி- மகிந்த ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சியின் இரகசிய நடவடிகைகளும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் முயற்சிகளும் வழிவகுத்தன. அவற்றுக்கு இந்தியா, அமெரிக்கா போன்ற சர்வதேச நாடுகள் முன்னின்று உழைத்ததையும் சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் மகிந்தவை மீண்டும் ஜனாதிபதியாக்கிவிடவேண்டும் என்பதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கும் என்பதையும் கூறமுடியும். ஏனெனில் அந்த நாடுகள் மகிந்தவின் அவசியத்தைப் புரிந்து வைத்திருந்தன.

மைத்திரி - மகிந்த சந்திப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தற்போதும் உள்ள மகிந்த விசுவாசிகளுக்கும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில,வாசுதேவ நாணயக்கார உள்ளிட்டவர்களின் எதிர்பார்ப்புக்கள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதோடு பிரதமர் கனவிலிருக்கும் மகிந்தவுக்கு ஏமாற்றத்தையே இந்தச் சந்திப்பு ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும் மகிந்த- மைத்திரிசந்திப்பு ஐக்கிய தேசியக்கட்சிக்கும் சந்திரிகாவுக்கும் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது.

மைத்திரி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடிவெடுப்பதற்கு முன்பிருந்தே சந்திரிகா மீது மகிந்த கடும் கோபங்கொண்டிருந்தார். இதனை எதிர்கொள்ள முடியாமல் அரசியல அநாதையாக சந்திரிகா மகிந்த ஆட்சிக்காலத்திலிருந்தார். இதனை அவரே தனது வாயால் கூறி புலம்பியதையும் ஊடகங்கள் வாயி லாக மக்கள் அறிந்திருந்தனர்.

மகிந்தவின் கோபம் சந்திரிகா மீது அதிகரிப்பதற்கு ஏற்றசூழ்நிலையை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்படுத்தியருந்த அதேவேளை பொது எதிரணியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரியை நறுத்த சந்திரிகாவின் உதவியைப் பெற்றுக்கொண்டது. இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த மகிந்த மீணடும் ஆட்சிப் பீடம் ஏற வேண் டும் என்ற நோக்கோடு மைத்திரியை சந்தித்திருந்தார். ஆனால் அந்தச் சந்திப்பில் அவரின் எதிர்பார்ப்புக்களை மைத்திரி நிறைவேற்ற சம்மதத்தை உடனடியாக வெளிப்படுத்தவில்லை என்றாலும் மைத்திரி- மகிந்த சந்திப்பு சந்திரிகாவுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது, ஏற்படுத்தியிருக்கும் என்பதைக்கூற முடியும்.


ஜனாதிபதி மைத்திரிபால சிறிசே னவுக்கும் மகிந்த ராஜபக்ஷவி னால் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சம் அதிகளவில் உள்ளது என்பதால் உடனடியாக எந்த முடிபையும் அவர் எடுக்கமாட்டார் என்றபோதிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலை வர் என்ற ரீதியில் கட்சி உறுப்பி னர்களின் கருத் துக்களுக்கும் வலி யுறுத்தல்களு க்கும் அவர் முக்கியத்தும் கொடுத துததான் ஆகவேண்டும். இல்லை யேல் பாராளுமன்றத் தேர்தலில் பெரும் பின்னடைவைச் சந்திக்க நேரிடலாம்.

மகிந்தவை அரவணைத்துச் செயற்பட்டால் பிரதமர் ரணிலின் ஆதரவை இழக்க நேரிடும். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் எதுவும் செய்யமுடியாத ஜனாதிபதியாக தாம் இருப்பதையும் மைத்திரி விரும்பமாட்டார் என்பதால் சந்தி ரிகாவையும் ஓரங்கட்ட முடியாது. அதேவேளை மகிந்தவை அகற்ற சந்திரிகா எடுத்த ரிக்சை யாரும் மறந்துவிட முடியாது. ஜனாதிபதி மைத்திரியும சந்திரிகாவின் அர்ப்பணிப்புக் களை மறந்து செயற்படமாட்டார் என நம்பலாம்.

எஸ்.ஆர்.கரன்

## எனது பிரதான எதிரி சந்திரிகாவே - மகிந்த

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ இருந்த போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராகயிருந்த மைத்திரிபால சிறிசேன (மத்திய சுகாதார அமைச்சர்) ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்ட பொது எதிரணியில் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய போது தன்னை எதிர்த்து நின்ற மைத்திரிபால சிறிசேனவை விட தனது பிரதான எதிரி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவே என்று பகிரங்கமாக தெரிவித்திருந்தார். மகிந்த ராஜபக்ஷ 04.12.2014 அன்று தேசிய பத்திரிகைகளின் ஆசியர்களுடன் கொழும்பில் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.



## என்னை மோச மாகத் திட்டினார் மகிந்த - சந்திரிகா

ஜனாதிபதியாக மகிந்த பொறுப்பேற்றதன் பின்னர் அவருக்கு வாழ்த்து தெரிவிப்பதற்காக தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியபோது என்னை 19 நிமிட ங்கள் தொடர்ச்சியாக தகாத வார்த்தைகளினால் திட்டித் தீர்த் தார். நான் அமைதியாக அவர் கூறியவற்றையெல்லாம் கேட்டு விட்டு குறிப்பிட்ட சிலர் மாத்தி ரமே அறிந்த அவரின் வாழ்க்கை இரகசியத்தை கூறினேன். உடனே அவர் தொலைபேசி அழைப்பை துண்டித்துவிட்டார். பின்னர் மகிந்த என்னை சிறிது சிறிதாக பழிவாங்கினார்.

என்னை உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேற்றுவ தற்காக எனக்கு எதிராக வழக்குத் தொடுத்தார். இந்நிலையில் மகிந்த கடந்த 9 ஆண்டுகளாக நடத்திய அரசியல் சீரழிவுகளை தாங்கிக் கொள்ள முடியாமல் பல்வேறு தரப்பினரும் என்னை மீண்டும் அரசியலுக்கு வருமாறு வற்புறுத் தினர் என மனக்கவலையுடன் தெரிவித்திருந்தார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா. 06.02. 2015 அன்று கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமூடி மாறினாலும் முகம் ஒன்றேதான்!

இலங்கை அரசியலின் உள்நாட்டுக் குழப்பம் இப்போது உச்சத்தில் இருக்கிறது. 37 ஆண்டுகளாக இலங்கையில் அதிகாரத்துடன் கோலோச்சிய ஜனாதிபதி ஆட்சி, முடிவுக்கு வந்துவிட்ட நிலையில் ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைத்து, பிரதமருக்கும் நாடாளுமன்றத்துக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்கும் 19 ஆவது சட்டத் திருத்ததைக் கொண்டு வந்திருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அதாவது, தன் அதிகாரங்களைக் குறைக்கும் சட்ட திருத்தத்தை, தானே நிறைவேற்றியிருக்கிறார். இதுநாள் வரை வெறும் பொம்மையாக இருந்த பிரதமருக்கான அதிகாரங்களை அதிகரித்திருக்கிறார். தன்னைத் தானே டம்மியாக்கிக் கொள்ளும் இந்த சூது அரசியலின் உள்குத்து என்ன?

இலங்கைத் தீவில் இப்போது நிலவும் அரசியல் சூழலில், ஆளும் கட்சி எது, எதிர்க்கட்சி எது என்பதுகூடத் தெரியாமல் மக்கள் குழம்பி இருக்கிறார்கள். தோல்வி அடைந்ததாக நம்பப்படும் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் எழுந்துவிடக் கூடாது என்பதற்காக, பரம எதிரிகளான சந்திரிகாவும் ரணிலும் ஒன்று சேர்ந்து மைத்திரியை அதிபராக்கி விட்டு திரைமறைவில், "மக்களின் அதிபர்களாக' வலம் வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் தி.மு.க., அ.தி.மு.க போல நேரெதிர் துருவங்களில் இருந்து அரசியல் செய்யும் கட்சிகள்தான் ரணில் விக்ரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியும், சந்திரிகாவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும். கடந்த 10 ஆண்டுகளாக ராஜபக்ஷவை வீழ்த்த வழி தெரியாமல் தடுமாறி வந்தார் சந்திரிகா. இந்த நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராகவும் கட்சியிலும் பொது மக்களிடமும் ஓரளவு நற்பெயரைப் பெற்ற வருமான மைத்திரியை, தன் பக்கம் இழுத்தார். தன் அரசியல் எதிரியான ரணிலோடும், எதிரிக்கு எதிரியான சரத் பொன்சேகாவோடும் கூட்டணி சேர்ந்தார்.

மைத்ரி பால சிறிசேனவை பொதுவேட்பாளராகக் களம் இறக்கி, சிறுபான்மை மக்களின் வாக்கு பலத்துடன் ராஜபக்ஷவை வீழ்த்தினார். ஆனால், சிங்களர்கள் செறிவாக வாழும் பகுதிகளல் மைத்திரிக்கு அதிக வாக்குகள் இல்லை. இன்னும் சிங்களர்களின் ஏகோபித்த ஒரே தலைவர் ராஜபக்ஷதான் என்பதையே, கடந்த தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டின.

தமிழ் மக்களின் வாக்கு பலத்தில் மைத்திரி வென்றிருந்தாலும், தான் தமிழ் மக்களின் நண்பன் எனக் காட்டிக்கொள்வது, சிங்கள மக்களிடம் பகையை உருவாக்கி தனது அரசியல் எதிர்காலத்துக்கே ஆப்பு வைத்துவிடும் என மைத்திரி நினைக்கிறார். அதனால் இப்போதைக்கு ராஜபக்ஷவை நிரந்தரமாகப் பலவீனமாக்குவதே மூவர் கூட்டணியின் திட்டம். அதன் ஆரம்பம்தான், அதிபர் ஆட்சிமுறையை ரத்து செய்வது.

இலங்கை அரசியல் சாசனப்படி, ஒருவர் இரண்டு முறைக்கு மேல் அதிபராக இருக்க முடியாது. சந்திரிகா, இரண்டு முறை அதிபராக இருந்துவிட்டார். ரணில் விக்ரமசிங்கவால் பிரதமராக முடிந்ததே தவிர, அதிபராக முடியவில்லை. அதிபராகும் அளவுக்கு மக்களிடமோ அவருக்கு செல்வாக்கு போதவில்லை. இடையில் வந்த மகிந்த ராஜபக்ஷவோ யுத்தத்தை வென்று சிங்களப் பெருந்தேசியத்தின் நாயகனாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டார்.

ராஜபக்ஷ 18 ஆவது சட்டத் திருத்தம் மூலம், இரண்டு முறைகளுக்கு மேலும் அதிபராகத் தொடரலாம் என, சர்வாதிகாரத்தை நோக்கி நகர்ந்தார். இப்போது 19 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தில் அதிபரின் அதிகாரங்களைக் குறைத்து, பிரதமருக்கும் நாடாளுமன்றத்துக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்துள்ளதன் மூலம், ராஜபக்ஷவை வீழ்த்தலாம் என நினைக்கிறது இந்த மூவர் அணி.

இந்த அரசியல் போட்டியில் தமிழ் மக்களின் நிலை என்னவாகும்? இது சிங்களவர்களுக்கு இடையே உருவாகியுள்ள அதிகாரப் போட்டியாகும். ராஜபக்ஷவை வீழ்த்தி, அதி காரத்தைக் கைப்பற்ற நினைக்கிறார் சந்திரிகா.

பொது எதிரியான ராஜபக்ஷவை வீழ்த்த ஒன்று சேர்ந்த ரணிலும் சந்திரிகாவும், வரவிருக்கும் பிரதமர் பதவிக்கான பொதுத் தேர்தலில் ஒன்றுசேர்ந்து நிற்க முடியுமா? அப்படி நின்றால், பிரதமர் சந்திரிகாவா... ரணிலா என்பது அடுத்த புகைச்சலுக்கான ஆரம்பமாக இருக்கும்.

இப்போது இலங்கையில் நடந்திருக்கும் அரசியல் மாற்றத்தை சிறிய அளவிலான நல்ல விடயமாகவே பார்க்கிறார்கள், சிவில் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் சமூக ஆர்வலர்கள்.

'போர் முடிந்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. விலைவாசி குறைந்திருக்கிறது. சம்பளம் உயர்ந்திருக்கிறது. குண்டுகள் விழும் ஓசையோ, உயிர்பயமோ இல்லை. அந்த அளவில் இது சிறிய அளவிலான முன்னேற்றம். ஆனால், இதுமட்டுமே தமிழ் மக்களின் பிரச்சினை அல்ல. அடிப்படைப் பிரச்னையான சிங்களவர், தமிழர் இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான எந்த விவாதமும் சிங்களத் தரப்பில் இல்லை. அதை மீண்டும் மீண்டும் பேசுவது தமிழர் தரப்பாக மட்டுமே இருக்கிறது. ராஜபக்ஷ மறுபடியும் அதிகாரத்துக்கு வந்துவிடக் கூடாது என்பதுதான் மைத்திரி - சந்திரிகா - ரணில் குழுவின் நோக்கமாக உள்ளதே தவிர, இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என அவர்கள் முயற்சிக்கக்கூட இல்லை.

தவிரவும் ராஜபக்ஷவை அரசியல் ரீதியாகப் பலவீனப்படுத்த வேண்டும் எனில், சிங்கள மக்களைப் பகைத்துக் கொள்ளக் கூடாது. தமிழ் மக்களுக்கு ஆதரவாகவோ, கரிசனமாகவோ இருக்கிறோம் எனப் போலியாகக்கூட காட்டிக்கொண்டால், சிங்கள மக்கள் நிராகரித்துவிடுவார்கள் என்ற அச்சம். அதனால்தான், தேர்தலின்போது வாக்குறுதி அளித்த விடயங்களைக்கூட நிறைவேற்றாமல் இருக்கிறது மைத்திரி அரசாங்கம்.

ஜனாதிபதி ஆட்சி, இல்லாமல் போகலாம் ஆனால், ஜனாதிபதியால் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் இன்னும் அமுலில் இருக்கிறது. வடக்கில் இராணுவக் குவிப்பு முற்றிலும் குறையவில்லை. காணாமல் போனவர்கள், கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை எடுப்பதுகூட சாத்தியமற்று இருக்கிறது. சிங்களத் தலைமைக்குள் உருவாகும் முரண்பாட் டைத் தீர்த்துக்கொள்ளும் ஒரு வாக்கு வங்கிக் கருவியாக சிறுபான்மை மக்கள் பயன்படுத்தப்படுகிறார்கள்' என்கிறார் அரசியல் விமர்சகர் நிலாந்தன்.


அதிபர் ஆட்சி என்ற இரும்புத் திரை இலங்கையில் இருந்து விலக, தென்னிலங்கை சிங்களர்களும் சில பௌத்த அமைப்புகளும் கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றன. வரவிருக்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டமும் சாட்சியங்களைப் பாதுகாக்கும் சட்டமும் முக்கியமானவை. ஆனால், அவற்றைத் தமிழ் மக்கள் பயன்படுத்த முடியுமா என்பது சந்தேகமே. காணாமல் போனவர்கள் பற்றி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேள்வி எழுப்பினால், அது தேசப் பாதுகாப்பு என மறுக்கப்படுவதுடன், கேள்வி கேட்டவரைக் கைதுசெய்யவும் வாய்ப்பு இருக்கிறது.

எழுத்தாளர் தீபச்செல்வனிடம் பேசிய போது... 'ராஜபக்ஷவுக்கு எதிராகப் பேசும் மைத்திரி, தமிழ் மக்களைக் கொலை செய்த குற்றத்துக்காக ராஜபக்ஷ மீது கை வைக்க மாட்டார். அந்த இனப்படுகொலை போரையே இன்னும் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்றுதான் மைத்திரி சொல்கிறார். பௌத்த சிங்களப் பேரினவாதத்தை உறுதிப்படுத்துவதில் தெளிவாகச் செயறபட்ட இந்த அரசு, வடக்கு, கிழக்கில் இருந்து ராணுவத்தை வெளியேற்ற மறுத்துவிட்டது. இந்த ஆட்சியைக் கொண்டு வந்ததில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பணி முக்கியமானது. அவர்கள்தான் தமிழ் மக்களின் வாக்குகளை மைத்திரிக்குப் பெற்றுத்தந்தார்கள். அந்த வகையில், அரசும் தமிழ் மக்களை வஞ்சிக்கும் நிலையில், அடுத்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற போராட வேண்டிய சூழல் வரும். சிங்களவர்களுக்குள் உள்ள அதிகாரப் போட்டிக்கு மத்தியில் யாரை ஆதரிப்பது, யாரை எதிர்ப்பது என்ற சிக்கலான சூழலில்தான் உள்ளது தமிழர் அரசியல' என்கிறார்.

காலம்தோறும் ராஜபக்ஷக்களும் மைத்திரிகளும் சந்திரிகாக்களும் வெவ்வேறு முகமூடிகளுடன் வந்தாலும், அவர்களின் முகம் ஒன்றே.

அது... பேரினவாதத்தின் முகம்!


**யூனியர் விகடன்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன்
இசை: எஸ்.எம். சுப்பையா நாயுடு
திரைப்படம்: அன்னையின் ஆணை



பத்து மாதம் சுமந்திருந்து பெற்றாள்
பகல் இரவாய் விழித்திருந்து வளர்த்தாள்
வித்தகனாய் கல்வி பெற வைத்தாள்
மேதினியில் நாம் வாழ செய்தாள்

அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை
அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை
- அவள்
அடி தொழ மறப்பவர் மனிதரில்லை
மனிதரில்லை மண்ணில் மனிதரில்லை
அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை

துன்பமும்தொல்லையும்ஏற்றுக்கொண்டே ஏ..ஆ...
துன்பமும் தொல்லையும் ஏற்றுக்கொண்டே
- நம்மை
சுகம் பெற வைத்திடும் கருணை வெள்ளம்
சுகம் பெற வைத்திடும் கருணை வெள்ளம்
அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை

நாளெல்லாம் பட்டினியாய் இருந்திடுவாள் -
ஒரு
நாழிகை நம் பசி பொறுக்க மாட்டாள்
மேலெல்லாம் இளைத்திடப் பாடுபட்டே
மேன்மையாய் நாம் வாழ செய்திடுவாள்
ஆஆஆஆ..
அன்னையைப் போல் ஒரு தெய்வம்
இல்லை

இப்பாடலை
**SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
சத்யசீலன்-பண்டத்தரிப்பு,ராமதாஸ்-கணேஷபுரம், சங்கீத்-தொண்டைமானாறு, சர்மி-கீரிமலை, S.பரமேஸ்வரன்-யாழ்ப்பாணம், T.தர்சியா-வயாவிளான் கிழக்கு, பொ. சுந்தரம் -கந்தரோடை, சுபந்திரா, சந்திரா, பவானி(கந்தரோடை), அமிர்தா-யாழ்ப்பாணம்,தவயோகநாதன்-பலாலி, ஜெயகொடி- கோண்டாவில், அருமைச் சந்திரன்-நீர்வேலி, உத்தமன்-யாழ்ப்பாணம், யோக நாதன்-கொட்டடி, புஸ்பராணி-மாவிட்டபுரம்,இராசேந்திரம்,சுமதி-மாவிட்டபுரம்.

அன்பு வாசகர்களே !

**காலத்தால் அழியாத கானங்கள்** பகுதிக்கு, தங்களுக்கு விருப்பமான பழைய பாடல்களின் முதற்பந்தியுடன் அப்பாடலை யாருக்காக விரும்பிக் கேக்கிறீர்கள் என்பதையும் குறிப்பிட்டு, உங்கள் பெயர் முகவரி என்பனவற்றை ஆசிரியர், காலத்தால் அழியாத கானங்கள், வலம்புரி - சாங்குநாதம், இல.3. 2 ஆம் ஒழுங்கை, பிறவுண வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவை ங்கள்.

அல்லது 021-5671543 என்ற இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள். நீங்கள் விரும்பும் பாடல் இப பகுதியில் முழுமையாக பிரசுரமாக்கப்படும்.

## ஈழத்து சினிமா

### அச்சம் தவிர் சினிமா விமர்சனம்




நீண்ட தசாப்தங்களுக்குப்பின் முற்றுமுழுதாக யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டு திரையிடப்பட்ட முழுநீளத் திரைப்படம் அச்சம்தவிர். ஈழத்து தமிழ் சினிமா உருவாக்கத்தில் வணிகசினிமாவினை நோக்கி முன்னகர்த்த ஏதுவான முயற்சியாக இத்திரைப்பட உருவாக்கமும் திரையிடலும் அமைந்திருக்கின்றன.

இரவு கடைசிநேர பிரயாண பஸ்சை தவறவிட்டு வீடுசெல்ல தவிக்கும் கல்யாணசுந்தரம் ஒரு கொலையைக்காண நேருகின்றது. கொலைசெய்தது ஆதியும் அவர்களின் காங்ஸ்டர் நண்பர்களும். கொலையை பார்வையிட்ட கல்யாணசுந்தரம் ஆதிக்கு எதிரான முக்கியமான சாட்சியாக மாறிவிட கல்யாணசுந்தரத்தின் தடயங்களை விட்டுவிட்டு கல்யாணசுந்தரத்தினையும் கடத்திக்கொண்டு ஆதிகுழாம் தலைமறைவாகின்றது. தடயங்களை பின்பற்றும் பொலிஸார் கல்யாணசுந்தரம்தான் கொலையாளி என்ற கோணத்தில் விசாரணையை முடுக்குகின்றது. அதேநேரத்தில் கொலைசெய்யப்பட்டவரின் இரகசிய மகனான காங்ஸ்டர் குருவும் கொலையாளியை பழிவாங்கும் நோக்குடன் தேடத்தொடங்குகின்றார். இந்தபாணியில் செல்லும் கதை கொலையின் பின்னணிக்கு என்ன காரணம் என்ற சுவாரசியத் தேடலுடன் நகர்கின்றது.

படத்தில் காட்டப்படும் காட்சிகள் யாழ்ப்பாணத்தில் கதைநடப்பதாக தெளிவுபடுத்துகின்றது. யாழ்ப்பாணத்துக்கு புதியகற்பனையான தளம் ஒன்றினை அமைத்து கதாப்பாத்திரங்களை இயங்கவைத்திருக்கின்றார் இயக்குநர் கவிமாறன் சிவா. அந்தத்தளத்தில் காங்ஸ்டர்கள் ஆயுதங்களுடன் சுதந்திரமாக யாழ்நகரத்தை சுற்றிவருகின'றனர். எந்த இராணுவ கெடுபிடிகளும் இல்லாத சுதந்திர நகரம். நகரமத்தியில் தென்னிந்திய சினிமாப்பாணியில் ஒருவரையொருவர் துரத்துகின்றனர். சரமாரியாக சுட்டுக்கொள்கின்றனர். தமிழ் பொலிஸார் உயர்பதவிகளுடன் வந்துபோகின்றனர் காணி,பொலிஸ் அதிகாரங்களுடன் 13 பிளஸ் வழங்கியாகிவிட்டதா என்று கிள்ளிப்பார்த்துக்கொள்ளத் தோன்றுகின்றது.

வசன உருவாக்கம் ஏன் பக்குவம் இல்லாமல் அமைந்திருகின்றது என்றகேள்வி துளைத்தெடுக்கிறது. படத்தின் ஆரம்ப காட்சிகளிலே இதனை புரிந்து கொள்ள முடிகின்றது. கல்யாணசுந்தரம் பஸ்ஸ்டான்ட் ஊழியருடன் பேசும்போதும், ஆதி செய்யும் கொலையை பார்த்த பின்னும் செலுத்தும் வசனங்கள் செயற்கையாக அப்பாவிதனமாக மிளிர்கின்றது. "சேர்.." என்று கூறிக்கொண்டு உயர் சக பொலிஸ் அதிகாரி முதுகில் கைபோடும் காட்சிகள், இரவு களத்தில் படிமமாக்கப்பட்ட காட்சிகளில் கறுப்புக் குளிர்கண்ணாடியுடன் பொலிஸ் அதிகாரி என்று பல்வேறு காட்சிப் பிழைகள். எடிட்டர் துஷிகரன் முடிந்தளவு காட்சிகோர்புகளை செழுமைப்படுத்திபடிமங்களை செழுமை செய்திருக்கிறார். அவரின் கைவண்ணம் தனித்துவமாத் தெரிகிறது.

நடிகர்களின் நடிப்பு முடிந்தளவு இயல்பாக அமைந்திருகின்றது. கல்யாணசுந்தரமாக நடித்த உமாகரன் அட்டகாசமாக நடித்திருந்தாலும் செயற்கைத்தனமான உடல்மொழியினை கைவிட்டால் இன்னும் நன்றாக இருக்கும். குருவாக நடித்த யசிதரன் கண்களால்கூட அட்டகாசமாக நடித்து ஸ்கோர் செய்கின்றார். ஆதியாக நடித்த கதாநாயகன் சயன் மிகைபடாமல் அளவாக நடித்திருகின்றார். அறிமுகக்காட்சியில் துப்பாக்கியை சுழற்றியபடி கமராவுக்கு முகத்தைதிருப்பிக்காட்டும் காட்சிப் படிமங்களை தவிர்த்து இருக்கலாம்.

சுதர்சனின் இசை மிகப்பெரிய ப்ளஸ்பாயின்ட், பின்னணியிசையில் கிறங்கடிகின்றார்.

இயக்குநர் கவிமாறன் சிவா ஈழத்துசினிமாவினை வணிகத்துறையாக அமைக்க எடுத்துள்ள முயற்சிகள் பாராட்டத்தக்கது. ஆனால்தென்னிந்திய சினிமாவின் தாக்கம் தென்படுகிறது. நமக்கான ஈழத்து சினிமாவிற்கான தனித்துவத்தை கொண்டு வந்தால் சிறப்பாக இருக்கும். அவரின் முயற்சிக்கு சபாஷ்.

அனோஜன் பாலகிருஷ்ணன்

## ஈழத்து கவிதைகள்

கவிஞர் தா. பாலகணேசன்

### வண்ணத்துப்பூச்சிகளின் நடனப் பாடல்

அழகிய மலை குகைகுன்றெல்லாம்
மனம் மகிழ்ந்தாடு
அன்பெனும் பூக்கள்
மலர்ந்திட மலர்ந்திடக் கூத்தாடு

இளவேனில் காற்றில்
இறகுகள் அசை அசை அசைந்தாடு
இன்பப் பூக்களே
எங்கும் சொரிந்திட ஆடு

இனித் துன்பம் இல்லையென
செட்டை அடித்தாடு
படகின் துடுப்பில் குந்து- அதை
வலிக்கும் தோள்களில் ஏறு
நதியின் காற்றில் மோது
ஏறுஏறு விண்ணில் ஏறு
அள்ளிச் செல்லு மகரந்தங்களை
பூக்களின் வாசனையை
பூமியில் முகத்தில் பூசு

புயலின் ஒடியாச் சிறகுகள் தாங்கு
தாங்கு தாங்கு தாங்கு
சிந்திய வண்ண ஒளிச் சிறகினை
சூரியக் கதிர்களில் சூட்டியே ஆடு

எங்கும் பரவசம் பொங்கிட ஆடு
கூடெனும் சிறையை உடைத்தெழுந்த
குதூகலம் பொங்கவே ஆடு
கூட்டுப் புழுவாய் குமைந்த வாழ்வு
தொலைந்ததென்று பாடியே ஆடு

வெளி வெளி வெளி இனி...
காற்று உந்தன்
அழகிய சேலைகளைக்
கிழித்தல் கூடுமோ! மழை உந்தன்
அழகிய வண்ணங்களை கரைக்குமா?
சூரியன் உந்தன்
சுடர் அழகை சுடுவானா?

ஒரு கோடை நாளில்
நீங்கள் நிகழ்த்திய படை நடத்தலில்
எங்கள் குழந்தைகளின்
முகங்களில் பூசிய வர்ணங்களை
அவர்கள் அந்நிய தேசங்களிலும்
ஞாபகம் பொழியும் வண்ணமான
பாடலை பாடுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# திரைவிமர்சனம்

மரணத்தைக் கண்ணில் பார்த்துவிட்ட ஒரு நடிகன், சாகாவரம் பெற்ற கலைஞனாக நடிக்கிறான். இந்த முரண்பாட்டில் மையம் கொண்டிருக்கும் உத்தம வில்லன், மரணத்தை எதிர்நோக்கும் போது ஏற்படக்கூடிய உணர்ச்சிக் கொந்தளிப்புகளைப் பற்றிப் பேசுகிறது.

தமிழ் சினிமா கொண்டாடும் சுப்பர் ஸ்டார் மனோரஞ்சன் (கமல்ஹாசன்). ஒரு டீன் ஏஜ் பையனின் தந்தையான மனோரஞ்சனுக்கு இரகசியக் காதலியும் உண்டு (ஆண்ட்ரியா). வாழ்க்கையின் உச்சக்கட்ட வெற்றியைச் சுவைத்துக்கொண்டிருக்கும் தருணத்தில் கொடிய நோய் தாக்க, செய்யத் தவறிய பரிகாரங்கள், கடமைகளை வேகமாக நிறைவேற்ற முடிவுசெய்கிறான்.

ஒரு கலைஞனாக மக்கள் மனதில் இறவா இடம் பிடிப்பதற்காகத் தன்னை வளர்த்து ஆளாக்கிய இயக்குநர் மார்க்கதரிசியிடம் (கே. பாலசந்தர்) சென்று ஒரு சினிமா எடுக்கவும் வேண்டுகிறான்.



மனோரஞ்சனின் தனிப்பட்ட வாழ்க்கையும் மார்க்கதரிசியின் இயக்கத்தில் நடிக்கும் சினிமாக் கதையும் அடுத்தடுத்துச் சொல்லப்படுகின்றன. ஒரு நடிகனின் தனிப்பட்ட வாழ்க்கை, புகழும் செல்வமும் தரும் சங்கடங்கள், அவனுக்கு நேரும் பெண் உறவுகள், அதனால் எழும் சிக்கல்கள் ஆகியவை நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ள சம்பவங்களால் சித்தரிக்கப்படுகின்றன. ஐம்பது வயதுக்கு மேல் ஆன பிறகும் டூயட் பாடி ஆடும் கிளீஷேவை நாயகனின் மகனே விமர்சிக்கும் காட்சியுடன் படம் தொடங்கினாலும் இந்தப் படமும் கிளீஷேக்களில் ஆங்காங்கே சிக்கித் தவிக்கிறது.

கதாநாயகனின் கடைசி ஆசையான, உத்தமன் என்ற சினிமாக் கதை நடக்கும் காலம் எட்டாம் நூற்றாண்டு. எல்லாருமே மேடை நாடகம் போலச் சுத்தத் தமிழில் கதைப்பது ஒரு கட்டத்தில் நெளிய வைக்கிறது. அரண்மனை, பழைய கட்டடங்கள் அனைத்தும் கிராபிக்ஸாகக் கண் முன் இளிக்கின்றன. நாசர், ஞானசம்பந்தம், சண்முகராஜா செய்யும் சேட்டைகளும் பரிதாபமானவை. தெய்யம் எனும் பாரம்பரியக் கலையையும் அந்தக் காலகட்டத்தையும் விரிவாகச் சொல்வதாக நினைத்துக் கொண்டு பொறுமையைச் சோதிக்கின்றன இந்தக் காட்சிகள்.



நடிப்புத் திறனுக்கு வாய்ப்புள்ள கதையை ஆண்ட்ரியா, கே.பாலச்சந்தர், கே.விஸ்வநாத் ஊர்வசி, எம்.எஸ். பாஸ்கர், பூ பார்வதி அருமையாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஜெயராமை முழுமையாகப் பயன்படுத்தவில்லை. சில தருணங்கள் அபாரமாக அமைந்துள்ளன. கமல் அருகில் உட்கார்ந்து பேசும்போது பார்வதியின் உடல் மொழி அவரை விஸ்வருபமாகக் காட்டுகிறது. கடிதத்தைப் படிக்கும் காட்சியில் நெகிழ வைக்கிறார். அப்போது கமல் தன் முகத்தில் உள்ள ஒப்பனையைக் கலைக்கிறார். நடிகனின் ஒப்பனைக்குப் பின் உள்ள நிஜ முகம் வெளிப்படும் நேரத்தில் அவன் நிஜ வாழ்க்கையின் ஒரு பகுதியும் வெளிப்படும் தருணம் அழகாக உள்ளது.

கமல் தன் மகனை ஆற்றுப்படுத்தும் காட்சி கலங்க வைக்கிறது. தன் மகனும் தன் முன்னாள் காதலியின் மகளும் சகோதர உணர்வைப் பரிமாறிக்கொள்ளும்போது அந்த இடத்தை விட்டு வெளியேறிக் கண்ணாடிச் சன்னலின் வழியாக அவர்களைப் பார்க்கும்போது கமல் எனும் படைப்பாளி நிமிர்ந்து நிற்கிறார். எம்.எஸ். பாஸ்கர் தன் துயரத்தை வெளிப்படுத்தும் இடமும் தன் தவறை ஒப்புக் கொண்டு குமுறும் இடமும் மனதைத் தொடுகின்றன.கமல் என்னும் நடிகனைப் பற்றிப் புதிதாக என்ன சொல்ல? பெரும் துயரத்தைச் சுமந்த வாழ்வை அடங்கிய தொனியில் சித்தரிக்கிறார். தெய்யம் நடனத்தில் அவரது உழைப்பு பளிச்சிடுகிறது.



தன் காதலையும், துக்கத்தையும் கடைசிவரை வெளிப்படுத்த முடியாத கதாபாத்திரத்தில் நுட்பமான நடிப்பை அற்புதமாக வெளிப்படுத்தியிருக்கிறார் ஆண்ட்ரியா. ஆண்ட்ரியாவும் கமலும் பகிர்ந்துகொள்ளும் காட்சிகளும் கமலுக்கும் அவரது நெருங்கியவர்களுக்கும் இடையே நிகழும் உணர்ச்சிகரமான தருணங்களும் படத்தை உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன.

பூஜா குமார் அழகாக இருக்கிறார். படத்துக்கு வசீகரம் கூட்டுகிறார். ஆனால் 8ஆம் நூற்றாண்டு இளவரசி வேடத்தில் அவரது நடிப்பும் தோற்றமும் மிகவும் அந்நியமாக உள்ளன. கே. பாலசந்தரைப் பயன்படுத்தியிருக்கும் விதம் அந்தச் சாதனையாளருக்குப் பொருத்தமான காணிக்கை. ஜிப்ரானின் இசை நன்றாக அமைந்துள்ளது. குறிப்பாகப் பின்னணி இசை பல இடங்களில் உருக்குகிறது.



உத்தம வில்லன் கதையை அல்ல, கதைகளைச் சொல்கிறது. இறப்புக்கும், இருப்புக்கும் இடையேயான மோதலை சொல்ல எத்தனிக்கிறது. மனிதன் இறக்கலாம் கலைஞன் இறக்க மாட்டான் என்பதுதான் கமல் சொல்லியிருக்கும் செய்தி. ஆனால் கதைக்குள் மற்றொரு கதையாக எடுக்கப்படும் படத்தின் தன்மையும் நீளமும் தான் உத்தம வில்லனுக்கு இலேசான வில்லன். அதேசமயம், கிளைமாக்ஸில் பயன்படுத்தப்படும் காட்சி, இந்தப் படத்துடன் அழகாக இணைந்து கொள்கிறது. கமல் என்னும் நடிகரைத் தாண்டி, கமல் என்னும் எழுத்தாளர் வலுவாக வெளிப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுடனே...




அர்ச்சுணனின் நாகாசுரத்திலிருந்து பாயும் சுரங்களாய் ... உடலைப் பொசுக்கிக்கொண்டிருந்தது கதிரவனின் வெம்மை மல்லாக்கக் கிடந்த ஆறுமுகம் மெல்ல எழுந்து கொண்டார்.

"கனகு ...கனகு ..."

கனகுவிடமிருந்து பதிலெதுவும் இல்லை. பாயருகில் கிடந்த துவாய் துண்டை எடுத்து முகத்தை துடைத்துக் கொள்கிறார். இதுவரை மின்குமிழாய் ஒளிர்ந்துகொண்டிருந்த வியர்வைத் துளிகள் அத்தனையும் துவாயில் ஒட்டிக்கொண்டன. மீண்டும் ஒரு தடவை குரல் கொடுக்கிறார்.

"கனகு ... இஞ்சரப்பா கனகு எங்கையப்பா நிக்கிறாய்...?"

நான் இந்த மனுசியைக் கூப்பிடுற சத்தத்திற்கு பக்கத்து வீட்டுக்காரர்தான் "ஓய்" எண்ணப்போகுதுகள். தனக்குள்ளே புறுபுறுத்துக்கொண்டார் ஆறுமுகம்.

"ஓமப்பா வாறன் ..."

கனவின் குரல் கேட்டது.

என்னப்பா என்னத்துன்கு இப்ப ஒலம் வைக்கிறியள்.

சினந்து கொண்டாள் கனகு.

அனலாய் எரிந்துகொண்டிருக்கும் வெயிலையும் ஊடறுத்துவந்த கனகுவின் சினப்பு ஆறுமுகத்துக்கு கோபத்தை யூட்டினாலும், சமாளித்துக் கொண்டார். கனகுவின் மீது அவருக்கு அளவு கடந்த பாசம் இருந்தது.

"இந்த மனிசன் இப்படித்தான் அங்கால இங்கால அரங்க விடாது. ஏதோ காதல் ஜோடிகள்தானே...!"

மௌனமாகவே இருந்தார் ஆறுமுகம்.

"எங்கையப்பா போய்வாறாய் இப்ப?"

"ஒருடமுமில்லை. இவ பாக்கியமக்காவீட்டில இருந்தனான். அவவோட கதைச்சுக்கொண்டிருந்ததில நீங்கள் கூப்பிட்டது கேக்கேல்லையப்பா."

"நான் அப்பவும் நினைச்சனான் பாக்கியம் மாமியோடதான் அரசியல் வைக்கப்போட்டாயென்று. ம்ம்..ம்"

"இல்லையப்பா இந்தத் தறப்பாள் கொட்டிலுக்குள்ள எவ்வளவுக் கெண்டுதான் இருக்கிறது. அதில கொஞ்சம் மரங்களாவது நிக்குது. அதுதான் ..."

"... ஏதோ சமாளிச்சுப்போடுவாய் ..."

சில சமயங்களில் ஆறுமுகம் கண்டிப்புடன் நடந்து கொண்டாலும் அதிலும் ஒருவித அன்பையும் தன் மீதான கரிசனையையும் எப்போதும் உணர்ந்திருந்தாள் கனகு.

"அது சரி சமையலறையில சாப்பாடு குடுக்க வெளிக்கிட்டாச்சோ ...?"

பசியின் ஆற்றாமையால் வினவினார் ஆறுமுகம்.

"இல்லையப்பா மரக்கறி பிந்திப் போச்சுதாம் கொஞ்சம் செல்லுமாம்" என்றாள் கனகு.

"ம் ... என்ன செய்யிறது. அவங்கள் தரேக்கதானே சாப்பாடு. அதுவரைக்கும் வயிறு குடையக் குடைய இருக்கவேண்டியதுதான்"

சொந்த இடத்தில் சொந்த வீட்டில் நினைத்த நேரத்தில் உண்டு, குடித்து சந்தோசமாய் இருந்தவர்களுக்கு இவற்றையெல்லாம் சமாளிப்பதென்பது பாகற்காயாக கசந்தது. தறப்பாள் குடிலின் மூலையில கிடக்கும் மகளை நினைத்தால் ... அது ஒருபுறம் தாங்க முடியாத வேதனை ...

நாட்கள் எத்தனைதான் ஓடி மறைந்தாலும், அவர்கள் வாழ்வில் சூழ்ந்து கொண்ட இருள், மட்டும் ஏனோ விலகுதில்லை.

அது சாதாரண இருளில்லை ... வன்னி மக்கள் முழுப்பேர்களையும் சூழ்ந்த பேரிருள் அல்லவா ...!

"எங்கட இடத்துக்கு எங்களை விட்டால், ஏன் இந்தப்பாடு ... இவையளை சாப்பாடு தண்ணி நாங்கள் கேட்கவாபோறம்"

தன் மனதிலிருந்த எண்ணக்குமுறலை கொஞ்சம் கொஞ்சமாக கட்டவிழ்த்துவிட்டார் ஆறுமுகம்.

"என்னப்பா செய்யிறது ஏதோ உயிரைப்பாதுகாக்கவெண்டு இஞ்சை வந்தா ... இங்க அணுவணுவாய் உயிரைக் குடிக்கிறாங்கள் ..."

"இஞ்சரப்பா தண்ணிவாளியை விரிசையில அடுக்கீட்டுவாறன் இருங்கோ"

கூடாரத்தின் அருகில கிடந்த வாளிகள் இரண்டையும் எடுத்துக் கொண்டு குழாய்க்கிணறு நோக்கி நடந்தாள்.

மதியம் வாளிவைத்தால் கடைசி... மறுநாள் மதியமாவது கொஞ்சம் தண்ணீர் எடுக்கலாம்.

கிணத்தில தண்ணியள்ளி என்ன சௌந்தர்யமாய் குளிச்சம். இது இப்ப பத்து லீற்றர் தண்ணீயிலதொட்டு துடைக்க வேண்டியதாய்ப் போய்ச்சு ... எல்லாம் எங்கட விதியாய்ப் போய்ச்சு ... ம் ...

அவளது உள்ளக் குமுறல்கள் அவளை சுனாமி அலையாய் சுருட்டிப் போட்டது.

வன்னி நிலப்பரப்பை போர் ஆட்கொண்டதாலே மழைக்கு முளைக்கும் காளான்களாய் உதயமான முகாம்களில் ஒன்றுதான் மெனிக்பாம் முகாம். இங்குதான் ஆறுமுகமும் கனகுவும் சாதனாவும் ... இருந்தனர்.

காடுகளாய் கிடந்த நிலங்களை புல்டோசர் மூலமாக இடித்து தரைமட்டமாக்கி அதில அடுக்கடுக்காய் முளைத்துப்போன பல்லாயிரம் குடிசைகள் ... அவையாவும் சனக்கூட்டத்தால் நிரம்பி வழிந்துபோயிருந்தன. சில கூடாரங்களுக்கு அருகில் சின்னச் சின்ன மரங்கள் நின்றிருந்தன. ஆனாலும், அனேக வீடுகளுக்கு அருகில் நெருங்சி முட்செடிகூட இல்லை.

ஆறுமுகத்துக்கு இரண்டு பிள்ளைகள். போரின் பிடியில் மூத்தவன் மறைந்துபோக ...இளையவளுடன் முகாம் வந்து சேர்ந்தார்கள் ஆறுமுகமும் கனகுவும். அகள்தான் சாதனா. அவளிற்கும் வயது இருபத்தைந்து ஆகிவிட்டது. போரின் வடுவை அவளும் தாங்கியிருந்தாள்.

கால் ஒன்று இயங்க மறுத்து விட்டது. வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த சாதனா, போனவாரம் தான் முகாம் வந்து சேர்ந்தாள். எல்லா வேலையும் கனகுதான். என்ன செய்வது அவளும் வருத்தக்காரியாகி விட்டாள். யாரை யார் நோக?

"ம் ...சாப்பாடு குடுபடுது போல... பிந்தினால் அடிச்சோறுதான் கிடைக்கும். சமையலறை நோக்கி விரைந்தாள் கனகு"

தண்ணீர் எடுக்க வரிசை ..., சாப்பாடு எடுக்க வரிசை ..., சாமான் ஏதும் கொடுத்தால் அதற்கும் வரிசை ..., மலசலகூடம் போகக்கூட வரிசை தான். வரிசையில் நின்று [illegible] போய் [illegible] தான் விடுதலையில்லை.

வீட்டிலிருக்கையில் ஞாயிற்றுக் கிழமைகளில் அநேகமாக கனகு கூழ் வைப்பாள் பனம் பனுவலால் கூழ் அருந்தும்போது ... அப்பாப்பா ... எவ்வளவு சுவை ...தடிமன் காய்ச்சல் பறந்திடும். அவ்வளவு உறைப்பு. உடம்பும் இலேசாய்ப் போயிடும் ...

கூழைக்குடிச்சிட்டு மாமர நிழலிலே சோபாக்கட்டிலில ஒரு குட்டித்தூக்கம் போட்டால் ... அதைவிட ஆறுமுகத்துக்கு வேறொன்றும் வேண்டாம்.

காலையிலே எழுந்தவுடன் ஆறுமுகத்துக்கு தேநீர் கொடுப்பதுதான் கனகுவின் முதல் வேலையாய் இருக்கும். அதன் பிறகுதான் அடுத்த வேலை. சாதனாவும் வேளையாக எழுந்து கனகுவுடன் கூடமாட வேலை செய்வாள்.

ஆனால், இன்று கனகு தன்வேலைகளைச் செய்வதற்கே யாரையும் நம்பியிருக்க வேண்டிய காலமாகப் போயிற்று.

எடுத்துவந்த உணவை மூன்று கோப்பைகளில் போட்டு மூவரும் உண்டனர்.

"அம்மா எங்களை இவங்கள் எப்ப எங்கட ஊருக்கு விடப்போறாங்கள்? எத்தினை நாளைக்குத்தான் இந்த பருப்பையும் , லீக்சையும் சாப்பிடுறது?"

சாதனாவுக்குள் அடங்கியிருக்கும் குமுறல்கள் இப்படித்தான் இடையிடையே வெளிப்படும்.

"யார்தான் பிள்ளை இதுகளைக் கேக்கினம் ... விடுறநேரம் ... கண்டு கொள்ளவேண்டியதுதான் ..."

மகளைச் சற்று ஆறுதல் படுத்தினாள் கனகு.

ஒரு நாள் ...!

முகாமிலிருந்த பல இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டனர்! சந்தேகத்தின் பேரில் கைதாம்! இவர்களில் சாதனாவும் ஒருத்தி ...!

... விசாரிச்சுப்போட்டு விடுவம் ... என்று கொண்டுசெல்லப்பட்டவர்கள் ஒன்றரை மாதமாகியும் விடப்படவில்லை.

மகளை யோசித்துயோசித்து கனகுவும் ஆறுமுகமும் இன்னும் வருத்தக்காரராகிவிட்டனர். நாட்கள் வேகமாக ஓடி மறைந்தன.

"இஞ்சரப்பா, நாளையான் பேப்பரிலே, பிடிச்ச பிள்ளையளிட பேர் விபரம் வருதாம்.

எந்நெந்த இராணுவ முகாமில் பிள்ளையள் இருக்கினம் என்று அதில போடுப்படுமாம்"

"ஆரப்பா உனக்கு சொன்னது?"

ஆவலுடன் கேட்டார் ஆறுமுகம்.

"பரஞ்சோதி அண்ணர்தான் சொன்னவர்" என்றாள் கனகு.

ஆறுமுகத்தாருக்கு போன உயிர் மீண்டதுபோலிருந்தது.

பொத்திப்பொத்தி வளர்த்தன் ஒரேயொரு பொம்பிளைப் பிள்ளையென்று. அதுக்கு ஏமொன்றெண் டால் ... பிறகேன் நான்..! கடவுளே என்ரை பிள்ளைக்கு ஒன்றுமே நடக்கக் கூடாது..!

"நீங்கள் ஒன்டுக்கும் யோசிக்காதையுங்கோ அவளுக்கொண்டும் நடக்காது"

ஆறுமுகத்தாரின் கண்கள் குளமாகின. உதடுகள் ஏதோ பேச உன்னியது. ஆனாலும் வார்த்தைகள் வெ[illegible] வர மறுத்தன.

கனகுவுக்கும் கண்கள் குளமாகி மௌனித்துவிட்டாள்.

பிள்ளைகளுக்கு நடந்த சம்பவங்கள் கண்ணில் நிழலாட என்றும் போல் அமைதியற்ற நாளாக ... அன்றைய நாளும் கழிந்தது.

விடிந்ததும் அதிகாலையிலேயே எழுந்துவிட்ட ஆறுமுகம் பரபரப்புடனிருந்தார்.

எத்தனை எத்தனை பெற்றோர்கள் ஆவலுடன் இருந்தனர் பத்திரிகையைப் புரட்டுவதற்காக ...

அவர்களில் ஒருவராய் ஆறுமுகமும் இருந்தார்.

ஆறுமுகத்தாரின் கைகளில் பத்திரிகை கிட்டியது. விபரம் வந்திருந்த பக்கத்தை ஆவலுடன் புரட்டினார். நீண்டு விரிந்து கிடந்த அந்த பட்டியலில் இருந்த ஒவ்வொரு பெயர்களையும் ஆறுமுகத்தின் கண்கள் வாசித்தன... விரல்களினால் தொட்டுக் கொண்டு தேடினார் ... ஆ ..., சா ..., என்ற எழுத்துக்களில் தொடங்கும் வரி களை மிகவும் கவனமாக வாசித்தார் ...! ஒன்று விடாமல் வாசித்தார். ஆனால், அவரதுபிள்ளையின் பெய ரான ... *சாதானா* ... அதைக் காணவில்லை. உடலில்பதற்றம் தென்பட்டது. ஆயினும் இன்னொரு முறை மீண்டும் எல்லாப் பெயர் களையும் வாசித்தார். அங்கே கடை சியில் போடப்பட்டிருந்தது ஒரு குறிப்பு, *மேலே குறிப்பிடப்பட்ட பெயர்களைத் தவிர வேறு எவரும் எம்மால் கைது செய்யப்படவில்லை.*

இதை வாசித்ததும் அவர் நிலை குலைந்தார்.

"அப்ப என்ர பிள்ளை...? என்ர பிள்ளை ...! என்ர பிள்ளைக்கு என்ன நடந்தது ...!" நிற்க முடியாமல் கீழே விழுந்தார்.

கனகுவுக்கும் விடயம் தெரிந்தது ...

அவள் கதறியவாறு அவ்விடத்தை நோக்கி ஓடிவந்துகொண்டிருந்தாள் ...

பிள்ளை மீளவில்லை. ஆனால், அம்புலன்ஸ் வண்டி மட்டும் வேகமாக வந்து நின்றது. அந்த அநாதைகளை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவதற்காக ...

மல்லாவிக்கஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook

# ரைவர்

ஒரு நாள் கார் ரைவர் தன் வண்டியை எடுத்து கொண்டு வேலைக்கு கிளம்பினார். சிறிது தூரம் சென்றதும் அவர் கார் டயர் பஞ்சர் ஆகிவிட்டது.

அவர் வண்டி பஞ்சர் ஆன இடம் ஒரு மனநல மருத்துவ மனை அருகில். சுற்றும் முற்றும் ஏதாவது மெக்கானிக் கடை இருக் கிறதா என்று பார்த்தார். எதுவும் இல்லாததால் அவரே கழட்டி ஸ்டெப்னி மாத்தலாம் என்று முடிவெடுத்து போல்ட்டை கழட்ட ஆரம்பித்தார்.

4 போல்ட்டையும் கழட்டி வைத்துவிட்டு ஸ்டெப்னி எடுத்து வர சென்றார். ஸ்டெப்னி எடுத்து வரும்போது அவர் கால் இடறி 4 போல்ட்டில் பட்டதால் அருகில் இருந்த கால்வாயில் விழுந்துவிட் டது.

எப்படி எடுக்கலாம் என்று யோசித்து கொண்டு இருந்தார். அப்போது ஏதாவது பிரச்சினையா ரைவர் என்று ஒருவர் கேட்டார். அவரை பார்த்த ரைவர் மனநல மருத்துவமனையின் நோயாளி இவர், எப்படியாவது இவரை சாக்கடையில் இறக்கி போல்ட்டை எடுத்துவிடவேண்டும் என்று முடிவெடுத்து நடந்த கதையை அவரிடம் கூறினார்.

உடனே அந்த நபர் மற்ற மூன்று சக்கரங்களில் இருந்து தலா ஒரு போல்ட் கழட்டி இந்த சக்கரத்தை மாட்டி, ஓட்டிச் சென்று, அருகில் உள்ள மெக்கானிக் கடையில் 4 போல்ட்டுகள் வாங்கி எல்லா சக்கரத்திலும் மாட்டி கொள் என்று சொன்னார்.

இவ்வளவு தெளிவா இருக்கு றீங்க நீங்க எப்படி இந்த மருத்துவ மனையில் என்று கேட்டார்.

இந்த மருத்துவமனையில் இருக்கிற எல்லாரும் முட்டாளும் இல்லை வெளியில் சுத்தற எல்லா ரும் புத்திசாலியும் இல்லை என்றார்.

எப்பவுமே ஒருவன் தோற றத்தை வைத்து எதையும் முடிவு செய்யாதீர்கள்...!

# முதல் மனிதன்



ஒரு பையனுக்கு ரொம்ப நாளா சந்தேகம்.
முதல் மனுசன் எப்படி வந்தான்? அப்படின்னு.
அவன் அவனோட அப்பா கிட்டே போய், அப்பா, முதல் மனுசன் எப்படி தோணினான்.
அப்படின்னு கேட்டான். அதுக்கு அவர் சொல்றாரு, நாமெல்லாம் ஆதாம் ஏவாள் மூலமா உலகுக்கு வந்தவங்க. அப்படின்னு பதில் சொல்றார்.
இருந்தாலும் பையனுக்கு குழப்பம் இன்னும் தீரலை.
அவனோட அம்மாகிட்டே போய் கேட்குறான்.
அதுக்கு அவங்க சொல்றாங்க, நாமெல்லாம் குரங்கிலிருந்து வந்தவங்க அப்படின்னு.
இப்போ இன்னும் குழப்பமாயிடுச்சி பையனுக்கு. ரொம்ப யோசனையா உட்கார்ந்து இருக்கான்.
அதை பார்த்து அவங்க அப்பா, என்னடா சந்தேகம் இன்னும் தீரலையான்னு கேட்குறார்.
அந்த பையன் அவங்க அம்மா சொன்னதை சொல்றான்.
அப்பா உடனே சொல்றாரு, ரெண்டுமே கரெக்ட் தான்டா. நான் எங்க வம் சாவளியை சொன்னேன். உங்கம்மா அவ வம்சாவளியை சொல்லி இருக்கா அப்படின்னு.
பையன் இப்போ ரொம்ப தெளிவாயிட்டான்.
அப்பாவை
கேட்டான், என்னப்பா ராத்திரி சாப்பாடு உங்களுக்கு வெளி யிலையா?

# நல்ல பையன்

ஆசிரியர்: ஏன்டா... இன்னிக்கும் ஹோம் வொர்க் செய்யலையா?

மாணவன்: கரண்ட்டு இல்ல சார்....

ஆசிரியர்: வெளக்கு, மெழுகு வர்த்தி ஏத்தி வச்சுக்கிட்டு செய்திருக்கலாம்ல?

மாணவன்: ஆமா சார்... முயற்சி பண்ணினேன்... ஆனா தீப் பெட்டிய எடுக்க முடியலை....

ஆசிரியர்: ஏன்?

மாணவன்: அது பூஜை ரூமுல இருந்தது....

ஆசிரியர்: உள்ள போயி எடுத்திருக்கலாம்ல?

மாணவன்: இல்ல சார்.... குளிக கலல்ல.... எப்பிடிப் போறது?

ஆசிரியர்: குளிக்கலையா....ஏன்?

மாணவன்: மேல் தொட்டியில தண்ணியில்ல....


ஆசிரியர்: மோட்டார் போட்டு ஏத்த வேண்டியது தானடா?... சோம்பேறி...

மாணவன்: சார் , லூசு மாதிரிப் பேசாதீங்க... அதான் மோதல் பதில்லையே சொன்னேனுல்ல கரண்டு இல்லன்னு....

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 366

Search for people, places and things
Nagendram Home

இராசரத்தினம்றஜி றஜி




சங்கர் ஜில்லா





லக்சி மோகன்




தமிழ்மதி மானஷா




நிஷா விஸ்வா




கியாஸ் மொகமட்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரிதாபத்தில் பஞ்சாப்

**09 ஆம் திகதிக்கு முன்னைய கள நிலவரப்படி**

தற்பொழுது அனைவரது வீட்டிலும் சிறப்பாக களை கட்டியிருப்பது ஐ.பி.எல். திருவிழா.

உலக கிரிக்கெட் அரங்கிலே இந்தியாவின் ஐ.பி.எல்லுக்கு என்று ஒரு தனி மரியாதை காணப்படுகின்றது. உலக அளவில் உள்ள விளையாட்டுக்களில் இந்தியாவின் ஐ.பி.எல். தனக்கென ஒரு இடத்தினை பிடித்துக் கொண்டுள்ளது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.பி.எல்.தற்பொழுது பிளே ஓப் சுற்றினை நெருங்கியுள்ளது.

சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் ஆகிய அணி புள்ளிப்பட்டியலில் முன்னோக்கி நின்றாலும் பிரித்தி ஜிந்தாவின் கிங்ஸ் லெலன் பஞ்சாப் அணியின் நிலைமை மிகவும் மோசமாகவே உள்ளது. கடந்த வருட ஐ.பி.எல். இல் போட்டியில் இறுதி ஆட்டம் வரை முன்னேறி இருந்த கிங்ஸ் லெலன் பஞ்சாப் அணி இம் முறை மிகவும் மோசமான நிலையிலுள்ளது.

அந்த அணி இதுவரைக்கும் விளையாடிய 9 ஆட்டத்தில் 2 போட்டியில் மட்டுமே (மும்பை, ராஜஸ்தான்) வெற்றி பெற்றது. ஏணைய 7 போட்டியிலும் (ராஜஸ்தான், டெல்லி (2), கொல்கத்தா, சென்னை, ஐதராபாத், மும்பை) தோல்வி அடைந்துள்ளது. கடந்த வருடம் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்காக கலக்கிய வெளிநாட்டு வீரர்கள் நடப்புஆண்டுத் தொடரில் சோபிக்க தவறியுள்ளனர்.

குறிப்பாக அவுஸ்திரேலியாவின் அதிரடி வீரர் மக்ஸ்வெல், தென்னாபிரிக்காவின் டேவிட் மில்லர், கப்டன் பெய்லி ஆகியோர் துடுப்பாட்டத்தில் சோபிக்காதது பஞ்சாப் அணிக்கு பெரும் பின்னடைவு தான். அதேநேரம் அவுஸ்திரேலியாவின் வேகப்புயல் மிச் சேல் ஜோன்சன் ஆகியோரின் பந்து வீச்சு நடப்பு ஐ.பி.எல்.தொடரில் எடுபடாது கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கு பெரும்பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

அதேநேரம் பஞ்சாப் அணியின் ஆரம்ப துடுப்பாட்டமும் நடப்பு ஐ.பி.எல். தொடரில் பெரிதாக சோபிக்கவில்லை.

குறிப்பாக இந்தியாவின் சேவாக், முரளி விஜய் ஆகியோரின் ஆரம்ப துடுப்பாட்டம் சொல்லுமளவில் அமையவில்லை என்று தான் கூற வேண்டும்.

> **கண்ணுக்கு விருந்தாகும் பிரித்தி ஜிந்தாவின் புன்னகையை காண்பதற்கே பஞ்சாப் அணியினர் இனிவரும் போட்டியில் வெற்றி பெற வேண்டும்**

ஹிந்தி நடிகை பிரித்தி ஜிந்தா கிங்ஸ் லெலன் பஞ்சாப் அணியின் உரிமையாளர்களில் ஒருவராவார்.

கிரிக்கெட்டில் கலாதிபிரியம் கொண்ட இவர் ஐ.பி.எல். தொடங்கியது முதல் பஞ்சாப் அணிவிளையாடும் அனைத்து போட்டியினையும் காண அரங் கில் பிரவேசித்திருப்பார். இவரின் இனிமையான புன்னகை ரசிகர்களுக்கு பெரும் விருந்தாக அமையும்.

பஞ்சாப் அணியினை எப்போதும் உற்சாகப்படுத்திக் கொண்டே இருப்பார்.

நடப்பு ஐ.பி.எல். தொடரில் கூட பஞ்சாப் அணி விளை யாடிய முதல் ஒரு சில போட்டிகளை காண பிரித்தி ஜிந்தா வந்திருந் தார். ஆனால் பிறகு நடைபெற்ற போட்டியை காண பிரித்தி ஜிந்தா வரவில்லை.

பஞ்சாப் அணியின் தொடர் தோல்வியால் பிரித்தி ஜிந்தா




வரவில்லை யாயினும் படநடிப்பில் கவனம் செலுத்தவே போட்டியை தாம் காண வரவில்லை என அவர் தெரிவித்திருந்தார்.

இது மட்டுமல்லாது பஞ்சாப் அணியின் மோச மான செயற்பாட்டிற்கு ரசிகர்களிடம் டுவிட்டர் வலைதளம் மூலம் மன்னிப்பும் கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில் பஞ்சாப் அணிநிர்வாகம் வெளிநாட்டு வீரர்களை திருப்பி அனுப்பும் பணியில் களமிறங்கி இருப்பதாக தகவல் கள் வெளியாகியுள்ளன.

ஐ.பி.எல். வீரர்கள் ஒப்பந்த விதிப்படி 14 ஆட்டத்திலும் வெளி நாட்டு வீரர்கள் ஆட வேண்டிய கட்டாயம் இல்லை. இதனால் அவர்களை திருப்பி அனுப்புவதன் மூலம் 20 சதவீத கட்டணத்தை கழித்து கொள்ளலாம்.

பஞ்சாப் அணியில் அணித்தலைவர் பெய்லி, மக்ஸ்வெல், மில்லர், மிட்செல், ஜோன்சன், ஷான் மார்ஷ், ஹென்டிரிக்ஸ், பெரேரா ஆகிய வெளிநாட்டு வீரர்கள் உள்ளனர். இந்த 7 வீரர்களுக்கான மொத்த செலவு 33.85 கோடி ரூபாய்களும் இந்த 7 பேரையும் தற்போது திருப்பி அனுப்புவதன் மூலம் 5 கோடி ரூபா மிச்சப்படுத்த முடியும்.

ரூபா 12 1/2 கோடிக்கு தக்க வைக்கப்பட்டுள்ள மில்லர், 6 கோடிக்கான மக்ஸ்வெல் போன்ற அதிரடி வீரர்கள் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. பஞ்சாப் அணியில் உள்ள வெளிநாட்டு வீரர்கள் சிறப்பாக விளையாடாததே தோல்விக்கு காரணமாக கருதப்படுகிறது. எனவே தான் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிகிறது.

கோடிக்கணக்கான பணம் புரளும் ஐ.பி.எல். தொடரில் ஹிந்தி நடிகை பிரித்தி ஜிந்தாவின் முகத்தில் புன்னகையை பார்ப்பதற்காவது பஞ்சாப் அணியினர் இனிவரும் ஆட்டங்களிலாவது சிறப்பாக விளையாடி வெற்றி பெற வேண்டும்.

(க.மதிசன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org